விலை ரூபா 20.00


தடைகளைத் தளர்த்த முடிவு
பக்கம் 09


தூத்துக்குடியில் அணிவகுப்பு
பக்கம் 11


நாட்டில் தன்னிறைவு வேண்டும்
பக்கம் 13


தப்புமா இலங்கை
பக்கம் 23

பக்கங்கள்: 36

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 133

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 25 சனிக்கிழமை (07/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## இலங்கையர் மூவர் இத்தாலியில் கைது

இத்தாலியில் வசித்துவரும் கண்டியைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் தங்களுக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டதால் அவர்களை இத்தாலிய பொலிஸார் கைது செய்துள்ளனர். ஒரே வீட்டில் வசித்துவந்த கண்டியைச் சேர்ந்த சகோதரர்களான ஆர்.ஏ.சஞ்ஜீவ, ஆர்.ஏ.நிசந்த மற்றும் ஆர்.ஏ.சங்க ஆகியோரே மோதிக்கொண்டவர்களாவர். நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். அயலவர்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு விரைந்துசென்ற பொலிஸார் அவர்களில் இருவரைக் கைதுசெய்தனர் என்றும் ஒருவரை வைத்தியசாலையில் சேர்த்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை வங்கி இன்று திறக்காது

இலங்கை வங்கிக் கிளைகள் அனைத்தும் தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறுவதால் இன்று திறக்கப்படமாட்டாது என இலங்கை வங்கியின் வடமாகாண பிராந்திய கிளையினர் அறிவித்துள்ளனர். சித்திரைப் புத்தாண்டையொட்டி இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் வங்கிகள் வாடிக்கையாளரின் சேவைக்காகத் திறந்திருக்கும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் வங்கிக் கிளைகள் திறந்திருக்கமாட்டாது என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

## வடக்கு – கிழக்கில் புலிகள் இல்லை

வடக்கு மற்றும் கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் காணப்படுவதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. உள்ளார்ந்த பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து பொறிமுறைகளையும் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. வெளியான செய்திகளுக்கு ஆதாரமில்லை "கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செய்திகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எவ்வாறாயினும் இராணுவம் உஷார் நிலையில் செயற்படுவதுடன் பொலிஸாருக்கு உதவும் நோக்கில் பல விடயங்களையும் மேற்கொள்கின்றோம்" என்று இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

## சீனப் பிரஜையின் சடலம் மீட்பு

மிரிஸ்ஸ கடற்பகுதியில் புதன்கிழமை மூழ்கியதாக கருதப்படும் சீனப் பிரஜை ஒருவரின் சடலம் மிரிஸ்ஸ கடற்கரையிலிருந்து 7 கடல் மைல் தொலைவில் மீட்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் திமிங்கிலங்களை பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று இச்சடலத்தை கண்டுபிடித்தது. சுழியோடியான மேற்படி சீனப்பிரஜை தனது சகாக்கள் மூவருடன் கடலில் நீராடச் சென்றபோது கடலில் அடித்துச செல்லப்பட்டார்.



# பிரபாகரன் நாமம் இன்னும் 3,000 ஆண்டுகள் வாழும்

### விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 7

"தாய்நாட்டு வளங்களை விற்பனைசெய்து பிழைப்பு நடத்தும் ஜனாதிபதி மஹிந்தவுடன் ஒப்பிடுகையில் தாய்மண் மீது வேலுப்பிள்ளை பிரபாகரன் அதிக பற்றைக் கொண்டிருந்தார். பிரபாகரன் என்ற நாமம் இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு வரலாற்றில் வாழும். அதனை எவராலும் அழித்துவிட முடியாது" இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை -கல்கிசை மாநகர சபை உறுப் 04

# கிழக்கு மாகாண சபையை கலைக்க அரசு தீர்மானம்

### வடக்குக்கு இப்போதைக்கு தேர்தல் இல்லை

கொழும்பு, ஏப்ரல் 7

கிழக்கு மாகாணசபையைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலொன்றுக்குச் செல்ல அரசு தீர்மானித்திருக்கிறது. அதேசமயம், வடக்குக்கான மாகாணத் தேர்தலை இப்போதைக்கு நடத்துவதில்லை என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது.

கிழக்கு மாகாணசபையின் ஆயுட்காலம் அடுத்தவருடம் மே மாதத்தில் முடிவடையவுள்ளது. இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது மூத்த அமைச்சர்கள் சிலருடன் ஆலோசனை நடத்தியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கிழக்கு மாகாணசபையை உடனடியாகக் கலைத்துவிட்டு தேர்தலொன்றுக்குச் செல்வதற்கு முடிவெடுத்திருக்கிறார் என்று அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் கிழக்கில் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் கிழக்கின் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன்ஜனாதிபதிராஜபக்ஷ முக்கிய பேச்சுகளை நடத்துவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வடக்கு மாகாணசபைத் தேர்தலை இப்போதைக்குநடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ள அதேசமயம், கிழக்கு மாகாணசபைத் தேர்தல்நடந்து முடிந்தபின்னர் அதன் 04

### மட்டக்களப்பில் வெறியாட்டு: சிலைகள் உடைப்பு



காந்தி, பேடன்பவல், விபுலானந்தர், புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகள் மட்டக்களப்பில் இரவோடிரவாக உடைக்கப்பட்டுள்ளன.

(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## இலங்கை மீது எந்நேரமும் பொருளாதாரத் தடை வரலாம்

### தேசப்பற்று இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.7

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத்தடை விதிப்பதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையும் அமெரிக்கா பலப்படுத்தி வருகின்றது; தடை எந்நேரமும் வரலாம் என முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

"வல்லரசு நாடான அமெரிக்காவின் செயற்பாடுகளை எம்மால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. மக்கள் அரசுடன் இருக்கும்வரை அந்த நாட்டால் எமது தேசத்தை இரண்டாகப் பிரிக்க முடியாது. மக்கள் 04

## ஜெனிவா கூட்டத் தொடர் அடுத்தமுறையும் வரும்

### அரசை எச்சரிக்கிறார் சுரேஷ்

கொழும்பு, ஏப்.7

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது. அடுத்த தடவையும் ஜெனிவா மாநாடு உள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு அது செயற்படவேண்டும் 04

## பழைய, புதிய அகதிகள் என்று எவரும் இல்லை

கொழும்பு, ஏப்.7

அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட அகதிகள் தொடர்பான யோசனையொன்று ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய உடன் மாற்றம் செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப் 04

## தொண்டுப் பணியாளர் படுகொலை விசாரிக்கக் கோருகிறது பிரான்ஸ்


கொழும்பு,ஏப் 07

'அக் ஷன் பெய்ம்' என்ற பிரான்ஸ் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலைச் சம்பவம் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை ஆரம்பிக்கப் பிரான்ஸ் தூதரகம் முனைப்புக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டு மூதூரில் இந்தத் தொண்டு நிறுவனத்தின் 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மீண்டும் ஆரம்பிக்கப் பிரான்ஸ் தூதரகம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. விசாரணைகள் தொடர்பில் பிரான்ஸ் 04

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட



SINGER POWER ஜெனரேட்டர்கள்

இன்றே விரையுங்கள்.

Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
OHV 2.4/3600RPM


கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 0774685771
சங்கானை 077 2208232
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
சுன்னாகம். 021 224 0555
மானிப்பாய். 021 225 5343
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
நெல்லியடி. 021 226 4937
சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி, விபுலானந்தர் சிலைகள் உடைப்பு

## மட்டக்களப்பு நகரில் இரவு நேரம் வெறியாட்டம்









மட்டக்களப்பு, ஏப். 7

மட்டக்களப்பில் நேற்று அதிகாலை வரலாற்றுத் தலைவர்கள் நால்வரின் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயல்களினால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். மட்டக்களப்பு நகரில் நிறுவப்பட்டிருந்த அஹிம்சைவாதி மகாத்மா காந்தி, சாரணியத்தின் தந்தை பேடன் பவல் ஆகியோரின் சிலைகளும், மட்டக்களப்பு ஆனைப்பந்தி வித்தியாலயத்திலுள்ள முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகளும் உடைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரில் மிக நீண்டகாலமாக இருந்த மகாத்மா காந்தி, பேடன் பவல் ஆகியோரின் சிலைகள் ஒவ்வொன்றும் இருபது மீற்றருக்குள் அமையப்பெற்றுள்ளன.

இந்தச் சிலைகள் இரண்டும் கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டு தலைப்பகுதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பின் கடந்த காலங்களில் அகிம்சை போராட்டங்களின் முக்கிய இடமாக காந்தி சிலை அமைந்திருந்த இடம் திகழ்ந்து வந்தது. காந்தி சதுக்கம் என அப்பகுதி அழைக்கப்பட்டு வருகிறது. இந்த சிலை 1960 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்று மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

அதேவேளை, மட்டக்களப்பு ஆனைப்பந்தி வித்தியாலயத்தில் நிறுவப்பட்டிருந்த சுவாமி விபுலானந்தர் சிலையினதும், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் நிறுவப்பட்டிருந்த புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை சிலையினதும் தலைப்பகுதிகள் தாக்கப்பட்டு கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிப்பதற்காகக் குறித்த பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிலைகள் உடைக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் லால் பெரேரா இந்தச் சம்பவங்கள் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன். செல்வராசா, சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரெட்ணம், பூ.பிரசாந்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நகர அமைப்பாளர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் சிலைகள் உடைக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அடாவடிச் செயல்களைப் பார்வையிட்டதுடன், கடும் கண்டனமும் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தின் பிரதான வீதியில் நிறுவப்பட்ட சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை சிலரால் உடைக்கப்பட்டது. இந்தச் சிலை மீண்டும் அதே இடத்தில் கடந்த புதன் கிழமையே புதிதாக நிறுவப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிலை உடைப்புச் சம்பவங்களினால் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். குறிப்பாக தமிழ்மக்கள், இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயல் குறித்து கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவின் இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளித்த நிலையில் காந்தியின் சிலை உடைக்கப்பட்டுள்ளமை கவனத்துக்கு உரியது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். மட்டக்களப்பு நகரின் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வரும் காந்தியின் சிலையும், பேடன் பவலின் சிலையும் உடைக்கப்பட்டமை தமிழ் மக்களை மிகவும் வேதனைப்படுத்தியுள்ளது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

"இந்திய நாட்டுக்கு விடுதலையை அகிம்சை ரீதியாகப் பெற்றுக்கொடுத்த ஒரு மகான் மகாத்மா காந்தி, அதே போன்று சேவை மனப்பாங்கை உலகுக்கு அறிமுகம் செய்த பெருமகன் பேடன் பவல். இவர்களின் சிலைகள் உடைக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

இந்தச் செயற்பாட்டை புரிந்தவர்களைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டிய கடமை அரசுக்கும் பொலிஸாருக்கும் உண்டு"- என்றார்.

சிலைகள் உடைக்கப்பட்டமை தனக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

"இதை யார் செய்தார்கள் என்று தெரியவில்லை. பெரியார்களின் இரண்டு சிலைகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 250 மீற்றர் தூரத்தில்தான் அமைந்திருக்கின்றன. அப்படியிருந்தும் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இரவு நேரங்களில் பொலிஸ் ரோந்து இருக்கின்ற போதும் எப்படிச் சிலைகள் உடைக்கப்பட்டன?" என அவர் கேள்வி எழுப்பினார். (ச-31)

### வற்றாப்பளையில் சீர்காழியின் மகனின் இன்னிசைக் கச்சேரி

முல்லைத்தீவு,ஏப்.7

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் புகழ்பெற்ற பாடகர் சீர்காழி கோவிந்தராஜனின் மகன் ஜி. சிவசிதம்பரத்தின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை இரவு 7.45 மணி முதல் இந்த இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் மஞ்சத் திருவிழாவை முன்னிட்டு இரவு விசேட நிகழ்ச்சியாக இந்த இன்னிசைக் கச்சேரி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த நிகழ்ச்சியில் பங்குபெறும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமை இங்கு வரும் சிவசிதம்பரம் அடுத்த நாளே நாடு திரும்புகின்றார்.

வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தின் மீது பெரும் பக்தியுடைய சிவசிதம்பரம் வீரமணி ஐயரால் கண்ணகியம்மன் மீது பாடப்பட்ட பாடல்களையும் இசைக்கவுள்ளார்.

இந்தக் கச்சேரி நிகழ்வு தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது. இதில் போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தத் தகவல்களை ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.குகதாசன் தெரிவித்துள்ளார். (க)

### மருத்துவ சேவை

ஒலுமடு கிராம சேவகர் பிரிவில் நடமாடும் மருத்துவ சேவையொன்று ஒலுமடு பாடசாலையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றுள்ளது. இதில் நோயாளிகளுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டதோடு, அப்பகுதி மக்களுக்கு நுளம்பு வலைகளும் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்டன. (க-435)

### வவுனியாவில் அமைக்கப்பட்ட சிறுவர் நேயப் பாடசாலைகள்

வவுனியா,ஏப்.7

வவுனியாவில் 45 சிறுவர் நேயப் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு சிறுவர்களுக்கான விளையாட்டு வசதியுடன் கூடிய பூங்கா, கவர்ச்சியான கற்றல் முறைமை, அழகியல் கலைகளுடன் இணைந்த கற்கை முறைமைகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்கு வரும் சிறுவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் கற்றல் வசதிகளையும், சுகாதார மேம்பாட்டு உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இதற்கென அந்த நிறுவனம் ஒரு லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் வளநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சின்னையா தெரிவித்தார். இவை அமைவதால் சிறுவர்களின் கற்கை முறைமைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. (க-402)

### யானை தாக்கி விவசாயி சாவு

அம்பாறை,ஏப்.7

அம்பாறை, கஞ்சிக்குடிச்சாறு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணபிள்ளை விநாயகமூர்த்தி என்பவரே உயிரிழந்தவராவார். வயலில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இந்த நபரை யானை தாக்கியுள்ளது.

சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் விசாரிக்கின்றனர்.(ச)

## நெடுங்கேணி மக்களை பந்தாடியது கடும் காற்று

### கூரைகள் பறந்தன; நெல்மூடைகள் நனைந்தன

நெடுங்கேணி, ஏப். 7.

நெடுங்கேணியில் கடந்த புதன் கிழமை பிற்பகல் வீசிய கடும் காற்று, கடும் மழை காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்தனர். நிரந்தர வீடுகள் அற்ற மக்களின் குடிசைகள் இந்தக் காற்றினால் தூக்கி வீசப்பட்டன.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி முதிரம்பட்டி, ஒலுமடு, கீரிசுட்டான், கற்குளம், பத்திரபிரிந்தகுளம் போன்ற பிரதேசங்களில் பிற்பகல் 5.35 மணியளவில் திடீரென மழையுடன்கூடிய கடும் காற்று வீசியது. அப்பகுதியில் வசிக்கும் மீளக்குடியமர்ந்த மக்கள் இதனால் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீடுகளின் ஓடுகள், தகரங்கள், கூரைகள் என்பன காற்றினால் பிடுங்கியெறியப்பட்டன. ஏ.எஸ்.பி. நிறுவனத்தால் கட்டிமுடிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளும் சேதங்களுக்கு உள்ளானதுடன் அவற்றின் கூரை ஓடுகள் காற்றினால் தூக்கிவீசப்பட்டன.

மக்கள் நனைந்தபடியே இரவுப் பொழுதைக் கழித்தனர். அவர்கள் சேகரித்து வைத்திருந்த நெல்மூடைகளும் நீரில் நனைந்து நாசமாகின.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கையில் அப்பகுதிப் பிரதேச செயலர் க.பரந்தாமன் ஈடுபட்டுள்ளார். முதற்கட்டமாக இப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தற்காலிகமாக கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.(உ-15-435)

### மூதூர்-யாழ்ப்பாணம் பஸ்சேவை ஆரம்பம்

திருகோணமலை,ஏப்.7

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை முன்னிட்டு, இலங்கை போக்குவரத்துச் சபையின் மூதூர் - யாழ்ப்பாணம் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிழக்குப் பிராந்திய போக்குவரத்து சபையின் செயலாற்று முகாமையாளர் செ. கனகசுந்தரம் தெரிவித்தார்.

மூதூர் - யாழ்ப்பாணம் பஸ் சேவையானது தினமும் காலை 6 மணிக்கு மூதூர் பஸ் நிலையத்திலிருந்தும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்தும் நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இறப்புப் பிறப்புப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஏப். 7

யாழ். பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் விநியோகிக்கும் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டன.

செயலக பதிவாளர் அலுவலகத்தில் இரண்டு போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள் திடீரென பழுதடைந்ததால் இந்தப் பிறப்பு, இறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கும் பணிகள் உடனே மட்டுப்படுத்தப்பட்டன.

அவசர தேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கே உடனடியாகப் பிறப்பு, இறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**பொதுச் சபைக் கூட்டம்**

பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் முற்பகல் 10மணிக்கு சங்கத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் ச.சர்வானந்தனும் கலந்துகொள்வர். (ம-130)

**பரிசளிப்பு விழா**

சங்கானைக் கல்விக்கோட்டத்தின் ஏற்பாட்டில் சைத்திரு முறை விழாவும் சைவநெறித் தொண்டுபடு செயல் நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் காலை 8மணிக்கு யாழ். அராலி இந்துக் கல்லூரியில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் து. எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-13)

**பிற்போடப்பட்டது**

யாழ்ப்பாணம், ஏப்.7

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நடத்தும் தொழிற் சங்கப் போராட்டம் காரணமாக நாளை ஊர்காவற்றுறையில் திறக்கப்படவிருந்த இலங்கை வங்கியின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. (ம-14)

**அறிமுக விழா**

சுன்னாகம் பொது நூலகத்தின் உள்ளூராட்சி மறுசீரமைப்புத் திட்டத்தின் மகுடம் சஞ்சிகை அறிமுக விழா பிற்பகல் 3 மணிக்கு நூலகத்தில், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-14)

**விவேகானந்தர் பிறந்த தினம்**

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தின விழா பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி இளம் தொண்டர் சபை அறநெறி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**சுகாதாரதினம்**

உலக சுகாதார தினமும் புத்தாண்டு விழாவும் காலை 9.30 மணிக்கு கோண்டாவில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன. நல்லூர் பிரதேச சபை உபதலைவர் திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி சுஜிதா சிவதாஸ் கலந்துகொள்வார். (ம-14)




திவிநெகும மனைப் பொருளாதார திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் விதைநடும் நிகழ்வு இடம்பெற்றது. வேலணை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம் செயலக விழாவில் பயன்தரும் விதை ஒன்றை நடுவதைக் காணலாம். (ம-7)

## தீர்ந்தது நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஏப். 7

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இந்த ஆண்டுக்கான வாகன வரி அனுமதி பத்திரங்களை பெறுவதற்கான நெருக்கடி நிலை தற்போது குறைந்து காணப்படுகின்றது.

கடந்த மூன்று மாத காலமாக அனேகமான பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவுகளில் இந்த வாகன அனுமதி பத்திரங்களை பெறுவதற்கு பெரும் நெருக்கடியும், நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

இந்த வாகன வரி அனுமதி பத்திரங்களை பெறுவதற்கு வாகன உரிமையாளர்கள் முண்டியடித்தும் அதைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நெருக்கடி நிலை தற்பொழுது இந்த மாதத்தில் மிகக் குறைந்து காணப்படுகின்றது. இந்த வாகன அனுமதி வரி பத்திரம் வழங்கும் பணிகள் யாவும் கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதால் அவற்றை சிரமம் இன்றியும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த ஆண்டில் தொடக்கப் பகுதியில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களைச் சோதனையிடும் பணியில் பொலிஸார் மும்முரமாகவும் ஈடுபட்டு வந்தனர்.

இதனை அடுத்து வாகன வரி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாகன உரிமையாளர்கள் பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டிருந்தனர்.

இதனாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (ம-17)

# குடாநாட்டு வீதி திருத்தத்துக்கு தினமும் 8 மணிநேர மின்தடை

கொழும்பு, ஏப்.7

*யாழ்.குடாநாட்டில் வீதித் திருத்த வேலைகளுக்காகத் தினமும் 8 மணிநேரம் மின்சாரம் நிறுத்தி வைக்கப்படுவதாக வீதி அபிவிருத்தி திணைக்கள பொது முகாமையாளரும் பிரதம பொறியியலாளருமான எல். வீரசிங்க தெரிவித்தார்.*

யாழ்.குடாநாட்டில் வீதி அகலிப்பு மேற்கொள்ளப்பட்டு 'காப்பெற்' இடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 103 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது.

இதனைவிட ஏ-9 பிரதான வீதியும் அகலிக்கப்பட்டு, திருத்தப்பட்டு வருகின்றது. இதற்காக சீன அரசிடமிருந்து 18 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி பெறப்பட்டுள்ளது. இந்த வீதி அகலிப்பு வேலைகள் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவுக்குள் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, பருத்தித்துறை, பலாலி வீதிகளும், கைதடி-மானிப்பாய் வீதி, அச்சுவேலி- அராலி வீதிகளும் அகலிக்கப்பட்டு காப்பெற் இடப்பட்டு வருகின்றன. இந்த வீதிகளின் புனரமைப்பு 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுன்னாகம் மின் நிலைய பிரதம பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவிக்கையில், வீதி அகலிப்பு வேலைகளுக்காக தினமும் காலை 8.30 மணிமுதல் மாலை 6 மணி வரையில் மின்சாரம் நிறுத்தப்படுகின்றது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், விவசாயிகள் பாதிக்கப்படுவது எமக்குத் தெரியும். எனினும் வீதிகளை அகலிப்புச் செய்ய வேண்டிய தேவை எமக்குள்ளது.

வாகனங்களின் அதிகரித்த போக்குவரத்தால் வீதிகளின் விஸ்தீரணம் போதாது உள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## கோவாச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 7

யாழ். மாவட்டத்தில் கோவா செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது கோவாவின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததால்தான் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

சந்தைகளில் கோவா ஒரு கிலோ 10 ரூபாவாக விற்கப்படுகின்றது. இந்த விலை வீழ்ச்சியால் அனேகமான விவசாயிகள் இந்தச் செய்கையை திடீரென கைவிட்டுள்ளனர். இதனால் இறைப்பு இன்றி தோட்டங்களில் அவை கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. (ம-17)

## சந்நிதியில் நேற்று அடுத்தடுத்து நடந்தேறிய 10 திருமணங்கள்

வடமராட்சி, ஏப். 7

வடக்கில் நேற்றைய தினம் ஏராளமான திருமணங்கள் நடந்தேறியுள்ளன. குறிப்பாக குடாநாட்டில் ஆலயங்கள், மண்டபங்களில் அடுத்தடுத்து பல திருமண நிகழ்வுகள் நடந்தன.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் மட்டும் நேற்றைய தினம் சுபவேளையில் அடுத்தடுத்து - தொடர்ச்சியாகப் பத்துத் திருமணங்கள் நடந்து முடிந்தன.

சந்நிதி முருகனின் அருளாசியுடன் இந்தப் பத்துச் சோடிகளும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டன.

பங்குனி மாதத்தின் இறுதி சுப நாளான நாளை ஞாயிற்றுக்கிழமையும் சந்நிதி முருகன் ஆலயத்தில் 13 திருமண வைபவங்களுக்கு கோயில் நிர்வாகத்தினரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றையதினம் மேலும் சில திருமணங்கள் நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் இந்த (பங்குனி) மாதத்தில் - ஒரே நாளில் சந்நிதியில் பத்துக்கு மேற்பட்ட திருமணங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் இங்கு கடந்த ஆண்டு ஒரே தினத்தில் ஆகக் கூடுதலாக 18 திருமணங்கள் நடைபெற்றுள்ளன என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## குடாநாட்டுக்குத் தெற்கு வியாபாரிகள்

யாழ்ப்பாணம்,ஏப். 7

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தென் பகுதியில் இருந்து நடைபாதை வியாபாரிகள் குடாநாட்டை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடைபாதை வியாபாரிகள் உடுபுடைவைகளைப் பெரும் எண்ணிக்கையில் தருவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நடைபாதை வியாபாரிகள் முற்ற வெளிப் பகுதியில் தமக்குரிய நடைபாதை வியாபாரத்துக்கென இடங்களை ஒதுக்கி சிறிய கொட்டகைகளை அமைக்கும் பணிகளிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டுக்கு இன்னும் ஒருவார காலம் இருக்கும் இந்த நிலையில் நடைபாதை வியாபாரிகளின் உடு புடைவை வியாபாரமும் தற்போதே சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

என்றாலும் இந்த உடு புடைவையை கொள்வனவு செய்வதில் இம்முறை மக்கள் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

தற்போதைய பொருளாதார, நெருக்கடி, பொருள்களின் விலைவாசி உயர்வு போன்றவற்றால் வடபகுதி மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய பொருள்களின் விலை யேற்றம் நாளுக்கு நாள் கிடுகிடுவென அதிகரித்துச் செல்கின்றன.

இவ்வாறு அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வால் மக்கள் பொருளாதார ரீதியிலும் உள ரீதியிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சித்திரை புத்தாண்டுக்கான உடு புடைவைகளைக் கூடக் கொள்வனவு செய்வதில் மக்கள் நாட்டம் காட்டவில்லை.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்த முறை உடு புடைவைகளின் விலையும் சடுதியாக அதிகரித்தும் காணப்படுகின்றது.

குறிப்பாக ஆண்களுக்கான ஒரு சாரம் கூட 600 ரூபாவில் இருந்து 800 ரூபாவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. பெண்களுக்கான சாதாரண புடைவை கூட ஆயிரம் ரூபாவில் இருந்து ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதனால் குடாநாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-17)

## கண்ணிவெடி அகற்றும் பணியாளருக்குப் பாதிப்பு

வடமராட்சி,ஏப்.7

நாகர்கோவில் கிழக்கில் கண்ணிவெடி வெடித்ததில் கண்ணிவெடி மீட்கும் பணியாளர் ஒருவரின் பற்கள் உடைந்ததுடன், இரசாயனத் தாக்கங்களுக்கும் உள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே இடத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வன் நாகதீபன் (வயது21) என்பவரே சிகிச்சை பெற்று வருபவராவார்.

கடந்த செவ்வாய்க் கிழமை காலை 7 மணியளவில் ஹலோட்ரஸ்ட் பணியாளர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இதன்போது கண்ணிவெடி ஒன்று வெடித்துள்ளது.

வெடித்துச் சிதறிய கண்ணிவெடி மண்வெட்டியால் அதனை வெட்டியவரையும் தாக்கியது. முகக்கவசம் அணிந்திருந்த படியால் முகத்தில் பெரிதாக பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் முகக்கவசம் உடைந்து அவரது முன்வாய்ப் பற்கள் சில உடைந்துள்ளன. அத்துடன் இரு கைகளிலும், உடம்பின் சில பகுதிகளிலும் கண்ணிவெடியின் இரசாயனத்தால் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து இவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்ஸ்போ 2012 கண்காட்சி பயனற்றுப்போனது

கொழும்பு, ஏப்.7

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் கடந்த மாதம் மார்ச் 28ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரமாண்டமாக நடத்தப்பட்ட EXPO 2012 கண்காட்சி பயனற்றுப் போனதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவிக்கின்றது.

ஊடகங்களில் பிரமாண்டமாககாண்பிக்கப்பட்டபோதிலும் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டதன் ஊடாக இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கோ, ஏற்றுமதிக்கோ எவ்வித நன்மையும் கிடைக்க வில்லை. இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக உலகின்பல நாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் வருகைதந்ததாக அரச ஊடகங்கள் தெரிவித்தன.

எனினும், குறித்த நாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள், வழங்கிய இலவச விமானப் பயணச் சீட்டு, இலவச தங்குமிட வசதிகள் ஆகியன காரணமாகவே குறித்த முதலீட்டாளர்கள் கண்காட்சிக்கு வருகை தந்துள்ளனர். இவ்வாறு வருகை தந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உரையை தெளிவாகக் கேட்க வேண்டும் என்பதற்காக குறித்த மண்டபத்திலிருந்த குளிரூட்டி இயந்திரங்களையும் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இலங்கையில் தற்போது உஷ்ணமான காலநிலை நிலவுவதால் இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத வெளிநாட்டுப் பிரமுகர்களில் அநேகமானோர் இடைநடுவிலேயே தமது விடுதிகளுக் குச் சென்றுள்ளனர். இதன்பின்னர் வெளிநாட்டு வர்த்தகர்களுடன் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் கலந் துரையாடியுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், தாம் இலங்கைக்கு வந்தது, தமது உற்பத்திகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கே அன்றி இலங்கைப் பொருள்களை தருவித்துக் கொள்வதற்கு அல்ல எனத் தெரிவித்துள்ளனர்.

கண்காட்சி முடிவில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகளைச் சந்தித்த வெளிநாட்டு பிரமுகர்கள், இலங்கையில் தமக்கு விடுமுறையைக் கழிப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், தேசத்துக்கு மகுடம் போன்றே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மதிப்பை அரசியல் ரீதியாக மட்டும் உயர்த்திக் கொள்வதற்கு மட்டுமே இந்த எக்ஸ்ஃபோ 2012 கண்காட்சி பயன்படுத்தப்பட்டதாக அரசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (எ)

# கூட்டமைப்பின் தலைமையில் எதிர்க்கட்சிகளின் மே தினம்

யாழ்ப்பாணம், ஏப். 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் எதிர்கட்சிகளின் மே தினம் இந்த முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்த மே தினத்தில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்று வரும் இராணுவ ஆக்கிரமிப்புக்களை எதிர்ப்பதே பிரதான கோஷமாக அமையும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

எதிர்க் கட்சிகளின் மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, மேலக மக்கள் முன்னணி சார்பில் குமரகுருபரன், விக்கிரமபாகு கருணாரட்ண, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் மே தினத்தைக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த மே தினத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நில ஆக்கிரமிப்பை கைவிடுமாறும் மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், சுதந்திரமாக மீன்பிடி மேற்கொள்ள அனுமதிக்குமாறும், விவசாயம் மேற்கொள்வதற்கு நிலங்களைக் கையளிக்குமாறும், விலைவாசி உயர்வுக்கு எற்ப சம்பள அதிகரிப்பை வழங்குமாறும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரியும் எழுப்பப்படவுள்ளன.

நாம் எதிர்கட்சிகளுடன் இணைந்து மே தினத்தை நடத்துவதன் நோக்கம், இந்த அரசு மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக விரோதப் போக்குகள் என்பவற்றை கண்டிப்பதேயாகும்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே தினத்தை கொண்டாடுகின்றது. ஏனைய மாவட்டங்களில் தனித்தனியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே தினத்தை அனுஷ்டிக்கும் என்றார். (த-5)

## குரல் கொடுக்க எவரும் இல்லை

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குரல் கொடுப்பதற்கு எந்த ஒரு தரப்பும் முன்வரவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபிள்ளே தெரிவித்துள்ளார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளே உள்ளிட்ட 15 பேர் கொல்லப்பட்டனர். இதனை நினைவுக்கூரும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். (எ)

## பழைய, புதிய அகதிகள் என்று எவரும் இல்லை

01↘ பட்டுள்ளது. மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோனால் குறித்த உள்நாட்டு அகதிகள் தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டபோதே மேற்படி மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவை கடந்த புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடியது. அப்போது மீள்குடியேற்ற அமைச்சர், உள்நாட்டு அகதிகளைப் பழைய மற்றும் புதிய அகதிகள் எனப் பிரித்து யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

இதனை ஆட்சேபித்த அமைச்சர் றிஷாட் பதியுதீன் இவ்வாறு பிரிக்கப்படுவதால் ஏற்படும் பாதகமான சூழ்நிலையை விவரித்து ஜனாதிபதியின் கவனத்திற்கும் இதனைக் கொண்டுவந்தார்.

இது தொடர்பாக அமைச்சர் றிஷாட்டின் கருத்தை செவிமடுத்த ஜனாதிபதி, உடனடியாக இதில் மாற்றம் செய்யுமாறும், அகதிகளில் பழையோர், புதியோர் என்ற வித்தியாசம் கிடையாது என்றும் தெரிவித்தார்.

இதன்பின்னர் அவ்விடத்திலேயே யோசனையில் மாற்றம் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (உ-சி)

# பிரபாகரன் நாமம் இன்னும் 3,000 ஆண்டுகள் வாழும்

01↘ பினருமான விக்கிரமபாகு கருணாரட்ன. 'உதயன்', 'சுடர் ஒளி'. பத்திரிகைகளுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளின் தலைவர் பிரபாகரன் தான் பிறந்த மண்ணுக்காக விடுதலை வேண்டிப் போராடியவர். அவர் தாய் மண்ணுக்காக முள்ளிவாய்க்கால்வரை சென்று தனது உயிரையே கொடுக்கத் துணிந்தவர். அவர் உயிருக்குப் பயந்து ஓடி ஒளியவில்லை. அவரின் குடும்பமே மண்ணுக்காகத் தன்னைத் தியாகம் செய்தது.

பிரபாகரன் தமிழர்களின் உரிமைகளையும் அடையாளங்களையும், வளங்களையும் பாதுகாக்கவே போராடினார். தான் பிறந்த மண்ணைக் காப்பதற்கு இறுதி வரை பாடுபட்டார்.

அவரின் கொள்கைகளை நாம் ஏற்கமாட்டோம். அவர் சிற்சில தவறுகளை இழைத்திருந்தாலும் அவர் ஒரு சிறந்த விடுதலைப் போராளி. அதனை நாம் ஒருபோதும் மறுக்க மாட்டோம். அவர் தேசத்துரோகி அல்லர். பிரபாகரன் என்ற நாமம் இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு வரலாற்றில் வாழும். இதனை எவராலும் அழித்துவிடமுடியாது. இது உண்மையும்கூட.

தாய்நாட்டு வளங்களை விற்பனைசெய்து பிழைப்பு நடத்தும் ஜனாதிபதி மஹிந்தவுடன் ஒப்பிடுகையில் தாய்மண் மீது பிரபாகரன் அதிக பற்றைக் கொண்டிருந்தார்.

மக்களை வீதியில் இறக்கிப் போராடித்தான் தேசப் பற்றைக் காட்டவேண்டுமென்றில்லை. அது மனதில் இருந்தால்போதும். பொருள்களின்விலைகளைத் தொடர்ச்சியாக அதிகரித்து மக்களின் அடிவயிற்றில் அடிக்கும் மஹிந்த அரசு முதலில் நிர்வாக முறைமையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் ஏனைய விடயங்களைப் பற்றிச் சிந்திக்கலாம்; பார்க்கலாம் - என்றார் அவர்.

அவரது முழுமையான செவ்வி நாளைய உதயனில் வெளியாகும். (உ)

## தொண்டுப் பணியாளர் படுகொலை விசாரிக்கக் கோருகிறது பிரான்ஸ்

01↘ தூதுவர் கிறிஸ்டின் ரொபிக்கோன் சட்ட மா அதிபரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

வழக்கு விசாரணைகள் தொடர்பில் தூதுவர் ரொபிக்கோன், சட்ட மா அதிபரிடம் பல கேள்விகளை எழுப்பியுள்ளார். இதேவேளை, மூதூர் தொண்டுப் பணியாளர் படுகொலை மற்றும் திருகோணமலை மாணவர் படுகொலை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் மீண்டும் விசாரணைகள் நடத்தப்படும் என முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ், ஜெனிவா அமர்வுகளில் உறுதியளித்திருந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## இலங்கை மீது எந்நேரமும் பொருளாதாரத் தடை வரலாம்

01↘ மஹிந்த அரசை ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கைவிட்டால் அது நாட்டை இரண்டாகப் பிரித்தே தீரும்'' என்றும் அந்த அமைப்பு அபாயச்சங்கு ஊதியுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசேட அறிக்கையொன்றை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் சர்வதேச போர்க்குற்றங்களுக்கான உயர்மட்ட அதிகாரி ஸ்ரீபன் ராப், செனட்சபைக்கு சமர்ப்பித்துள்ள நிலையிலேயே, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர இது தொடர்பில் கூறியதாவது:-

நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கே அமெரிக்கா முயற்சிக்கின்றது. இந்த நடவடிக்கைக்காக இந்தியாவையும் குழப்பிவிட்டு அந்நாட்டைத் தமது பக்கம் இழுத்துள்ளது அமெரிக்கா.

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை விதிப்பதற்கு தனது கழுகுப் பார்வையை வொஷிங்டன் இலங்கையை நோக்கித் திருப்பியுள்ளது. இத்தடை எந்நேரமும் வரலாம். எனவே, இந்தச் சவாலுக்கு அரசு முகம்கொடுப்பதற்குத் தயாராகவேண்டும். தற்போதிலிருந்து ஆரம்பித்தால்தான் தாக்குப்பிடிக்கலாம்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே சிறந்த உபாயமாகும். அமெரிக்க சூழ்ச்சிமேகம் இன்று எமது நாட்டைச் சூழ்ந்துள்ளது. எனவே, அரசு எந்நேரமும் அவதானத்துடனேயே செயற்படவேண்டும்.

அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்படும் நாடுகளுடன் எமது உறவைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். எதிரிக்கெதிரி நண்பன் என்ற வழிமுறையை அரசு பின்பற்றவேண்டும்- எனக் குறிப்பிட்டார் கலாநிதி குணதாச

## ஜெனிவா கூட்டத் தொடர் அடுத்தமுறையும் வரும்

01↘ எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் முன்மொழிந்துள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தமுடியாது என்ற தொனியில் அரசு கருத்து வெளியிடுகின்றது.

அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். வேறு எந்தவித உபாயங்களும் கையாளப்பட மாட்டா என்றும் அது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தீர்வு விடயம், நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம் ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் எனக் கேட்டபோதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த விடயங்கள் குறித்து நாம் கூடி விரிவாக ஆராய வேண்டியுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாகவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும், ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் தனது விருப்பத்திற்கேற்ப அரசு செயற்பட முடியாது.

அடுத்த மனித உரிமை மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் அரசின் செயற்பாடுகளில் முன்னேற்றம் தென்படவேண்டும் என்பதுதான் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாகும். இதனைக் கருத்திற்கொண்டே அரசின் நடவடிக்கைகள் அமையவேண்டும். மாறாகத் தான்தோன்றித்தனமாகச் செயற்படக்கூடாது.

அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவுக்கு பயணம் செய்து நாடு திரும்பிய பின்னர்தான் இவை குறித்து எந்தவொரு முடிவும் எடுக்கமுடியும் - எனத் தெரிவித்தார் சுரேஷ். (உ-சி)

# கிழக்கு மாகாண சபையை கலைக்க அரசு தீர்மானம்

01↘ நிலைமைகளுக்கேற்ப வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அரசு இந்த முடிவுகளை எடுத்திருப்பதாகவும் அரச உயர்மட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன. (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அனைத்துலக நியமங்களைத் தேய்க்கும் முயற்சி பலன்தருமா?

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதி வேளைகளில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து, அந்நாட்டு அரசு சுயாதீனமான விசாரணை ஒன்றை நடத்த வேண்டும். அமெரிக்கா தனது முந்தைய நிலைப்பாட்டை மீண்டும் இவ்வாறு வலியுறுத்தி உள்ளது.

அமெரிக்காவின் மனித உரிமைகளுக்கான விசேட அலுவலர் ஸ்ரீபன் ராப், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து தாம் நடத்திய விசாரணைகள் மற்றும் ஆய்வுகள் குறித்து நேற்று முன்தினம் அமெரிக்க நாடாளுமன்றில் (செனேற்றில்) அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

அந்த அறிக்கையிலேயே போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து, இலங்கை அரசு சுயாதீனமான பக்கச்சார்பில்லாத விசாரணை ஒன்றை கட்டாயம் நடத்தியாக வேண்டும் என அவர் இடித்துரைத்திருக்கிறார்.

இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிடத் தவறிய, நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கு சுயாதீன விசாரணைக்குழு மிகவும் அவசியம். காலம் தாழ்த்தாமல் இலங்கை அரசு அதனைச் செய்ய வேண்டும் என்று ஸ்ரீபன் ராப் தமது அறிக்கையில் ஊன்றி வலியுறுத்தி உள்ளார்.

* பொதுமக்களின் இலக்குகள் மீதான தாக்குதல்கள்.
* போர் தவிர்ப்பு மண்டலப் பகுதிகள் மீதான எறிகணைத் (ஷெல்) தாக்குதல்கள்.
* சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதான படுகொலைகள்.
* பாலியல் வன்முறைகள் தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள்.

இவை குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும்; விசாரிக்கப்பட வேண்டும் - என்று ஸ்ரீபன் ராப் தமது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளார்.

■ ஒவ்வொரு விசாரணையும் சுதந்திரமானதாகவும், வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கும் விதத்திலும் நடத்தப்பட வேண்டும்.

■ மோதலின்போது, இரண்டு தரப்புகளும் இழைத்த போர் விதிமுறை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுதல்.

■ பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி நல்லிணக்கத்தை விரைந்து உருவாக்குதல் ஆகியன -

மிக அவசியம் என்றும், தவிர்க்க முடியாதவை, தள்ளிவைக்கக் கூடாதவை என்றும் ஸ்ரீபன் தமது அறிக்கையில் குறிப்பாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

அவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர், இலங்கை நிலைவரம் குறித்து அறிந்துகொள்வதற்காக இங்கு வந்திருந்தார். தாம் மேற்கொண்ட கள ஆய்வுகள், கலந்துரையாடல்களின் போது தாம் நேரில் திரட்டிய தகவல்களை அடிப்படையாக வைத்துத் தயாரித்த அறிக்கையை அமெரிக்க செனேற்றில் சமர்ப்பித்திருக்கிறார். அவரது அறிக்கை அங்கு விவாதத்துக்கு எடுக்கப்பட்டு, அரசு தீர்க்கமான முடிவை வெளிப்படுத்தும் என்பது தகவல்.

கடந்த மாதத்தின் ஜெனிவாத் தீர்மானம் குறித்து, இலங்கை அரசு உறுதியான நிலைப்பாடு ஒன்றுக்கு வரமுடியாமல், சண்டப்பிரசண்ட நிலையில் ஒருபோதும், "ஆன்றவிந்த" நிலையில் மறுபோதுமாகக் கடந்த இரண்டு வாரங்களாகத் தடுமாறிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், அதன் முன்னர், ஸ்ரீபன் ராப் மற்றொரு "குண்டைத்" தூக்கிப் போட்டுள்ளார்!

வன்னிப்போர் முடிவுற்ற குறுகிய காலப்பகுதியில், அனைத்துலகத்தின் கூரிய பார்வை இலங்கை அரசு மீது விழுந்தது. உலக நியதிகள், நியமங்களைப் புறக்கணித்து அரச தரப்பின் போர் நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமானமற்ற, மனித உரிமை மீறல்கள் அதி உச்சத்துக்கு உயர்ந்திருந்தன என்ற குற்றச்சாட்டுக்கள் குவிந்தன.

ஆரம்பத்தில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை, சோடிக்கப்பட்டவை என்று ஒதுக்கித் தள்ளிவிட அரசு முனைந்தது. எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, அனைத்துலக நாடுகளைப் பகைத்துக் கொள்வதால் உண்டாகக் கூடிய எதிர் வினைகளை மனதிற்கொண்டு, நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ள முடிவுசெய்தது.

பல தரப்புகளும் கொடுத்த அழுத்தங்களையும் மறைமுகமான எச்சரிக்கைகளையும் தாங்கமுடியாத நிலையில், அவற்றை அந்தந்தப் போதில் தவிர்த்து தப்பித்துக்கொள்ளும் பல வகையான தந்திரோபாயங்களைக் கையாண்டது. அவற்றைப் புரிந்துகொண்டு, உள்வாங்கிக்கொண்டு அனைத்துலக நாடுகளைச் சாந்தப்படுத்தும் கைங்கரியங்களை வர்ணப்படுத்தியது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று செயலாக்கும் வாய்ப்பாட்டைக் கையில் எடுத்தது.

எனினும் மூன்று வருடங்களில், ஒன்று இரண்டாகி, இரண்டு மூன்றாகி என்ற தன்மையுடன் அனைத்துலக அழுத்தம் வலிமை கொண்டதாக மாறியிருக்கும் காட்சிகள் பெருகி வருகின்றனவே அன்றி குன்றிப்போவதாகவோ, தூர விலகுவதாகவோ தென்படவில்லை.

அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள், அவற்றைப் பிரித்துப் பெருக்கும் தன்மைகள், பிராந்திய மற்றும் ஆதிக்க நலன்களை மனதிருத்தி முன்வைக்கப்படுபவையாக இருக்கும் என்பது விவாதத்துக்கு உரியதன்று.

எனினும், நாட்டின் இறையாண்மை என்ற பொக்கிஷத்தைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, இங்கு நடைபெற்ற மனிதாபிமானத்தைத் துவம்சம் செய்யும், மனித உரிமைகளைச் சிதைக்கும் விதத்திலான செயற்பாடுகளைப் பார்த்துக்கொண்டு அனைத்துலக நியமங்கள் கைகட்டி, கண்மூடி வாளாவிருக்க மாட்டா என்பது இயல்பானது; இயற்கையானது.

இத்தகைய பின்புலத்தில், நலன்களும் நன்மைகளும், வருந்தி அழைத்தாலும் வாராதுவாரா (அதேவேளை) பொருந்துவன போமின் என்றால் போகா என்பது மனித வாழ்வியலின் மாற்றமுடியாத நெறிமுறைக் கட்டுகளில் ஒன்று.

உலக அரச நெறிமுறைகளும், ஆட்சிப்பரிமாணங்களும், அந்தந்த நாடுகளுக்கு அல்லது ஆட்சியாளர்களுக்குச் சொந்தமாக இருந்த யுகம் மறைந்து நூற்றாண்டுகள் பலவாகிவிட்டன.

இப்போது பூகோளம் சுருங்கி, அனைத்துலக ஆட்சி மற்றும் மனிதாபிமான நெறிமுறைகள், பொதுவானவையாகப் பரிணமித்து இருக்கும் நவீன சகாப்தம். அத்தகு உலகமைவில், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் மட்டுமே என்று கூறுவது அனைத்துலகத்தை ஏய்க்காட்ட முயலும், அதற்குரிய நியமங்களைத் தேய்க்கும் எத்தனமாக முடிந்துவிடும். இது வெறும் தத்துவம் அல்ல; முற்றுமுழுதான நடப்பியல் உண்மை மட்டுமன்றி, யதார்த்தமும் கூட.

# சாதாரணதரப் பெறுபேறுகளில் வடக்கில் கிளிநொச்சி பின்தங்கியது

யாழ்ப்பாணம்,ஏப். 7

சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர் வீதத்தை வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களுடன் ஒப்பிடும் போது கிளிநொச்சிக் கல்வி வலயம் இறுதி இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் உள்ளன. அதில் கிளிநொச்சிக் கல்வி வலயத்திலிருந்து சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 35.39 வீதமானவர்களே சித்தியடைந்துள்ளனர்.

இது ஏனைய கல்வி வலயங்களுடன் ஒப்பிடும் போது இறுதி இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பிரிவு நடத்திய பகுப்பாய்வு அறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆயிரத்து 975 பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அதில் 699 பேர் சித்தியடைந்துள்ளனர், ஒருவர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச்சித்தி பெற்றுள்ளார். 159 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

வலய ரீதியாக மன்னார் கல்வி வலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. அதில் ஆயிரத்து 266 பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இவர்களில் நான்கு பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியடைந்துள்ளனர். ஆறு பேர் மட்டுமே அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணக் கல்வி வலயம் பெற்றுள்ளது. 3ஆயிரத்து 688 பேர் தோற்றினார்கள். 2 ஆயிரத்து 325 பேர் சித்தியடைந்துள்ளனர். 45 பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 74 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

மூன்றாம் இடத்தை வவுனியா கல்வி வலயம் பெற்றுள்ளது.2 ஆயிரத்து 235 பேர் தோற்றியுள்ளனர். ஆயிரத்து 387 பேர் சித்தியடைந்துள்ளனர். 21 பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 47 பேர் அனைத்திலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

நான்காம் இடத்தை வலிகாமம் கல்வி வலயம் பெற்றுள்ளது. 2 ஆயிரத்து 801 பேர் தோற்றியுள்ளனர். ஆயிரத்து 619 பேர் சித்தியடைந்துள்ளனர். 11பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 53 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

ஐந்தாம் இடத்தை வடமராட்சி கல்வி வலயம் பெற்றுள்ளது. ஆயிரத்து 835 பேர் தோற்றியுள்ளனர். 984 பேர் சித்தியடைந்துள்ளனர்.

15 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். 84 பேர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தர சித்தியடையத் தவறியுள்ளனர்.

ஆறாம் இடத்தை தென்மராட்சிக் கல்வி வலயம் பெற்றுள்ளது. ஆயிரத்து 87 பேர் தோற்றியுள்ளனர். 574 பேர் சித்தியடைந்துள்ளனர். ஐந்து பேர் அனைத்துப் பாடங்களில் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். 54 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

ஏழாம் இடத்தை வவுனியா வடக்கு கல்வி வலயம் பெற்றுள்ளது. 608 பேர் தோற்றியுள்ளனர். 312 பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் எவரும் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தியைப் பெற்றிருக்கவில்லை. 23 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

எட்டாம் இடத்தை மடு கல்வி வலயம் பெற்றுள்ளது. 303 பேர் தோற்றியுள்ளனர். 128 பேர் சித்தியடைந்துள்ளனர்.

தோற்றியவர் எவரும் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெறவில்லை. 8 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

ஒன்பதாம் இடத்தை முல்லைத்தீவு கல்வி வலயம் பெற்றுள்ளது. ஆயிரத்து 12 பேர் தோற்றியுள்ளனர். 425 பேர் சித்தியடைந்துள்ளனர். தோற்றியவர் எவரும் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ'தரச் சித்தி பெறத் தவறியுள்ளனர். 45 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பத்தாம் இடத்தை துணுக்காய் கல்வி வலயம் பெற்றுள்ளது. 522 பேர் தோற்றியுள்ளனர். 191 பேர் சித்தியடைந்துள்ளனர். ஒருவர் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளார்.41 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பதினோராவது இடத்தை தீவக கல்வி வலயம் பெற்றுள்ளது. 706 பேர் தோற்றியுள்ளனர். 278 பேர் சித்தியடைந்துள்ளனர். தோற்றியவர் யாரும் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெறவில்லை. 52 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

பரீட்சைத் திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் ஒன்பது மாகாணங்களில் வடமாகாணம் ஒன்பதாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தில் வலி. கிழக்கில் 2 , 557 வீடுகள்

அச்சுவேலி, ஏப். 7

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 557 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 570 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதில் காணி தொடர்பான ஆவணம் இன்மை, உள்ளூர் இடப் பெயர்வு மற்றும் காரணங்களால் 13 வீடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை. 2 ஆயிரத்து 557 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஆகக் கூடுதலான மக்கள் தொகையைக் கொண்ட வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் யாழ். மாவட்டத்தில் ஆகக் கூடுதலான எண்ணிக்கையாக 2 ஆயிரத்து 557 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் 99.5 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக வலி. கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

**70 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர்.**

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 21 ஆயிரத்து 700 குடும்பங்கள் வாழ்கின்றன. 70 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். மொத்தக் குடும்பங்களில் 9.9 வீதக் குடும்பத்தினர் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் வீடமைப்புக்கான உதவியை பெற்றுள்ளனர். (ம-11)

# எரிபொருள் நிலையத்தில் சூறை

நொச்சியாகம, ஏப் 07

நொச்சியாகம பிரதேசத்தில் 4,300 ரூபாவுக்கு எரிபொருள் நிரப்பியதன் பின்னர் அங்கிருந்த 68 ஆயிரம் ரூபாவையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஐவர் அடங்கிய குழு ஒன்று செயற்பட்டுள்ளது.

இவர்கள் எரிபொருள் நிலையத்தில் கடமை புரிந்த ஊழியருக்கு கொலை மிரட்டல் விடுத்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த நபர்கள் பயணித்த வாகனம் தொடர்பிலும் அதனுடைய இலக்கம் தொடர்பிலும் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சாவகச்சேரி கைத்தொழில் மன்றத்தால் கிளிநொச்சி மாணவிக்கு புலமைப் பரிசில்

தென்மராட்சி,ஏப்.7

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் முதன் முறையாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவான கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவிக்கு மாதாந்த புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் சாவகச்சேரி [illegible] பேக் கல்லூரியில் நடைபெற்ற மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலரால் இந்த புலமைப் பரிசில் நிதி வழங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பீட மாணவர் நிதியத்துக்கென தாமோதரம்பிள்ளை குடும்பத்தினரால் மன்றத்தில் வைப்பிலிடப்பட்ட நிதியிலிருந்து மாதாந்தம் 3 ஆயிரத்து 750 ரூபா இந்த மாணவிக்கு வழங்கப்படவுள்ளதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

தாமோதரம்பிள்ளை நிதியத்திலிருந்து தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் 17 வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் புலமைப் பரிசில் நிதி கடந்த வருடம் முதல் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (ம-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலையம் ஓமந்தையில் அமையும்

அக்கராயன், ஏப்.7

**வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் அரச ஊழியர் வீடமைப்புத் திட்டத்தில் எட்டுப் பரப்புக்காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர் பிரிவு தோறும் நிறுவப்பட்டு வரும் கலாசார மத்திய நிலையமும் அதனோடு இணைந்த கட்டடத் தொகுதிகளும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிலும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கென வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் அரச ஊழியர் வீடமைப்புத் திட்டத்தில் எட்டுப் பரப்புக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்த கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் குறிப்பிட்ட பகுதிக்கு நேரடியாகச் சென்று காணியைப் பார்வையிட்டதுடன், விரைவில் கட்டட நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கக்கூடிய வகையில் நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியமர்வுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஒரு பகுதியாக இவற்றை நிர்மாணிப்பதற்கு முடிவு செய்யப்பட்டதாகவும் வவுனியா பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (க-400)

## அதிக உதவிகளை எதிர்பார்க்கும் பூநகரி கடற்றொழிலாளர்கள்

அக்கராயன், ஏப்.7

கிளிநொச்சி பூநகரி கடற்றொழிலாளர்கள் அரசின் அதிகரித்த உதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தின் கீழ் 14 கடற்றொழில் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இங்கு சுமார் 2 ஆயிரத்து 250 கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர். அரசின் உதவிகள் தமக்குத் தாராளமாகக் கிடைக்குமாயின் கடற்றொழிலை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் இவர்கள் உள்ளனர். தமக்கு ஏற்கனவே கிடைத்த உதவிகள் மூலம் தமது கடற்றொழிலை மேம்படுத்த முடியாமல் உள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் இந்திய மற்றும் பிற இடங்களில் இருந்து வருகை தரும் கடற்றொழிலாளர்களால் பூநகரியில் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## அமைப்புக்களின் ஒன்றியம் பதிவு

செட்டிகுளம் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தின் செயற்பாடுகள் பிரதேச செயலக எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்காலச் செயற்பாடுகள் சமூக அக்கறையுடன் மேற்கொள்ளப்படும் எனவும் வெங்கலச்செட்டிக்குளப் பிரதேச செயலாளர் ஏ.எம்,எச்.முஹசீன் தெரிவித்துள்ளார். (க-402)

# வவுனியா நகரப் பகுதியில் ஓட்டோ தரிப்பிடங்கள் ஒதுக்கீடு

வவுனியா, ஏப்.7

வவுனியா நகரப்பகுதியில் ஓட்டோக்களை நிறுத்துவதற்கான தரிப்பிடங்கள் நகர சபையால் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை வவுனியா நகரசபையின் செயலாளர் வி.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதியில் பல நூற்றுக்கணக்கான ஓட்டோக்கள் பாடசாலைச் சேவை உட்படப் பல சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஓட்டோ சாரதிகள் பொருத்தமில்லாத இடங்களில் தரித்து நிற்பதோடு பயணிகளையும் பொருத்தமற்ற இடங்களில் வைத்து ஏற்றுகின்றனர்.

இதனால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் ஓட்டோ சாரதிகளுக்கு இடையில் போட்டி காரணமாகப் பிணக்குகளும் அதிகரித்து வருகின்றன. இதனை அடுத்தே ஓட்டோக்களை நிறுத்துவதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கான அறிவித்தல் பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன. அந்த இடங்களில் இருந்தே ஓட்டோ உரிமையாளர்கள் தமது சேவையை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நகரசபைப் பகுதிக்குள் சேவையில் ஈடுபடும் ஓட்டோ உரிமையாளர்கள் இந்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பாகத் தமது வாகனங்களை நகரசபையில் பதிவு செய்த பின்பே சேவையை மேற்கொள்ள முடியும். அதனை மீறிச் செயற்படும் ஓட்டோ சாரதிகள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகளுக்கு விசேட சீருடை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஓட்டோ சாரதிகள் கூறுகின்றனர்.

ஓட்டோ சாரதிகளின் தொலைபேசி இலக்கங்களையும் ஓட்டோவில் பொறித்துச் சேவையில் ஈடுபடுவதன் மூலம் இடம்பெறக் கூடிய சீரழிவு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தலாமென ஓட்டோ சாரதிகள் சிலர் தெரிவித்தனர். (க-400)

## 88 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்கள்

வவுனியா, ஏப்.7

வவுனியா பெரிய தம்பனையில் மீளக்குடியமர்ந்த 250 குடும்பங்களில் 88 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்ட வசதிகள் வழங்கப்படவுள்ளன.

வீட்டுத்திட்டத்தைப் பெறவிருக்கும் 88 பயனாளிகளினதும் பெயர் விவரங்கள் பெரியதம்பனை கிராம சேவகர் அலுவலகத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் அதற்கான காரணங்களை எழுத்து மூலமாக எழுதி செட்டிகுளம் பிரதேச செயலாளருக்கு அறிவிக்குமாறும் பெரியதம்பனை கிராம சேவகர் அறிவித்துள்ளார். (க-402)



மன்னாரில் புனரமைக்கப்பட்டு வரும் வீதியொன்றின் விநோதமான தோற்றம். புல்லும் வைக்கோலுமாகக் காணப்படுகிறது. (12)

## பூநகரியில் கைப்பற்றப்பட்டன குருநகர் இழுவைப் படகுகள்

அக்கராயன், ஏப்.7

பூநகரி நாச்சிக்குடாவில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்ட இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி குடாக் கடற்பரப்பில் இழுவைப் படகுகள் மூலம் சட்டவிரோதமான முறையில் மீன் பிடியில் ஈடுபட்ட யாழ். குருநகர் கடற்றொழிலாளர்களின் படகுகள் பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தினரால் கைப்பற்றப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இதில் வந்த நான்கு கடற்றொழிலாளர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரிக் கடற் பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் எவரும் சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபடவேண்டாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-18)

## அபிஷேகத் திருவிழா

வவுனியா, ஏப்.7

மருக்காரம் பளை வீதி-அம்பிகைபாலன் கோட்டம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனி உத்தர அபிஷேகத் திருவிழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

ஆலயத்தில் இடம்பெறும் வழமையான கிரியைகளை அடுத்து மகேஸ்வர பூசையாகிய அன்னதான நிகழ்வும் அதனைத் தொடர்ந்து ஆடு, கோழி என்பனவற்றை ஏலத்தில் விடும் நிகழ்வும் இடம் பெற்றன,

இதன் 8ஆம் மடை எதிர்வரும் 12 ஆம் திகதி இடம் பெறும் எனவும் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (க-400)

## சுண்டிக்குளம் பகுதியில் கூறுவிலைச் சந்தை

கிளிநொச்சி, ஏப்.7

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியில் டி.ஆர்.சி நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கூறுவிலைச் சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சுண்டிக்குளம் மற்றும் அதனை அண்டிய கடற்பகுதிகளில் பிடிக்கப்படும் கடலுணவுகளைச் சந்தைப்படுத்துவதற்கென அமைக்கப்பட்டிருந்த கூறுவிலைச் சந்தைக் கட்டடத்தை இராணுவத்தினர் தொடர்ந்தும் தமது பயன்பாட்டில் வைத்துள்ளனர். இதனால் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்த வேண்டுகோளையடுத்து டி.ஆர்.சி. நிறுவனத்தால் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூறுவிலைச் சந்தை கடந்த 3 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் டி.ஆர்.சி. நிறுவனத்தின் திட்டமுகாமையாளர் லீசாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர் எஸ்.சந்திரன், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர், பொதுமுகாமையாளர் இ.கணேசபிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

## வவுனியா விவசாயிகளின் ஆர்வம்

வேப்பங்குளம், ஏப்.7

பெரும்போக நெல் அறுவடையைத் தொடர்ந்து வவுனியா விவசாயிகள் தற்போது வேறு பயிர்ச் செய்கைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவர்கள் நிலக்கடலை, வெங்காயம் ஆகியவற்றைப் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு உதவிகளை வழங்கும் பொருட்டு வவுனியா கல்நாட்டியகுளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி கூட்டமொன்று இடம் பெற்றது. (க-421)

## தூர இடங்களுக்கான பஸ் சேவைகள்

வவுனியா, ஏப்.7

வவுனியா போக்குவரத்துச் சபையினரால் தூர இடங்களுக்கான சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா சாலை முகாமையாளர் செ.குணராஜா தெரிவித்தார்.

போதிய பஸ்கள் இல்லாததால் நீண்ட காலமாகச் செயற்படாதிருந்த நாவலப்பிட்டி, தலைமன்னார் ஆகிய இடங்களுக்கான சேவைகளே விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதற்கெனத் தற்போது இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன.

நாவலப்பிட்டிக்கான சேவை வவுனியாவில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கும், தலைமன்னாருக்கான சேவை காலை 5.30 மணிக்கும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தலைமன்னார் செல்லும் பஸ் காலை 9.30 மணியளவில் நேரடியாகத் திருகோணமலை செல்லுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

# மாணவரின் பாதுகாப்புக் கருதி கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடு

வவுனியா, ஏப்.7

**கடந்த மூன்று மாத காலத்தினுள் கனகரக வாகனங்களால் 33 பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாகியிருந்தனர்.**

வவுனியா பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருதி குறிப்பிட்ட நேரங்களில் நகர எல்லைக்குள் கனரக வாகனங்களின் போக்குவரத்தைப் பொலிஸார் கட்டுப்படுத்தியுள்ளனர்.

கடந்த மூன்று மாத காலத்தினுள் கனகரக் வாகனங்களால் 33 பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாகியிருந்தனர்.

இது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர் குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்களையும் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களையும் நாடியுள்ளனர். தமது பிள்ளைகளை விபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்குப் பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியம் என இவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து காலை 7.15 மணி முதல் 8 மணி வரையும், மதியம் 12 மணி முதல் 12.30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 2 மணி தொடக்கம் 2.45 மணிவரையும் பாடசாலைக்கு முன்பாகவும், முக்கிய சந்திகள், பாடசாலையை அண்மித்துள்ள சோதனைச் சாவடிகளிலும் அரச, தனியார் கனரக வாகனங்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை - அராலி பாலம் தொடர்பில் நிதி ஒதுக்கீடு எதுவும் கிடைக்கவில்லை

## வீதி அபிவிருத்தி அதிகார சபை கூறுகிறது

வேலணை - அராலி பாலம் தொடர்பில் எந்த விதமான நிதி ஒதுக்கீடுகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டின் தலைமையில் வேலணை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் போதே வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வேலணை - அராலிப் பாலம் தொடர்பாக இது வரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நீண்டகாலமாக இது குறித்துப் பேசப்படுகிறது. இதற்கென முன்னைய அரசஅதிபர்கேகணேஸ் 50 மில்லியன் ரூபா வரை ஒதுக்கீடு செய்திருந்தார் என செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தப் பகுதியை ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் அண்மையில் பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிகின்றது. தீவுப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும் போக்குவரத்துக்கும் இந்தப் பாதையை போடுவதன் மூலம் விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்ணைப் பாலத்தின் பின்னர் அதன் மேற்குக் கடல் பகுதிகளில் மீன்வளம் குறைந்துவிட்டது. வேலணை அராலிப் பாலம் குறித்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். மீனவர்களின் நலன்களை முன்னிறுத்தி இதனைச் செய்ய வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் இது தொடர்பாக தமக்கு எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதி தெரிவித்தார். (ம-7)

# தீவகக் கல்வி வீழ்ச்சியடைய காரணம் ஆசிரியர்களே

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,ஏப். 7

தீவுப் பகுதியில் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு முதல் காரணம் அதிபர், ஆசிரியர்கள்தான் என்று வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இங்கு கடமையில் உள்ள ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதிலும் இங்கு இடமாற்றம் செய்யப்படுபவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அதை ரத்துச் செய்வதிலுமே தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள்.

சொந்த ஊரில் பணிபுரிபவர்கள் மேலதிக வகுப்புகளை எடுக்காத நிலை சில இடங்களில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் மாணவர்களின் எதிர்காலம் பற்றி எவரும் சிந்தித்துச் செயற்படுவதில்லை.

இந்த நிலைமை மாற்றப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் வேலணை பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ம-7)

# வீட்டுத்தோட்டச் செய்கை 3 ஆம் கட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 7

மனைப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் 3 ஆம் கட்டமாக யாழ். குடாநாட்டில் மரக்கறி பயிரினங்களை நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

மாவட்டவிவசாயதிணைக்களத்தின் அலுவலக தோட்டம் மற்றும் மாவட்டத்தில் உள்ள விவசாய போதனாசிரியர் அலுவலக விவசாய தோட்டங்கள், விவசாய நிலங்கள், மக்களின் வீட்டுத் தோட்டங்களில் இந்த மரக்கறி விதைகள் மற்றும் பயிர்கள் என்பன நடப்பட்டுள்ளன என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

நேற்று முன்தினம் காலை 9.10 மணிக்கு சுப நேரத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இந்த மரக்கறி நாற்றுக்கள் மற்றும் விதைகள் என்பனவற்றை நட்டு வைக்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் மரக்கறி உற்பத்தித் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பெரும்பாலான விவசாயிகளும் தமது விவசாய தோட்டங்களில் சமய முறைப்படியும் சுபநேரத்திலும் இந்த திட்டத்துக்கு அமைய மரக்கறி நாற்றுக்கள் மற்றும் விதைகளை நட்டுத் தமது மரக்கறி செய்கையை ஆரம்பித்தனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையால் கோண்டாவில் சமுர்த்தி வங்கிக் கிளையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நான்காயிரம் குடும்பங்களுக்கு பழமரக்கன்றுகள் விதைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் அரச திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7-17)

# விறகுக்கான அனுமதியுடன் பெரிய மரங்கள் தறிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் விறகு வெட்டுவதற்கான அனுமதியைப் பெற்ற சிலர் பெரிய மரங்களை தறித்துச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வீமன்காமம் பிரதேசத்தில் விறகு வெட்டுவதற்கான அனுமதியை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பெற்றவர்கள் அந்த அனுமதியைப் பயன்படுத்தி பயன்தரும் பெரிய மரங்களையும் வெட்டுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் இவ்வாறான சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான சம்பவங்களில் உள்ளூரைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ம-5)

# வேலணை வங்களாவடியில் நவீன சந்தை அமையும்

யாழ்ப்பாணம்,ஏப்.7

வேலணை வங்களாவடியில் இரண்டு மாடிகளைக் கொண்ட நவீன சந்தை ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவேலணை பிரதேச சபையின் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

நெல்சிப் திட்டத்தில் ஐம்பது மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இந்தக் கட்டடம் நவீன வசதிகளைக் கொண்டதாக அமையவுள்ளது.

இதற்கான காணியை தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா நீண்டகால குத்தகைக்கு வழங்கியுள்ளார் எனவும் சபைத் தலைவர் சிவராசா தெரிவித்தார். (ம-7)

# 14 புதிய வகை நெல்லினங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 7

தொல்புரம் விவசாய போதனாசிரியர் பிரிவில் பதினான்கு புதிய வகை நெல் இனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த புதிய நெல்லினம் குறித்த பயிற்சி வகுப்பு ஒன்று நேற்றுமுன்தினம் தொல்புரம் போதனாசிரியர் திருமதி ஜே.கவிதா தலைமையில் நடைபெற்றது.

விதை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பதிகாரி எ.ரமணிதரன், பாட விதான உத்தியோகத்தர் இ.சௌந்தராஜன் ஆகியோர் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்கள். பீஜி-250, பீஜி-306, ஏரி-308, ஏரி-362, பீஜி-366, பிடபிள்யூ-361, டபிள்யூ-364, ஏரி-307, எல்டி-365, பிடபிள்யூ-362, பிடபிள்யூ-434, பிஜி-407 எச், எல்டி-408, பிஜி-406 ஆகிய புதிய இன நெல்களே இந்தப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. (ம-17)

# நாகர்கோவிலுக்கு தனியான பஸ் சேவை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வடமராட்சி, ஏப்.7

பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவிலுக்குத் தனியான பஸ் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கிழக்கில் மீள்குடியமர்த்தும் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. குறித்த நிகழ்விலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே இப்பகுதியில் இடம்பெறும் மீளக்குடியமர்வு வெற்றியளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்வுக்கு வந்த மக்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவிலுக்கு நாளாந்தம் 3 பஸ் சேவைகளை யாவது நடத்த வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளலாம்.

நாகர்கோவில் தெற்கிலுள்ள மருதங்கேணி- பருத்தித்துறை வீதியில் நாகர்கோவில் சந்தி தொடக்கம் கரையோரம் வரை செல்லும் வீதியில் ஒரு பகுதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளில் போக்குவரத்தும் ஒன்றாக உள்ள நிலையில் இதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மீளக்குடியமரும் மக்கள் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தமது போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாது. அதற்கான பொருளாதார வசதிகளும் அவர்களிடம் போதியளவில் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

எனவே இந்த விடயத்தில் கவனம் எடுத்து உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். - என்றும் தெரிவித்தனர். (ம-8)



நல்லூர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பருத்தித்துறை வீதியில் குறிப்பிட்ட பகுதி பெரும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியூடாகப் போக்குவரத்து மேற்கொள்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறித்த வீதிக்குப் பொறுப்பானோர் ஏன் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று மக்கள் கேட்கின்றனர். (ம-23)

# மாட்டுடன் மோதி விபத்து

தென்மராட்சி,ஏப்.7

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்துக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர்கள் வீதியோரத்தில் படுத்திருந்த மாட்டின் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முகமாலை ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் அச்சுவேலி தோப்பு வீதியைச் சேர்ந்த சிவகுரு சிவகுமார் (வயது 33) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மற்றவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறினார். (ம-9)

# 'பாஜ்' மூலமே நெடுந்தீவுக்குத் தண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப்.7

இரணைமடு தண்ணீர் நெடுந்தீவுக்கு பாஜ் மூலமே கொண்டு வரப்படும்.

இதற்கமையவே திட்[illegible]தாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்றது. நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் தட்டுப்பாடு குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

இரணைமடு தண்ணீர் விநியோகம் தொடர்பாக இதில் கலந்துகொண்டு கேட்டபோது மேற்கண்டவாறு கூறப்பட்டது.

நெடுந்தீவுக்கு இரணைமடுத் தண்ணீரை குழாய் மூலம் எடுத்து வர நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர் கோயிலில் மீள்குடியமர்வு

வடமராட்சி,ஏப்.7

வடமராட்சி கிழக்கு நாகர் கோயிலில் மீள்குடியமர்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றன.

நாகர்கோயில் கிழக்கில் நண்பகல் 12 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன், எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், கிராம சேவையாளர் ந.பால சுந்தரம், ஹலோட்ரஸ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தின் இணைப்பாளர் பாஸ்கரன், வடமராட்சி கிழக்கு இராணுவ சிவில் நிர்வாக அதிகாரி கேணல் சில்வா, நாகர் கோயில் இராணுவப் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ அதிகாரி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

போர் காலத்துக்கு முன்னர் கடந்த 2,000 ஆம் ஆண்டளவில் இந்தப் பிரிவில் 280 குடும்பங்களைச் சேர்ந்த 1,174 பேர் வசித்து வந்தனர்.

தற்போது மீள்குடியமர்வுக்கு 186 குடும்பங்களைச் சேர்ந்த 684 பேர் மாத்திரதே பதிவு செய்துள்ளனர்.

எனினும் இதுவரை மீள்குடியமர்வுக்குத் தம்மைப் பதிவு செய்யாத இந்தக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கிராம சேவையாளர் ந.பாலசுந்தரத்திடம் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர வந்திருந்த குடும்பங்களில் நான்கு குடும்பங்களுக்கு சம்பிரதாய பூர்வமாக 4 கூடாரங்கள் வழங்கப்பட்டன. ஏனைய குடும்பங்களுக்குக் கிராம சேவையாளரால் கூடாரங்கள் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்வுக்குத் தயாராக வந்திருந்த குடும்பங்களைச் சேர்ந்த முருகேசு சிவஞானம், கிட்ணபிள்ளை சிவசாமி ஆகிய இருவரும் மீள் குடியமரும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கோரிக்கைகளாக விடுத்து அவற்றை நிறைவேற்றித் தந்தால் மீள்குடியமர்வு வெற்றி பெறும் என்று தெரிவித்தனர். (ம-8)

## வாசிப்பு ஆக்கத்திறன் முகாம்



வடமராட்சி,ஏப்.7

மாணவர்களிடையே வாசிப்புப் திறனையும் ஆக்கத் திறனையும் மேம்படுத்தும் வகையில் வல்வெட்டித்துறை நகரசபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி படிப்பக பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்குமான வாசிப்பு மற்றும் ஆக்கத்திறன் முகாம் அண்மையில் வல்வெட்டித்துறை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தச் செயற்பாடுகளில் 85 முன்பள்ளிச் சிறார்களும் அவர்களுடைய பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இந்தச் செயற்பாடுகளில் பங்கு பற்றுவதற்கு வருகை தந்திருந்த முன்பள்ளிச் சிறார்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுடன் வருகை தந்திருந்த பெற்றோர்களும் குழுக்களாகப்பட்டு செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தச் செயற்பாடுகளில் ஒருபகுதியாக கலாநிதி ச.இராஜேந்திரனின் கதை கூறும் நிகழ்வுகளும், முன்பள்ளி தொடர்பான வீடியோ படக் காட்சிகளும் இடம்பெற்றன.

குழுச் செயற்பாடுகளில் எழுத்துக்களை இனங்காணுதல், சொற்களை இனங் காணல், கேத்திர கணித உருக்களை இனங்கண்டு பொருத்துதல், பொருள்கூட்டத்தைத் தொடர்புபடுத்துதல், விஞ்ஞான் எண்ணக் கருக்கள் தொடர்பான செயற்பாடுகள், வர்ணம் தீட்டுதல் மற்றும் அழகிய பெரிய படங்கள் கொண்ட நூல்களைப் பார்வையிடுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றன.

(ம-8)

### கூட்டுறவுப் பணியாளர் விவரம் திரட்டல்

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவு பணியாளரின் விவரம் திரட்டப்பட்டுள்ளதாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவி த்தன.

இந்த விவரக்கொத்தில் கூட்டுறவு பணியாளர்கள் மற்றும் சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் விவரம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சங்கப் பணியாளர்களின் தரவுகளை அறியும் முகமாக இந்த விவரக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.நகரில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை தீருவதாக இல்லை. அது நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.பஸ் தரிப்பிடம் மற்றும் முற்ற வெளிப்பகுதிகளிலும் கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.

இரவு நேரங்களில் கூடும் கட்டாக்காலிகள் வீதிகளில் நின்று அட்டகாசம் செய்வதுடன் பஸ்தரிப்பிடங்களையும் அசிங்கம் செய்து வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் ஏற்படும் நிலைமையும் காணப்படுகிறது. (ம-17)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

சண்டிலிப்பாய் பிரதேச செயலக குழுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

(ம-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மண்டபத்தில்இயங்கும் பாடசாலை

பூநகரி மட்டுவில்நாடு அ.த.க. பாடசாலை பொது மண்டபம் ஒன்றில் இயங்கி வருகிறது.

50 மாணவர்களுடன் இயங்கிவரும் இந்தப் பாடசாலை 1991 ஆம் ஆண்டு பூநகரி மீது இராணுவத்தினர் மேற்கொண்ட வலம்புரிப்படை நடவடிக்கையின்போது மூடப்பட்டது. பின்னர் 2004 ஆம் ஆண்டு சமாதான காலத்தின் பிற்பகுதியில் சிறிது காலம் இயங்கியது. பின்னர் போர் மூண்ட போது மூடப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து மீண்டும் இயங்கி வருகின்றது.

ஆனால் பாடசாலைக்கென நிரந்தர அல்லது தற்காலிகக் கட்டடம் எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. இந்தப் பாடசாலை பொதுமண்டபத்தில் இயங்கினாலும் நல்ல குடிதண்ணீர்க் கிணறு உள்ளமை பெரிய ஆறுதலாக உள்ளது.

பூநகரியில் 12 பாடசாலைகளுக்குப் பூநகரிப் பிரதேசசபை குடிதண்ணீரை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவர்களும் ஆசிரியர்களும்

கிளிநொச்சி,ஏப்.7

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரி கல்விக் கோட்டத்தில் தற்போது எட்டுப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 23 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 5 ஆயிரத்து 423 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இங்குள்ள 60 வீதமான பாடசாலைகளில் குடிதண்ணீர்ப் பிரச்சினையுள்ளது. தற்போது ஒன்பது பாடசாலைகளுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை அதிகமான பாடசாலைகளில் ஆசிரியர் வளம் என்பது பாடரீதியாக மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது.

அத்துடன் பௌதீகவளப் பற்றாக்குறைகளுக்கும் இந்தப் பாடசாலைகள் முகம் கொடுத்து வருகின்றன. இதனைவிட இங்குள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் விடுதி வசதிகள் இன்றியும் சீரான போக்குவரத்து வசதிகளின்றியும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மாணவர்களும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-6)

## தடைப்பட்டு நிற்கும் மன்னார் – யாழ். பஸ்சேவை

மன்னார்,ஏப்.7

மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பஸ் சேவைகள் இடம்பெறாமை தொடர்பாக பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மன்னாரில் இருந்து சங்குப்பிட்டிப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கான அரச பஸ் சேவைகள் மன்னார் சாலையால் இயக்கப்பட்டன. ஆனால் தற்போது இந்த பஸ் சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் பலரும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதற்கான காரணம் கேட்டால் போதியளவு பஸ்கள் இல்லை. வருமானம் போதாது என்ற பதில்களே அதிகாரிகளிடமிருந்து கிடைக்கின்றன.

இந்த நிலையில் மன்னார்ச் சாலைக்கு வழங்கப்படுகின்ற பஸ்கள் கற்பிட்டி, புத்தளம் உள்ளிட்ட வேறு பகுதிகளில் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்துக்கான சேவை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக மன்னார் சாலை முகாமையாளருடன் தொடர்பு கொள்வதற்குப் பல தடவைகள் முயற்சி செய்தபோதிலும் முடியவில்லை. (க-12)

# சிறந்த சாரணர்களுக்கு விருது

தென்மராட்சி,ஏப்.7

பாசறைகளில் சாரணர் செயல்பாடுகளைத் திறம்பட வெளிப்படுத்திய காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த சாரண ஆணையாளர், உதவி ஆணை யாளர், சாரணர் தலைவர் உட்பட 40 சாரணர்கள் சிறந்த சாரணர் செயற்பாடுகளுக்கான விருதைப் பெற்றுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் தம்புள்ள சேன நாயக்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் இலங்கை சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய சாரணர் சங்கங்களின் 2 ஆவது ஆண்டு விழா ஆகியவற்றின் ஒன்றுகூடல் நிகழ்வில் இவர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட் டுள்ளனர்.

இந்த நிகழ்வில் இலங்கை உட்பட 24 நாடுகளைச் சேர்ந்த 7 ஆயிரம் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட பல சாரணர் ஆணையாளர்களைக் கவர்ந்த காங்கேசன்துறை சாரணர் மாவட்ட சாரணர்களின் வீரதீர செயல்களுக்காக மாவட்ட ஆணையாளர் என். இரவீந்திரன் உதவி ஆணையாளர் ஜெயபவான், சாரணத் தலைவர் பொ.தயாளன் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட 40 சாரணர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, தென்மராட்சி, மன்னார், முல்லைத்தீவு,வவுனியா ஆகிய சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட சாரணர்கள் மாவட்ட ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் சாரணர் தலைவர்கள் கலந்து கொண்டனர். (ம-9)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது நாய் குறுக்கே ஓடியதில், நிலை தடுமாறி மின் கம்பத்துடன் மோதி இருவர் காயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நல்லூர் இளங்கலைஞர் மன்றத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த குலசிங்கம் அமுதீசன் (வயது-16) என்பவர் தலையில் படுகாயமடைந்து அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார். நல்லூரைச் சேர்ந்த சுனிநாயகம் சசிகாந் (வயது-19) காயமடைந்த மற்றைய நபராவார். (10-4)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் திருநாவுக்கரசு (சர்க்கரை)



புலோலி மேற்கு, கார்த்திகேசர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் திருநாவுக்கரசு (சர்க்கரை) கடந்த (04.04.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலப்பர் வல்லிபுரம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஆழ்வாப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சீனிக்குட்டி, செல்வராசா, பாக்கியம், திருப்பதி, தங்கம்மா மற்றும் கிருஷ்ணப்பிள்ளை, சூரியப்பிரகாசம், சந்திரப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும், சாந்தினி, திருச்செல்வம், திருக்குமார், தயாளினி, சறோஜினி, திருப்பவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் (லண்டன்), லோகேஸ்வரி, கிருபானந்தி (ஜேர்மனி), இராசகுமார், தர்சிகா (லண்டன்), ஜெயராஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், சாரதா, விஜிதா, மயூரன், சுஜிவன், சனுஷா, சயந், அபிராமி, சுனுஜா, சிந்தூரி, திரிசிக்கா, பலனிக்கா, தாமரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கார்த்திகேசர் வீதி,
புலோலி மேற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## துரையர் குணராஜா



நாவற்காடு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரையர் குணராஜா நேற்று (06.04.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையர் - பூரணம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், மருதர் - அமுதம் தம்பதியரின் மருமகனும், துரையம்மாவின் அன்புக் கணவரும் சர்வகுணேஸ்வரி (சமூக அபிவிருத்தி மன்றம், கட்டுமலை கந்தன் கழக பொருளாளர்), சரோஜினிதேவி, சதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேந்திரன் (பெரியண்ணா), சேனாதிராஜா (கட்டார்), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனும், இராசமணி, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் துரைசிங்கம், சந்தணம், இராசலட்சுமி, நவரத்தினராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி புவனேஸ்வரி அருணாசலம்

### (7ஆம் வட்டாரம், நயினாதீவு)



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருணாசலம் நேற்று (06.04.2012) வெள்ளிக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மரு மகளும் அருணாசலத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
அம்பிகைதாசன்
சுமித்திரா (மகள்)


# மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்



திரு. திருமதி கோபாலபிள்ளை
அன்னலெட்சுமி தம்பதியரின்
ஏக புதல்வன்

திருவாளர்
**கோ. கதிர்காமநாதன்**
(K.K.நாதன் - யாழ். பிரதம தபாலகம்)

இன்று [07.04.2012] சனிக்கிழமை தனது 60ஆவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் கொண்டாடும் மணி விழா நாயகனை நயினை நாகபூஷணி அம்மனின் அருளாசி பெற்று சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் சீரும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு. திருமதி க.ந. ஜெயசிவதாசன் குடும்பம் (கனடா)
திரு. திருமதி க.ந. ஸ்ரீமுருகதாசன் குடும்பம் (கனடா)
திரு. திருமதி K.K.செல்வராசா குடும்பம் (கனடா)
திரு. திருமதி கி. சோதிதாசன் குடும்பம் (பிரான்ஸ்)
திரு. திருமதி கி. கெங்காதரன் குடும்பம் (பிரான்ஸ்)
திரு. திருமதி கி. கிருஸ்ணராஜா குடும்பம் (பிரான்ஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் (28.04.2012) நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 2012 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோரே கூட்டத்திற் கலந்து கொள்ள உரித்துடையவராவார்.

பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 15.04.2012 இற்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தி. செல்வமனோகரன்
செயலாளர்.

(அ/703) (45.6.7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பையா கணேசு**
(தந்தை மகற்கு ஆற்றும் உதவி அவையத்துள் முந்தியிருப்பச் செயல்)

தோற்றம் 14 ★ 02 ★ 1943
மறைவு 07 ★ 04 ★ 2008

அன்பால் அரவணைத்து ஆசையாய் அறிவுரை கூறி
இனிய சொல்லால் எம்மை வழிநடத்தி
ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மக்களை
சான்றோன் எனக்கேட்ட (எம்) அப்பாவின்
நினைவுடன்.

குடும்பத்தினர்
டச் றோட், மானிப்பாய்.

(18530) (45 .6 .7)

## மரண அறிவித்தல்கள்



திருமதி
**புவனேஸ்வரி இராமலிங்கம்**

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராமலிங்கம் 03.04.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமுநாயகம்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பூமணி, சீதாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சேதுலிங்கம் (கனடா), காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் லிங்கேஸ்வரி (லண்டன்), லிங்கநாயகி (சுவிஸ்), பஞ்சலிங்கம், காலஞ்சென்ற தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், பத்மலோஜினி (கனடா), கோவிந்தராசன் (லண்டன்), இராஜசேகரம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரி, ரஞ்சினி ஆகியோரின் மாமியும் வைஷ்ணவி, கீர்த்தனா, நிருஷி, விஷாலி, ஜனனி காலஞ்சென்ற அஸ்வினி மற்றும் அஸ்வின், யதுஷன், அபிநயா, காலஞ்சென்ற குறிஞ்சிமாறன் மற்றும் ஜெகதீஸ்வரன், சுடர்விழி, அபிலாஷ், புகழ்சீலன், நீருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை லீலா கடையடி மூளாய் வட்டுக்கோட்டை , தெற்கிலுள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லீலா கடையடி,
மூளாய், வட்டுக்கோட்டை தெற்கு

தகவல்:
குடும்பத்தினர்



**அப்பாத்துரை துரைராசா**
(ஓய்வுபெற்ற முன்னாள் செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அப்பாத்துரை துரைராசா (05.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ர புதல்வரும், காலஞ்சென்ற தம்பிராசா - இரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (பொறுப்பதிகாரி வ.மே. பிரதேச சபை, உப அலுவலகம், சங்கானை), வசந்தி, ஜெயந்தி, கருணாகரன் (M.P.C.S. சுன்னாகம்), சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயதாரணி (ஆசிரியை, யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), சிவசண்முகநாதன், இராசரத்தினம், சுமதி (ஆசிரியை, யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), செந்தூரன் ஆகியோரின் மாமனும், கார்த்திகா, பரன்குன்றன், மயூரன், லாவண்யன், விதுசா, மகீபன், கேமரூபன், பிறேமரூபன், அபர்ணா, யானுகா, சமீரணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.04.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கு விலங்கன் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்

# மண், சிப்பி ஏற்ற கல்லுண்டாயில் தடை

நவாலி,ஏப்.7

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய்ப்பகுதியில்மண்அகழ்வு மற்றும் சிப்பி எடுத்தல் போன்றவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அனுமதி இல்லாமல் பகல் இரவாக களவாக உழவு இயந்திரங்கள் மூலம் மண் ஏற்றிச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இதனால் கடல் நீர் குடிமனைகள், வயல் நிலங்களுக்குள் புகும் அபாயம் உள்ளதாகவும் கிணற்று நீரும் உப்பாகும் தன்மை ஏற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன், அனுமதியின்றி மண் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

இதனை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

# கைப்பேசி பாவனை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.7

இலங்கையில் மக்கள் மத்தியில்கையடக்கத் தொலைபேசியின் பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சிறு வியாபாரிகளது வர்த்தக நடவடிக்கைகளுக்கும், கையடக்கத் தொலைபேசிகள் முக்கிய கருவியாக மாறியுள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

தொலைபேசி ஊடாக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, பயணிக்கும் செலவு குறைவடைகின்றமையால், இதன் மூலமான வர்த்தக நடவடிக்கைகள் விரும்பப்படுகின்றன.

இதன் காரணமாக வறிய மக்கள் மத்தியிலும் கையடக்கத் தொலைபேசியின் பாவனைகள் அதிகரித்துள்ளது. (எ)

# தொலைபேசிக் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7.

யாழ். மாம்பழம் சந்தியிலுள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 12 கைத்தொலைபேசிகளும், டி.வி.டி. பிளேயர் மற்றும் டொங்கிள் என்பன திருடப்பட்டுள்ளன என யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடையின் கதவை உடைத்துத் திருடர்கள் திருட்டை மேற்கொண்டுள்ளனர் என கடை உரிமையாளர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

அருகில் இராணுவக் காவலரண் ஒன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (10-4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை நகரப் பகுதியில் கடை வாடகைக்கு உண்டு. விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு - 0774366704

## வீடு வாடகைக்கு

மானிப்பாயில் நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு - 0770544157, 0718818460

## சாரதிகள் தேவை

லொறியில் பூட்டிய தண்ணீர் பவுசரும், உழவு இயந்திரமும் செலுத்தக்கூடிய சாரதிகள் தேவை. (வேலை மடுப்பகுதியில்) தொடர்பு - 0776154078, 0774142809

## பணிப் பெண் தேவை

சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி இருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.
(சம்பளம் - 10,000/- ரூபா)
தொடர்பு - 0776450286

## விநியோகஸ்தர்கள் தேவை

Water, Fruit Drinks, Choconut Lozenger, Noodles, String Hopper Flour, Milk Toffe, Kaju Toffe, Care Drop Toffe, Coconut Toffe, Pen ஆகிய பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு கீழ்வரும் பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. வவுனியா

மேலதிக விவரங்களுக்கு:
தொ.பே. 0772487465, 0727493422

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**தம்பிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.04.2012) சனிக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 09.04.2012 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளுக்குத் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் **திரு. வாமதேவா தியாகேந்திரன்** அவர்களினதும் எமது பணிப்பாளர் **திரு. செல்லப்பா கமலநாதன்** அவர்களதும் பாசமிகு மாமி

அமரர்
**சிவக்கொழுந்து சதானந்தா**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தியாகி அறக்கொடை நிறுவன பணியாளர்கள்,
TCT பல்பொருள் அங்காடி பணியாளர்கள்,
TCT சிறுவர் இல்ல பிள்ளைகள், பணியாளர்கள்,
TCT சுற்றுலா விடுதி பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்

**இராசையா சிவானந்தன் (பவான்)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 566/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமாகிய இராசையா சிவானந்தன் 04.04.2012 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-நல்லம்மா தம்பதியரின் மகனும், நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லையா-கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லவகுமார், சுரேஸ்குமார் மற்றும் ரமேஸ்குமார் (பிரான்ஸ்), சிவகிருபா (தெஹிவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்புச் செல்வன் (கணக்காளர், மாலைதீவு), பிரியதர்ஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சிந்துராஜா, விவேகானந்தன், ரவீந்திரன் மற்றும் ரமணானந்தன், திருமதி ஜெயகௌரி குலசிங்கம், சுத்தானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேசவன், ஆருசன், கிருஷிகன், ஆரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.04.2012) சனிக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 08.04.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/14 B, Ratnasri Fonseka Mawatta,
Kawadana Road, Dehiwala.

தகவல்:
சி.மகேஸ்வரி (மனைவி)

(16564) (6.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மர் மீதான தடைகளை தளர்த்த அமெரிக்கா முடிவு



மியான்மரில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அங்கீகரிக்கும் வகையில் அதன் மீதான பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மியான்மரில் மேற்கொள்ளப்படும் சாதகமான மாற்றங்களைத் தாம் முழுமையாக அங்கீகரிக்கிறார் என்று தெரிவித்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன், அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கான தடை நீக்கப்படவுள்ளது என்றும் அத்துடன் நிதி சேவைகளை வழங்கும் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது என்றும் கூறினார்.

மியான்மர் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ஆன் சாங் சூகி வெற்றிபெற்று மூன்று நாள்கள் கடந்துள்ள நிலையில், ஹிலாரி கிளின்டன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மியான்மரில் மனித உரிமைகள் மீறப்படுவதன் காரணமாக அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

> மியான்மரில் மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் காரணமாக அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலியில் போர் நிறுத்தம் கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு



நாட்டின் முக்கிய பகுதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில் மாலியில் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அரச படைகளுடன் இடம் பெற்ற மோதல்களை அடுத்து முன்னாள் இராணுவத்தினர் பலரை உள்ளடக்கிய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்கள் மாலியின் நிர்வாகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வலியுறுத்தி இருந்தது குறிப் பிடத்தக்கது.

எனினும் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தி மாலியின் நிர்வாகத்தை மீண்டும் அரசிடம் கையளிக்க மேற்கு ஆபிரிக்க நாடுகள் முயற்சித்து வருகின்றன.

# இஸ்ரேல் மீது எகிப்து ரொக்கெட் தாக்குதல்

எகிப்தின் சீனாய் பாலைவனத்தில் இருந்த குடியிருப்புக்கள் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


தெற்கு இஸ்ரேல் நகரான எலைட் பகுதி மீது இந்த ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இதனால் உயிர், பொருள் சேதம் எதுவும் ஏற்படவில்லை என இஸ்ரேல் பொலிஸார் தெரிவித்தனர்.

இஸ்ரேலின் சுற்றுலாத் தளமான பஸ்ஸோவருக்கு அருகில் நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

எகிப்தில் ஹொஸ்னி முபாரக் அரசு கவிழ்க்கப்பட்டதன் பின்னர் இஸ்ரேல்-எகிப்து எல்லைப் பகுதியில் மோதல்கள் அதிகரித்து வருகின்றன. 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் எகிப்திலிருந்து இஸ்ரேலுக்குள் ஊடுருவிய ஆயுததாரிகள் 8 இஸ்ரேலியர்களைச் சுட்டுக்கொன்றனர்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் எகிப்தின் 5 எல்லைப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து இஸ்ரேல்-எகிப்துக்கு இடையில் அடிக்கடி மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.



சிரியாவில் அரசு படைகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தலைநகர் டமாஸ்கஸில் படுகாயமடைந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் மீட்புப்படையினர் அங்கு முகாமிட்டுள்ளனர்.

# இஸ்லாமிய நாடாக மாறுமா மாலி?

## பிரான்ஸ் கவலை

மாலியின் வடபகுதியில் துவாரெக் பிரிவினைவாதிகளின் ஆதிக்கம் வளர்ந்து வருவதால் அல்குவைதா இயக்கத்தின் செல்வாக்கும் வளர்ந்து வருகிறது என்று பிரான்ஸ் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பிரான்ஸின் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான பெர்னார்ட் பலேரோ, '' வடக்கு மாலியில் அரசியல் சூழ்நிலை நிலையற்றதாக உள்ளது. அங்கு அல்குவைதா இயக்கத்தினரின் முக்கியத்துவம் வளர்ந்து வருவது, பிரான்ஸுக்கு கவலை அளிக்கிறது'' -என்றார்.

பிரான்ஸ் வெளி விவகாரத்துறை அமைச்சர் அலைன் ஜுப்பே,''அகிம் இயக்கத்தாரிடம் மாலி சிக்கிவிடுமோ? அவர்கள் அந்த நாட்டை இஸ்லாமியக் குடியரசாக மாற்றி விடுவார்களோ ''என்று அச்சம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்தார்.

> வடக்கு மாலியில் அரசியல் சூழ்நிலை நிலையற்றதாக உள்ளது. அங்கு அல்குவைதா இயக்கத்தினரின் முக்கியத்துவம் வளர்ந்து வருவது, பிரான் ஸுக்கு கவலைஅளிக்கிறது''

பிரான்ஸின் ஐ.நா. தூதுவர் ஜெரார்ட் அராட், "வடக்கு மாலியில் நடக்கும் கலவரத்தை ஒடுக்குவதற்காக சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைக் கோர வேண்டும்'' - என்றார்.

இதேவேளை வடக்கு மாலியில் நடக்கும் கலவரத்தை உடனே நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகளுக்கு ஐரோப் பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# வடகொரியா நபருக்கு தென்கொரியாவில் சிறை



சியோல்,ஏப்.7

விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்ய முற்பட்ட வட கொரிய நபருக்கு தென்கொரிய நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

தென்கொரியாவின் உயர்மட்ட செயற்பாட்டாளர் ஒருவரை விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்யச் சதி செய்தார் என்று அன் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அவருக்கு சியோலிலுள்ள நீதிமன்றம் நான்கு ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

பார்க் சங் ஹக் என்ற வடகொரியாவுக்கு எதிரான செயற்பாட்டாளரை கொலை செய்ய குறித்த நபருக்கு அந்த நாடு உத்தரவிட் டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# நாள்முழுவதும் கண்காணிப்பு

## பேஸ்புக் மீது டுபாயில் அதிரடி

டுபாயில் 24 மணிநேரமும் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக இணையத் தளங்களை பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் அரசியல்வாதிகளுக்கு எதிரான கருத்துகளை லட்சக்கணக்கான மக்கள், பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்கள் வழியாகப் பரிமாறிக் கொள்கின்றனர். இதனால், எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் புரட்சி வெடித்தது. சீனாவிலும் இதுபோன்ற விமர்சனங்கள் இணையத்தளங்களில் பரவலாக வெளியானதால், பல இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பேஸ்புக், டுவிட்டர் போன்ற இணையத் தளங்களை 24 மணி நேரமும் கண்காணிக்கும் பணியில் டுபாய் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து டுபாய் 'சைபர் கிரைம்' துணை இயக்குநர் சலீம் ஒபய்த் சல்மீன் '' சமூக இணையத் தளங்களில் குற்றங்களைத் தடுக்க 24 மணி நேரமும் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். விதிகளை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படும்'' - என்றார்.

# சீன அரச இணையங்கள் முடக்கம்

சீன அரசின் இணையத் தளங்களை சர்வதேச இணைய ஊடுருவல்கள் நேற்று முடக்கியுள்ளன. இந்த இணையத் தளங்களை செயற்பட வைக்க சீனா கடும் முயற்சி எடுத்து வருகிறது.

இணையத்தளங்களுக்கு சீனா கட்டுப்பாடுகளை விதித்ததை எதிர்த்து இவ்வாறு அரச இணையத்தளங்கள் முடக்கப்பட்டதாக இணைய ஊடுருவிகள் குறிப்பிட்டுள்ளன.

சீன இணையத்தளங்களை முடக்குவதாக டிவிட்டரில் வெளியான எச்சரிக்கையைத் தொடர்ந்தே அந்த நாட்டு அரச இணையத் தளங்கள் முடக்கப்பட்டுள்ளன

இதில் முடக்கப்பட்ட இணையத்தளங்களின் முகப்புப் பக்கத்தில் ஆங்கிலத்தில் இணைய ஊடுருவல்கள், சீன அரசை விமர்சித்து, அதன் இணைகட்டுப்பாட்டுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது.

> இணையத் தளங்களுக்கு சீனா கட்டுப் பாடுகளை விதித் ததை எதிர்த்து இவ் வாறு அரச இணை யத் தளங்கள் முடக் கப்பட்டதாக இணைய ஊடுருவிகள் குறிப்பிட்டுள்ளன.

# நடுவானில் நாகத்தால் பரபரப்பு

மெல்பர்ன்,ஏப்.7

ஆஸ்திரேலியாவில் விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்தபோது, விமானியின் அறைக்குள் திடீரென நாகபாம்பு வந்ததால், விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

விமானம் புறப்பட்ட 20 நிமிடங்களில் விமானியின் அறைக்குள் பாம்பு ஒன்று நுழைந்ததால் பீதியடைந்த விமானி, விமானக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் அளித்துள்ளார். இருப்பினும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் அருகில் இருந்த நிலத்தில் விமானத்தை அவசரமாகத் தரையிறக்கினார்.


# பிரான்ஸ் அணு உலையில் தீ விபத்து

பரிஸ்,ஏப்.7

பிரான்ஸில் செயற்பட்டு வரும் அணுமின் நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் டையிப்ப நகரில் உள்ள அணுமின் நிலையத்தில் இரண்டு உற்பத்திப் பிரிவுகளில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சுற்றுச்சூழலில் எவ்வித பாதிப்பும் இல்லை என்று அணுமின் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். பிரான்ஸில் மொத்தம் 58 இற்கும் மேற்பட்ட அணுமின் நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. உலகில் அணுமின் நிலையம் செயற்படுத்தும் நாடுகளின் வரிசையில் பிரான்ஸ் முன்னிலை வகிக்கிறது. மின்தேவைக்கு 75 சதவீதம் வரை அணுமின் நிலையத்தையே நம்பியுள்ளது.



பிரான்ஸில் எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் பிரசாரத்தில் அணுமின் நிலையம் குறித்த பிரச்சினை முக்கிய விவாதமாக இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியின் மகனை ஒப்படைக்க குற்றவியல் நீதிமன்றம் உத்தரவு

லிபியாவின் முன்னாள் அதிபர் மும்மர் கடாபியின் மகன்களில் ஒருவரான சைஃப் அல் இஸ்லாம் கடாபியை உடனடியாகத் தம்மிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் லிபிய அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நெதர்லாந்தில் உள்ள ஹேக் நீதிமன்றம் இது தொடர்பில் விடுத்துள்ள உத்தரவில், ''அல் இஸ்லாமிற்கு சர்வதேச பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரை ஒப்படைப்பதற்கு லிபியாவின் புதிய அரசு தாமதம் செய்து வருகிறது. இது லிபிய நீதித்துறை நடவடிக்கைகளை கேள்விக்குறியாக்கியுள்ளது. ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு அமைவாக நடக்க வேண்டியது லிபியாவின் கடமை. எனவே உடனடியாக அவரை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும்'' என்று நெதர்லாந்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டால் சிறைத் தண்டனை மாத்திரமே வழங்கப்படும்**



அல் இஸ்லாம் லிபியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் கேள்வி எழுப்பியுள்ளன. கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் கடாபி கொல்லப்பட்ட நிலையில், சஹாராப் பாலைவனத்தின் பெடூயின் பூர்வீக இன மக்கள் பகுதியில் வைத்து அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டார்.

அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் லிபிய நீதிமன்றத்தால் அவருக்கு மரண தண்டன வழங்கப்படலாம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டால் சிறைத் தண்டனை மாத்திரமே வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்ரேலிய அரசு மீதான குற்றச்சாட்டு நிராகரிப்பு

**விசாரிக்கக் கோரிய பலஸ்தீன முறைப்பாட்டை சர்வதேச குற்றவியல் நீதிமன்றால் தள்ளுபடி**

இஸ்ரேல், காஸா பகுதியில் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்யுமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பலஸ்தீன நிர்வாகம் செய்த முறைப்பாட்டை அந்த நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இஸ்ரேல் கடந்த 2008 டிசெம்பர் மற்றும் 2009 ஜனவரி மாதங்களில் காஸா பகுதியில் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் குறித்தே விசாரணை நடத்துமாறு பலஸ்தீன் நிர்வாகம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் உடன்படிக்கையின்படி சர்வதேச அங்கீகாரம் பெற்ற தேசம் ஒன்றினாலேயே இந்த முறைப்பாட்டை செய்ய முடியும் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பலஸ்தீனக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்ததற்கு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன. ஆனால் அந்த முடிவை இஸ்ரேல் அரசு வரவேற்றுள்ளது.

## சயீத் மீதான நடவழக்கைக்கு கூடுதல் ஆதாரம் கேட்கிறது பாக்.

தீவிரவாதி ஹபீஸ் சயீத் மீது கூடுதல் ஆதாரங்கள் இந்தியா வழங்காமல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று பாகிஸ் தான் அரசு கூறியுள்ளது.

உலகையே உலுக்கிய மும்பைத் தாக்குதலில், லஷ் கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பு ஈடுபட்டதற்கான ஆதாரங்களைப் பாகிஸ்தானிடம் இந்தியா அளித்தது. அந்தத் தீவிரவாதிகளை ஒப்படைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால், பாகிஸ்தான் அரசு, லஷ்கர் இயக்கத்துக்குத் தடை விதித்ததுடன் தனது நடவடிக்கையை நிறுத்திக் கொண்டது. இதனால், லஷ்கர் தீவிரவாதி ஹபீஸ் சயீத், ஜமாத் உத் தவா என்ற புதிய இயக்கத்தை தொடங்கி, பாகிஸ்தானில் சுதந்திரமாக உலா வருகிறார்.

இந்த நிலையில், சயீத் தலைக்கு ரூ.50 கோடி விலை நிர்ணயித்து அமெரிக்கா திடீரென அறிவிப்பு வெளியிட்டது. இதற்கு, தீவிரவாதி சயீத்,'' ஒசாமா பின்லேடன் மீது தாக்குதல் நடத்தியது போன்று என் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தட்டும் ''என்று அலட்சிய மாகப் பதிலளித்திருந்தார்.

அவரது கருத்துக்கேற்ப பாகிஸ்தான் அரசும் அவ ருக்கு ஆதரவாகப் பேசுகிறது. இஸ்லாமாபாத்தில் அந்த நாட்டு வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் அப் துல் பாசித் ''ஹபீஸ் சயீத்துக்கு தீவிர வாதச் செயல்களில் தொடர்பு இருப்பதற்குப் போதுமான ஆதாரம் இல்லை. எனவே, கூடுதல் ஆதாரம் இல்லாமல் பாகிஸ்தான் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது''- என்றார்.

## கென்யாவில் நிலச்சரிவு

**சிக்கி 11 பேர் சாவு**

நைரோபி,ஏப்.7

கென்யாவின் நைரோபியில் பெய்த கடும் மழையினால் அங்குள்ள மலைபகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. பாறைகள் உருண்டு வீடுகள் மீது விழுந்தன. இதில் 40 வீடுகள் முற்றிலும் நாசமாகின. 11 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

பாறைகளுக்கு அடியில் சிக்குண்டு தவித்த 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஏராளமானோர் காணாமற் போயுள்ளனர். அவர்களில் பலர் உயிரிழந்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கென்யாவில் போதிய மீட்புக் கருவிகள் இல்லாததால் மீட்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.09.1936

மறைவு
21.03.2000

### திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்

திதி:- 07.04.2012

அழகாகச் சீவி முடிந்த கூந்தல்
அதில் அழகாக ஒரு பூ
நெற்றியிலே விபூதியுடன்
குங்குமப் பொட்டும் இட்டு
காலையிலே நாம் கண்விழிக்கும் போது
பார்க்கவே சந்தோஷமாக இருக்கும் அம்மா

கணவர் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்
எல்லோர் மீதும் எவ்வளவு அன்பு
வந்தோரை வரவேற்று உபசரிக்கும் பண்பு
இதை எல்லாம் இழந்து இன்று
பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது அம்மா
இப்படி ஒரு அம்மாவை இனி எப்பிறப்பில்
காண்போம் நாங்கள்

அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்.

அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ.பரராஜசிங்கம்,
82/1, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(16500) (2-6-7)

## மரண அறிவித்தல்



### சவரிமுத்து திரேசா அன்னமேரி

பருத்தித்துறை, கடற்கரை வீதியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து திரேசா அன்னமேரி நேற்று (06.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு தோமாஸ் மற்றும் பிரான்ஸ்கா தம்பதியரின் அன்பு மகளும், சந்தியாப்பிள்ளை சவரிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - வரவணிக்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், Dr. நிமதி (விஜி) இன் அன்புத் தாயும் Dr.பிறைற்றின் அன்பு மாமியும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் முத்துராஜா (பிரான்ஸ்), பவளம் (நோர்வே), அடைக்கலம், திரவியம், லூத்துராசா, பொன்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அவுஸ்ரேலியாவை சேர்ந்த றொஷான், றொகானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (07.04.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 நாட்டு வெடிகுண்டுகள் படகுகளிலிருந்து பறிமுதல்

### கன்னியாகுமரியில் பதற்றம்



குளச்சல், ஏப்.7

கன்னியாகுமரி மாவட்டம், முட்டத்தில் படகுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 64 நாட்டு வெடிகுண்டுகளை பொலிஸார் கைப்பற்றினர்.

குமரி மாவட்டம் முட்டம் கடற்கரைக் கிராமத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற பங்குப் பேரவை தேர்தலில் இரு பிரிவினிடையே மோதல் ஏற்பட்டது. முன்விரோதம் காரண மாக இரு குழுக்களும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றன. வெளியூர்களில் தங்கி மீன் பிடிக்கும் மீனவர்கள், பண்டிகை காலங்களில் சொந்த ஊருக்குத் திரும்புவார்கள். அப்போது அவர்களிடையே மோதல் ஏற்படும்.

நாளை ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப் படவுள்ளது. இதற்காக பல்வேறு இடங்களில் தங்கியிருந்த முட்டம் மீனவர்கள் சொந்த ஊருக்குத்திரும்பியுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பொலிஸார் குவிக்கப் பட்டிருந்தனர். அதையும் மீறிக் கடந்த புதன்கிழமை பொன்னன்தோப்பு பகுதியில் இரு தரப்பினர் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. ஒருவர் தாக்கப்பட்டார். இது தொடர்பாக 21 பேர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை முட்டம் கடற்கரையில் நிறுத்தப்பட்டி ருந்த பழுதடைந்த படகு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நாட்டு வெடி குண்டுகள்வெடித்துச்சிதறின.

இதனால் அந்தப்பகுதி மக்கள் பீதிய டைந்தனர். இதைத் தொடர்ந்து நெல்லை டி.ஐ.ஜி. வரதராஜு, எஸ்.பி. பிரவேஷ்குமார் தலைமையில் பொலிஸார் முட்டம் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளில் சோதனை நடத்தினர். அப்போது 3 பைபர் படகுகளில் இருந்து. 64 நாட்டு வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன.

அவற்றை செயலிழக்கச் செய்யும் பணியில் குளச்சல் பொலிஸ் அதிகாரி பிரபாகரன், மணவாளக்குறிச்சி பொலிஸ் அதிகாரி மனோகரன், வெடிகுண்டு செயலிழப்புப் பயிற்சி பெற்ற இன்ஸ்பெக்டர் முருகேசன் உள்ளிட்டோர் ஈடுபட்டிருந்தனர். அப்போது எஸ்.ஐ. முருகேசன் கையில் இருந்த ஒரு குண்டு திடீரென வெடித்துச் சிதறியது. படுகாயமடைந்த அவரை நாகர்கோயிலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். படகு களில் இருந்து வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (வ)

# அமெரிக்க போர் விமானம் சென்னையில் தரையிறக்கம்

அமெரிக்க போர் விமானம் ஒன்று கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இந்த விமானம், சென்னை வந்ததற்கான காரணம் வெளியிடப்படவில்லை. சுமார் ஒரு மணி நேரத்துக்கு பின்னர், அந்த விமானம் புறப்பட்டுச் சென்றது.

இந்த விமானம், எதற்காக சென்னை வந்தது என்ற தகவல் வெளியிடப்படவில்லை. இதுகுறித்து, விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

அமெரிக்க போர் விமானங்கள் கூட்டுப்போர் பயிற்சிக்காக வருவது வழக்கமான ஒன்றுதான். இதில் எந்த முக்கியத்துவமும் இல்லை. முறையான அனுமதியுடன்தான் அந்த விமானம், சென்னையில் தரையிறங்கியுள்ளது.

இந்தியக் கடலோரக் காவல் படையுடன் கூட்டுப் போர் பயிற்சி செய்வதற்காகக்கூட, அந்த விமானம் சென்னை வந்திருக் கலாம். அமெரிக்க போர் விமானத்தில் யார் வந்தார்கள், எங்கு சென்றார்கள் என்பது குறித்து, எந்தத் தகவலும் இல்லை - என்றார். (வ)

# இழுவைக் கப்பல்கள் தூத்துக்குடியில் அணிவகுப்பு



தூத்துக்குடி, ஏப்.7

தேசிய கடல்சார் தினத்தை முன்னிட்டு, தூத்துக்குடி துறை முகத்தில் இழுவை கப்பல்களின் அணிவகுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி மும்பை துறைமுகத்தில் இருந்து லண்டனுக்கு எஸ்.எஸ்.லாயல்டி என்ற பயணிகள் கப்பல் முதன் முறையாக பயணித்தது. இந்த கடல் வாணிபப் பதிவு நிகழ்வு வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. இதனை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 5 ஆம் திகதி தேசிய கடல்சார் தினம் கடைப்பிடிக்கப்பட்டு, கோலாகலமாக கொண்டாடப்பட்டும் வருகிறது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 49ஆவது தேசிய கடல்சார் தினம் கொண்டாடப் பட்டது. துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பல்கள் அலங்கரிக்கப் பட்டிருந்தன. காலையில் பழைய துறைமுகத்தில் உள்ள கப்பல் மாலுமிகளின் நினைவிடங்களுக்கு துறைமுக அதிகாரி சுப்பையா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

துறைமுக இழுவை கப்பல்களின் கண்கவர் அணி வகுப்பு நடைபெற்றது. மேலும், கப்பல்களில் தீ விபத்துகள் ஏற்பட்டால் தவிர்ப்பது, தடுப்பது, பாதுகாப்பது எப்படி? என்பது குறித்து இழுவைக் கப்பல்களில் இருந்து தண்ணீர் பீய்ச்சியடிக்கப்பட்டு செயல்முறை விளக்கம் அளிக் கப்பட்டது. (வ)

# தீவிரவாதிகள் 5 பேர் காஷ்மீரில் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஏப்.7

காஷ்மீரில், பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் இடையே நடந்த துப் பாக்கிச்சண்டையில் தீவிரவாதிகள் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

காஷ்மீரில் குப்வாரா மாவட்டத்தின் கிரம்சூரா, ஹாண்ட் வாரா வனப்பகுதியில், பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து ராஷ்ட்ரீய ரைபிள் பொலிஸ் பிரிவினர் மற்றும் உள்ளூர் பொலிஸாரும் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தன; அதைத் தொடர்ந்து இதில் இரு தரப்பிலும் 10 மணித்தியாலம் துப்பாக் கிச் சண்டை நடைபெற்றுள்ளது. இரவு 7.15 மணியளவில் தான் சண்டை முடிவுக்கு வந்தது. இதில் பயங்கரவாதிகள் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர்கள் அனைவரும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் கெரில்லாப் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. அவர்களிடமிருந்து ஏராளமான துப்பாக்கிகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (வ)

# மாற்றுத் திறனாளிகளின் சாமி தரிசனத்துக்கு ஏற்பாடு

### திருவண்ணாமலையில் விசேட கார்கள் தயார்



தமிழ்நாட்டின் திருவண்ணாமலை, அருணாசலேஸ் வரர் கோயிலுக்குச் செல்லும் மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு விசேடமாக பற்றரிகார் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திருவண்ணாமலை, அருணாசலேஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டுக்காக, பற்றரி கார் சேவை ஆரம்பிக்க வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

தமிழக அரசு, அந்த கோரிக் கையை பரிசீலனை செய்து, இந்து அற நிலையத்துறை சார்பில், நான்கு லட்சம் ரூபா மதிப்பில், பற்றரி கார் சேவை ஆரம்பிக்க அனுமதி அளித்ததையடுத்து, நேற்று அந்த சேவை ஆரம்பமாகியது.

இந்தக் காரில் மாற்றுத்திறனா ளிகள் மற்றும் முதியோர்கள் இலவசமாக கோயில் வளாகத்தைச் சுற்றி பார்க்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் அதிகமான கார் இயக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

# திருச்சிச் சிறையில் பெண் கைதிகள் மோதல்

திருச்சி பெண்கள் சிறையில் குடிதண்ணீர் பிடிப்பதில் ஏற்பட்ட தகராறு காரணமாக கைதிகள் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டனர். தீவிரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்த பெண் கைதிகளை விலக்க முயன்ற பெண் காவலர்களையும் அவர்கள் குடத்தால் தாக்கினர்.

திருச்சி காந்தி சந்தைப் பகுதியில் மகளிர் சிறை உள்ளது. இங்கு தமிழகம் முழுவதும் இருந்து 300 இற்கும் அதிகமான விசாரணைக் கைதிகள் மற்றும் தண்டனைக் கைதிகள் உள்ளனர்.

இந்த நிலையில், கன்னியாகுமரியைச் சேர்ந்தவர்களான லதா , ஞான சவுந்தரி ஆகிய இருவரை கடந்த 3 ஆம் திகதி திருட்டு வழக்கில் கோயில் பட்டிப் பொலிஸார் கைது செய்து திருச்சி பெண்கள் சிறையில் அடைத்தனர்.

இவர்கள் இருவரும் தண்டனை கைதிகள் பகுதிக்கு குடத்துடன் தண் ணீர் எடுக்கச் சென்றனர். அப்போது பாண டியம்மாள் என்ற தண்டனைக் கைதி தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார்.

அவரது குடத்தை இடித்துக் கொண்டு இவர்கள் தண்ணீர் எடுக்க முயன்றனர். இதற்கு பாண்டியம்மாள் எதிர்ப்புத் தெரி வித்ததால் அவர்களுக்குள் வாக்கு வாதம் ஏற்பட்டது.

கோபம் அடைந்த விசாரணை கைதிகள் இருவரும் தண்ணீர் குடத்தால் பாண்டியம்மாளைத் தாக்கினர்.

அவருக்கு ஆதரவாக சில பெண் கைதிகள் ஓடி வந்து எதிர்தாக்குதல் நடத்தியதால் சிறையில் பரபரப்பு ஏற்பட்டது. இதில் பாண்டியம்மாளின் ஆடைகள் உள்ளிட்டவை கிழிந்து போய் விட்டன.

அப்போது பணியில் இருந்த பெண் காவலர்கள் இருவர் ஓடிவந்து மோதலைத் தடுக்க முயன்றனர். அவர்களையும் கன்னியாகுமரி பெண்கள் குடத்தால் தாக்கினர். இதில் அவர்களுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. பின்பு சிறைக் காவ லர்களுக்கு சிறையிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது.

# லோக்பால் பிரேரணை விவகாரம் : மீண்டும் போராட ஹஸாரே தயார்

லோக்பால் பிரேரணை நிறைவேற்றத் தவறின் லோக்சபா தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன் என்று சமூக ஆர்வலர் ஹஸாரே தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான லோக் சபா தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் உண்ணாவிரதம் போராட்டம் நடத்துவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

டில்லியில் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்து ஓராண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு ராலேகான் சித்தியில் ஹஸாரே பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

மே மாதம் இறுதி வரை [illegible] நடைபெற உள்ளது. இந்தக்



கூட்டத்தில் மத்திய அரசு லோக்பால் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும்.

அதுவரை நாங்கள் காத்திருப்போம். மத்திய அரசு அதனைச் செய்யத் தவறினால், லோக்சபாவுக்கு பொதுத் தேர்தல் அடுத்த ஒன்றரை வருடங்களில் நடைபெற உள்ளது. அது வரை தொடர்ந்து லோக்பால் பிரேரணைக்காக போராட்டம் நடக்கும்.

லோக்பால் பிரேரணையை நிறை வேற்றா விட்டால், 2014 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட உடன் ராம்லீலா மைதானத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன். அப்போது எனது போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு தருவார்கள். தற்போது உடனடியாகத் தேர்தல் எதுவும் இல்லாததால் மத்திய அரசு லோக்பால் பிரேரணையை நிறைவேற்ற கால தாமதம் செய்து வருகிறது.

ஐந்து மாநிலங்களில் தேர்தல் நடைபெற இருந்ததால், லோக்பால் வரைவுப் பிரேரணை தயாரிக்க குழு அமைப்பதற்கு ஒத்து கொண்டது. ஆனால் பிரதமர் தனது நிலையை மாற்றிக்கொண்டார். மத்திய அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வில்லை - என்றார். (வ)

# ராணுவப் புரட்சிக்கு இந்தியா பாக். அல்ல

### லாலு பிரசாத் கருத்து

டில்லி, ஏப்.7

இந்திய ஜனநாயகத்தின் வேர் மிகவும் வலுவாக உள்ளது. இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கு இந்தியா ஒன்றும் பாகிஸ்தான் அல்ல என்று ராஷ்ட்ரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்தார்.

டில்லியை நோக்கி இராணுவத்தின் 2 பிரிவுகள் முன்னேறி வந்ததாக வெளியான செய்தி தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடைபெற்று வரும் சதித்திட்டம் நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல. இராணுவத்தை அனைவரும் மதிக்கின்றனர். எதிரிகளுக்கு எதிராக எமது வீரர்கள் போரிட்டு வருகின்றனர். இந்திய இராணுவம் ஒன்றும் பாகிஸ்தான் இராணுவம் அல்ல. தற்போது நடைபெற்றுவரும் சதித்திட்டம் நாட்டுக்கு பெரும் ஆபத்து- என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்த சேவ ஆச்சிரமம், மருதனார்மடம்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

இணைந்து நடத்தும்

# கிறிஸ்து உயிர்ப்பு பஜனை

மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆச்சிரம வளாகத்தில் கிறிஸ்து உயிர்ப்பு தினமாகிய 8 ஏப்ரல் 2012 மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிறிஸ்த சேவ ஆச்சிரமம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை,
யாழ்ப்பாணப் பிராந்தியம்.

(16489) (2-7-8)

---

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

2012 ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

காலம்:- 28.04.2012 சனிக்கிழமை.
நேரம்:- முற்பகல் 10 மணி
இடம்:- யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

அங்கத்தவர்களுக்கு அன்பான வேண்டுகோள்

01. ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 21.04.2012 இற்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.

02. அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும் தெரிவில் இடம் பெறவும் அனுமதிக்கப்படுவர்.

03. நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். சகல கழக அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். -யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

---

## கண்ணீர் அஞ்சலி



அமரர் நாகலிங்கம் மாசிலாமணி
அவர்கள்
(ஓய்வுபெற்ற இலிகிதர், மண்டைதீவு கிராமசபை)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும், கல்விமாணிப் பட்டக்கற்கை நெறி யாழ்.நிலையம் 2 இன் இணைப்பாளருமாகிய மா.பிரபாகரன் அவர்களின் அன்புத் தந்தையின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள்.
கல்விமாணிப்பட்டக் கற்கை நெறி மாணவர்கள்.

(16506) (2-7-9)

---

REALM INFORTEX publishing & data service

(1) இணைய தள உருவாக்கம்,பதிவு செய்தல், விரிவுபடுத்தல் (Domain Name Registration, Web Development & Hosting)

(2) மென்பொருள் உருவாக்கல், விரிவுபடுத்தல் ( Software Development)

(3) Image Processing

(4) கணினி மின் - புத்தகங்கள் உருவாக்கல் ( E - Books Creation, e - Publishing)

Our Service: e - Publishing Services
e - Book Conversion
e - Typesetting
e - Data Conversion

www. realminfortex.com
sujan-81@Yahoo.com
077 9672613
078 3015777

---

## மணமக்கள் தேவை

- 59இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாத 22 ½ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 74இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாத 8¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற சைவ போசன முள்ள மணமகன் வந்துள்ளார். படித்த மண மகள் தேவை.
- 77இல் பிறந்த 4இல் செவ்வாய் உடைய 35 பாவமுடைய ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற லண்டன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 89 இல் பிறந்த Rc வேதமுடைய அவுஸ்ரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த Rc வேதமுடைய மணமகன் தேவை.
- 78இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 12 பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்று அத்து டன் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு படித்த உள்ளூர் மணமகன் தேவை.
- 87 இல் பிறந்த செவ்வாய் பாவமுடைய 33 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு உள்ளூரில் படித்த மணமகன் தேவை.

தொடர்பு:
காமலக்கண்ணன் திருமணசேவை
இல: 520, கோயில் வீதி,
நல்லூர். 077 6070862

(16521)(46.8.7)

---

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் லியோக் கழகங்களின் நிதி திரட்டலுக்கான அதிஷ்டலாபச்சீட்டு குலுக்கல்

10.11.2011 இல் நடத்தப்பட விருந்து பிற்போடப்பட்ட குலுக்கல் 04.04.2012 இல் நடைபெற்றது.
இதில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு

1 வது பரிசு - இல - 2756
2 வது பரிசு - இல - 2600
3 வது பரிசு - இல - 3779

ஆறுதல் பரிசுகள் - இலக்கங்கள் 3723,4664,2515,3155,4190 மேற்படி பரிசில்களுக்கான உரிய ரிக்கற்றுக்களை சமர்ப்பித்து 22.04.2012 க்கு முன்னர் யாழ்ப்பாணம், 200, சிவன் பண்ணை வீதியில், அமைந்துள்ள IIS சிற்றிக் கம்பஸ்ஸில் பெற்றுக்கொள்ளவும்

தொ.பேசி இலக்கம் - 077 7271225
லயன் E.S.P நாகரட்ணம் PMJF, தலைவர், லயன்ஸ் கழகம், நல்லூர்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
15 ★ 02 ★ 1931

உதிர்வு
08 ★ 03 ★ 2012

அமரர்
சின்னையா முருகர்

கடந்த 08.03.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னையா முருகர் அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பலவழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இரங்கல்உரை ஆற்றியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (07.04.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவளை, இயற்றாலை
கொடிகாமம்

குடும்பத்தினர்

---




# இந்த வார இதழில்...

### சாயம் போய்விட்ட சிகப்புக் கொடிகள்

.....1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த பின்பு இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே வலுவடைய ஆரம்பித்த உறவு இன்றுவரைப் பல்வேறு மட்டங்களிலும் தொடர்ந்து வருகிறது. இலங்கை அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கியபோது. அமெரிக்கா பி.எல்.480 உதவித்திட்டத்தின் கீழ் வழங்கி வந்த கோதுமை விநியோகத்தை நிறுத்தி இலங்கைக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. அப்போது சீனா இலங்கைக்கும் பேராதரவு வழங்கி உதவியமையை மறந்துவிட முடியாது. அது போன்று பிரித்தானியாவின் கடற்படைத்தளம் திருகோணமலையிலும். விமானத்தளம் கட்டுநாயக்காவிலும் நிலைகொண்டிருந்தபோது அவற்றை வெளியேற்றியது இலங்கை. அதன் காரணமாக மேற்கு நாடுகள் பல பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்தபோது சீனா ......

### தென்னாசியாவை மையப்படுத்தி நகர்கிறது அமெரிக்க கடற்படை




### கொழும்பு நகரில் பெருகும் பாலியல் தொழில்



கடந்த வருடம் சுகாதார அதிகாரிகளினால் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு மதிப்பீட்டின் மூலம் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் உள்நாட்டவர் மற்றும் வெளிநாட்டவர் உட்பட 8000 பேரளவிலான பாலியல் தொழில் புரியும் பெண்கள் இருக்கின்றனர் என்ற உண்மை வெளிப்பட்டது........

### 2014 இல் விற்பனைக்கு வருகிறது பறக்கும் கார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லப்பட்ட பிக்குகளின் ஆடைகள் பரிசோதனைக்கு

கொழும்பு,ஏப்.7

கோட்டே ரஜமஹா விகாரையைச் சேர்ந்த இரண்டு பிக்குகள் கொலை செய்யப்பட்டபோது அவர்கள் அணிந்திருந்த ஆடைகளும், கொலை நடந்த இடத்திலிருந்து பெறப்பட்ட இரத்தக் கறைகளும் சோதனைக்காக கின்ரெக் ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நுகேகொட நீதிபதி ரமணி குலரத்னவிடம் மிரிஹான பொலிஸைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பண்டித பட்டிகல குணசிறிதேரர், வண. பொரலஸ்[illegible]முவ தேரர் ஆகியோர் கொலைசெய்யப்பட்டமை குறித்த நீதிவான் விசாரணையின்போதே அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச்சோதனை அறிக்கை கிடைத்ததும் அது நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர்களான பத்திராகே ஹர்ஷா மங்குசிரி, பிரதீப் சில்வா ஆகியோர் நேற்றுமுன்தினம் அடையாள அணிவகுப்பொன்றில் நிறுத்தப்பட இருந்தும் நீதிமன்ற விடுமுறை காரணமாக அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார். (ச)

## மீன் பிடிக்கச் சென்றவர் கடலில் மூழ்கிச் சாவு

கொழும்பு,ஏப்.7

கல்கமுவ, வாகற பிரதேச வாவி ஒன்றில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந் துள்ளார்.

இந்தநபர் இன்னொருவருடன் இணைந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற வேளையில் உயிரிழந்துள்ளதாக கல்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபரது சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நெல்லின் விலையை அதிகரிக்க பரிந்துரை

கொழும்பு,ஏப்.7

நெல் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என நெல்லின் விலை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்தப் பரிந்துரைகள் தற்போது நிதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் போகத்தின் போது, நெல் விலை அதிகரிக்கப்படமாட்டாது. அடுத்த போகத்திலிருந்து நெல் விலையை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சலுக்குச் சிகிச்சை அளிக்கும் விசேட பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு அடிக்கல் நடுகின்றனர்.

## மின்சாரம் தாக்கி முதியவர் சாவு

கொழும்பு,ஏப்.7

புதிதாக கட்டப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்ட வீட்டில் வசித்த முதியவர் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தனது வீட்டின் வெளியில் தொங்கிக் கொண்டிருந்த வயர் ஒன்றை குறடின் மூலம் வெட்டியபொழுது மின்சாரம் தாக்கி இந்த முதியவர் இறந்துள்ளார்.

டயகம மேற்கு தோட்டத்தின் முதலாம் பிரிவில் வசித்த பஞ்சநாதன் (வயது-71) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சர்வதேசம் தலையிடாது வாழ நாட்டில் தன்னிறைவு வேண்டும்

### பசில் கூறுகிறார்


கொழும்பு,ஏப்.7

சர்வதேசம் தலையிடாது வாழவேண்டுமாயின் எமது நாடு அனைத்து துறைகளிலும் தன்னிறைவு அடைய வேண்டும். இதற்கு மக்களுக்கு முக்கிய பொறுப்பு உண்டு என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் வரலாற்றில் நடைபெற்ற பல சம்பவங்களையும் அச்சுறுத்தல்களையும் இலங்கை எதிர்கொண்டது. நாடு தன்னிறைவு அடைந்திருந்தன் மூலம் பண்டைய காலத்தில் அவற்றை வெற்றிக்கொள்ள முடிந்தது என்று கூறினார்.

அனைத்துக் குடும்பங்களும், கிராமங்களும் அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவுபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.



பிளவுபட்ட சமூகமாக இலங்கை சமூகம் இருந்த போது, இலங்கை பல்வேறு வகையில் வெளிநாடுகளுக்கு அடிபணிந்திருந்தது.

இதனால் அனைத்துக் குடும்பங்களும், கிராமங்களும் அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவுபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சமூகங்களுக்கு இடையில் அரசு பிளவுகளை ஏற்படுத்த முயற்சி

### கபீர் ஹாசீம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.7

அரசு நாட்டில் சமூகங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் நன்மை ஏற்படும் வகையில் அரசு தனது நிதிக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

செல்வந்த சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசின் பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

சொகுசு வாகனங்களுக்கான இறக்குமதி வரி 524 வீதமாகக் காணப்பட்டது. கடந்த ஆண்டு இந்த வரி 250 வீதமாகக் குறைக்கப்பட்டது. தற்போது இந்த வரி 350 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது கடந்த கால வரியை விடவும் குறைவானது.

எனினும் சாதாரண வாகனங்களுக்கான வரிகள் 40 வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சாதாரண பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசு சாதாரண பொதுமக்கள் மீது மேலதிக சுமைகளைத் திணித்து வருகின்றது.- என்றார். (ச)

## அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு,ஏப்.7

பண்டிகைக் காலங்களில் அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி வைக்கும் வர்த்தகர்களை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடிய விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஏ-9 வீதி அபிவிருத்திக்கு ரூ.1913 கோடிகள்

கொழும்பு,ஏப்.7

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 மார்க்க வீதி அபிவிருத்திக்கு 1913 கோடி ரூபா செலவாகும் என்று அமைச் சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இந்த வீதியை அபிவிருத்தி செய்யும் பணி கடந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## இலங்கை பொருளாதாரத்தில் 8.0 சதவீத தொடர் வளர்ச்சி

கொழும்பு,ஏப்.7

இலங்கைப் பொருளாதாரம் கடந்த ஆண்டு 8.0 சதவிகிதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் வேகமாக விரிவாக்கம் அடைந்து செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தோற் கடிக்கப்பட்டமை 40 வருட இலங்கைப் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதன்படி 2010 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 8.0 சதவிகிதத்தினால் வளர்ச்சியடைந்தது.

இலங்கைப் பொருளாதார வரலாற்றில் 8.0 வீதத்தினால் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக பொருளாதார வளர்ச்சி காட்டுவது இதுவே முதல் தடவை என்று குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தமிழ் மாணவரின் பெறுபேறுகளால் பாடசாலை அபிவிருத்திக்கு உத்வேகம்

### பிரபா கணேசன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஏப்.7

இந்த வருடம் கொழும்பு மாவட்ட தமிழ் பாடசாலைகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பது பாடசாலைகளுக்கான அபிவிருத்தியை செய்வதற்கான உத்வேகத்தை அளித்திருப்பதாக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில வருடங்களாக சில தமிழ்ப் பாடசாலைகள் மட்டுமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்தன.

2004ஆம் ஆண்டு முதல் கொழும்பு மாவட்ட தமிழ்ப் [illegible] மையாகக் கவனம் செலுத்தி வருகின்றேன். பல பாடசாலைகளின் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தளபாடப் பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த வருடம் இரண்டு [illegible] அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கான கட்டடங்கள் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

பெற்றோர்கள் குறிப்பிட்ட ஒரு சில பாடசாலைகளில் மட்டும் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு முயற்சிப்பதைத் தவிர்த்து வட மத்திய கொழும்பிலுள்ள சிறந்த பாடசாலைகளிலும் அனுமதி பெறப்பட வேண்டும்.

பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் காலங்களில் இதைவிட அதிகமான சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இந்தச் சிறப்புப் பெறுபேறுகளினால் எதிர்வரும் காலங்களில் கொழும்பு மாவட்ட பாடசாலை அபிவிருத்திகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


TCT MULTI TRADE CENTRE

# ரீசிரீ (TCT) பல்பொருள் விற்பனை நிலையம்

# TCT Multi Trade Centre

# ரீசிரீயின் புத்தாண்டுப் பரிசு மழை

**பிறக்கப்போகும் நந்தன புதுவருடத்தை முன்னிட்டு இம்மாதம் 8 ஆம் நாள் தொடக்கம் 12 ஆம் நாள் வரை நாளாந்தம் 6 வெற்றியாளர்கள் வீதம் 30 வெற்றியாளர்கள் தெரிவு!**




**நீங்கள் செய்ய வேண்டியது**

ரீசிரீ பல்பொருள் விற்பனை நிலையத்தின் எப்பகுதியிலும் மேற்குறிப்பிட்ட நாள்களில் பின்வரும் பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்வது மட்டும்தான்


ரூபா 3,000 தொடக்கம் ரூபா 4,999 வரை பெறுமதியான கொள்வனவாளர்களில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு **Sandwich Maker** பரிசாக வழங்கப்படும்.

ரூபா 5,000 தொடக்கம் ரூபா 7,999 வரை பெறுமதியான கொள்வனவாளர்களில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு **Blender** பரிசாக வழங்கப்படும்.

ரூபா 8,000க்கு மேல் பொருள்கள் கொள்வனவு செய்பவர்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு **Cooling Fan** பரிசாக வழங்கப்படும்.

மேலும் நாளாந்தம் 3 ஆறுதல் பரிசில்கள்

நீங்களும் இத்திட்டத்தில் இணைந்து வெற்றியாளர் ஆகுங்கள்




★ **எமது விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர் நலன்கருதி 80 இற்கு மேற்பட்ட பொருள்கள் தொடர்ந்தும் குறித்த விலையிலும் பார்க்க விலைகுறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.**

## ரீசிரீயின் பண்டிகைகால சலுகைகள்

ரீசிரீ புடைவையகத்தில் தெரிவு செய்யப்பட்ட புடைவை வகைகளுக்கு 10% - 20% வரை விலைக்கழிவுடன் சிறப்பு விற்பனைப்பகுதியும் செயற்படும்.

ரீசிரீ பான்சியகத்தில் மின்சார உபகரணங்களுக்கு 5% விலைக்கழிவு

ஜோன்சன் பொருள்களுக்கு 10% விசேட விலைக்கழிவு

பிஸ்கட் கேக் வகைகள், எட்னா, கன்டோஸ் சொக்லைட் வகைகளுக்கு 5% விலைக்கழிவு

**Colgate Tooth paste** வகைகளுக்கு 5% விலைக்கழிவு

**Baby Cheramy Colone- 125ml** இரண்டிற்கு ஒன்று இலவசம்.

**Khomba Colone – 100ml** இற்கு 1 இலவசம்.

**Detol Cool soap – 70g** இரண்டு வாங்கினால் 8/= சேமிக்கலாம்.

**VELVET hand wash** ஒன்றுக்கு ஒரு **velvet soap** இலவசம்.

**Signal Toothpaste 70g** இரண்டு வாங்கினால் 8/= சேமிக்கலாம்.

**Sunquick Cordial 840ml** ஒன்று வாங்கினால் அழகிய **Penclebox** இலவசம்.

**MD cordial 400ml** ஒன்று வாங்கினால் **3sauce** பைக்கற் இலவசம்.

**VELVET Soap** மூன்று வாங்கினால் 1 **Soap** இலவசம்.

**Santoor Soap** இரண்டு வாங்கினால் 1 **Soap** இலவசம்.

**Cheramy Economy Soap** வாங்கினால் ஒரு **75g Soap** இலவசம்.

**Maggi Noodles 400g** பைக்கற் ஒன்று வாங்கினால் **25g Noodles** பைக்கற் இலவசம்.

★ இரண்டு மாதங்களுக்கு ரூபா 25000/= பெறுமதியான பொருள்கொள்வனவு செய்வர்களுக்கு 500/= பெறுமதியான பண வவுச்சர் வழங்கப்படும்.

★ யாழ்.மாவட்டத்தில் எங்கும் இல்லாதவாறு FREE HOME DELEVERY சேவையையும் நாம் மேற்கொள்கின்றோம்.

★ எமது நிறுவனத்தில் பொருள்களை கொள்வனவு செய்து [illegible] ஆகுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:- 077511285, 0217451895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கூரைத் தகரங்கள்

கொட்டகலை,ஏப்.7

கொட்டகலை, வூட்டன் தோட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு ஒரு தொகுதி கூரைத் தகரங்கள் கையளிக்கப்பட்டன.

இந்தத் தகரங்கள் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரத்தின் வேண்டுகோளுக்கிணங்க இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொட்டகலை அமைப்பாளர் சிவகுமார் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் மத்திய மாகாணசபை உறுப்பினர் சிங்பொன்னையா, பொதுச் செயலாளர் எஸ். பிலிப், தேசிய அமைப்பாளர்; எஸ். ஸ்ரீதரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# சம்புநகர் கிராமத்துக்கு குடிதண்ணீர் திட்டம்

### அட்டாளைச்சேனை சபையின் தவிசாளர் தெரிவிப்பு

அட்டாளைச்சேனை,ஏப்.7

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சம்புநகர் கிராமத்துக்கு 3 கோடி ரூபா செலவில் குடிதண்ணீர் இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் தவிசாளர் நசீர் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பான கலந்துரையாடல் சம்புநகரில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**அரச சார்பற்ற நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையினூடாக சம்புநகர் கிராமத்துக்கான குடிநீர் இணைப்பு வழங்கப்படவுள்ளது.**

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையினூடாக சம்புநகர் கிராமத்துக்கான குடிதண்ணீர் இணைப்பு வழங்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் கிராமத்துக்கு இதுவரை குடிதண்ணீர் இணைப்பு வசதி வழங்கப்பட்டிருக்கவில்லை. சம்புநகர் மிகவும் பழைமை வாய்ந்ததொரு கிராமமாகும். தற்போது அங்கு சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவற்றில் 25 வீடுகளைக் கொண்ட அங்கவீனர்களுக்கான வீட்டுத் தொகுதி ஒன்றும் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் எஸ்.எல். அபூதாலிப், சம்புநகர் பள்ளிவாயில் தலைவர் ஹசன், மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச)



வீதிகளுக்கான 'காப்பெற்' போடுவதற்கான தார் தயாரிக்கும் இயந்திரம் கொத்மலை பிரதேசத்தில் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

## ஹற்றனில் வடிகால் கட்டமைப்பு சீரின்மையால் மக்கள் சிரமம்

கண்டி,ஏப்.7

ஹற்றன் நகரில் வடிகால் கட்டமைப்பு உரியவகையில் இல்லாத காரணத்தினால் மழைக் காலங்களில் இந்த நகரின் பிரதான வீதியின் பல்வேறு இடங்களில் மழை வெள்ளம் பெருக்கெடுப்பதால் பாதசாரிகளும் வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

ஹற்றன் நகரின் டிக்கோயா வீதியின் பிரதான பஸ் தரிப்பு நிலையப் பகுதியிலும் திம்புள்ள வீதியின் பல்வேறு இடங்களிலும் வடிகால் கட்டமைப்பு உரியவகையில் இல்லாத காரணத்தினால் மழைக் காலங்களில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்தவிடயம் குறித்து ஹற்றன் - டிக்கோயா நகர சபையும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## நிர்மாணப் பணிகளுக்காக இயந்திரங்கள் கையளிப்பு

நுவரெலியா,ஏப்.7

ஊவா மாகாண வீதி புனரமைப்புப் பணிகளுக்கென மாகாண அமைச்சுடன் ஒரு கோடியே இருபத்தியொரு லட்சம் ரூபா செலவில் சிமெந்துக் கலவை இயந்திரம் மற்றும் சிறிய வீதி அழுத்தும் இயந்திரங்கள் என்பன நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச பொறியியலாளர் பிரிவுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் குமாரசிறி ரத்நாயக்க, அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு இயந்திரங்களை பிரதேச பொறியியலாளர்களிடம் ஒப்படைத்தனர். (ச)


## மது அருந்திய மாணவர்கள் சிக்கினர் பொலிஸாரிடம்

நுவரெலியா,ஏப்.7

நுகேகொடையிலுள்ள பாடசாலையொன்றைச் சேர்ந்த 8 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் கல்கிஸைக் கடற்கரையில் மதுபானம் அருந்திவிட்டுப் பாதுகாப்பற்ற இடத்தில் நீராடச் சென்றிருந்த நிலையில் பிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஒரு மாணவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டபோது காப்பாற்றப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)


### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ரோகினி மோகனதாஸ்
அவர்களின் தந்தை
அமரர் நாகன் கந்தையா
அவர்களின் மரணச் செய்தி
கேட்டு துயர் அடைந்துள்ளோம்.
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்.
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.
(16506) (2-7-9)

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இல.153, 2 மாடிக் கட்டடம், நீளம் 35 அடி, அகலம் 13 அடி கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய கடை வாடகைக்கு.
தொடர்புகளுக்கு:- 077 6618122

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 100/=
★ றாஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை
★ R.M.B பாம், பருத்தித்துறை
T.P. NO : 077 6090926

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

S. சிவதாசன்

கடந்த (08.03.2012) வியாழக்கிழமை அன்று (ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி. சிவசுப்பிரமணியம் (வைசர் அவர்களின் மகனான) V.S. சிவதாசன் கொழும்பில் காலமாகி அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நாளை (08.04.2012) ஞாயிற்றுக்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
(16435) (45 . 6.7)

குடும்பத்தினர்
தொ.பே. 021 791 3254



### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

தில்லையம்பலம் அரியரத்தினம்

தோற்றம் 04.10.1959
திதி: 07.04.2012 அபரபக்க பிரதமை
மறைவு 20.03.2011

எம் குல விளக்கு இடையிலே எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனதே!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம் நெஞ்சில் நினைவிருக்கும் தெய்வத்துக்கு
எமது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



(16411) (2-6-7)

தாளையடி.

– குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுறவை ஏற்படுத்த...



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் சமூகத்துக்கும் இடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் கிழக்கிலங்கைத் தன்னம்பிக்கைச் சமூக எழுச்சி நிறுவனத்தினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சைக்கிள்கள் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்த்தன விடம் கையளிக்கப்பட்டன. இந்தச் சைக்கிள்கள் பொலிஸாரால் மக்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை பயனாளிகளுக்கு வீடுகள் கையளிப்பதில் குழறுபடி

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

பெரியநீலாவணை, ஏப். 7

மருதமுனையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிப்பதில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளை அறிந்துள்ளேன். எனவே, மாவட்டச் செயலாளராகிய எனது நேரடித் தொடர்புடனேயே வீடுகளைக் கையளிப்பேன் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஏ.அல்விஸ் தெரிவித்தார்.

வீடுகளைக் கையளிப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை தொடர்பிலான கலந்துரையாடல் அம்பாறை மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருதமுனையில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வீட்டுத்திட்டம் எட்டு வருடங்களாகியும் உரிய பயனாளிகளிடம் சென்றடையாமையை நினைத்துக் கவலைப்படுகின்றேன். அவர்களுக்கென்றே கட்டப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தை சம்பந்தமில்லாதவர்கள் பெற்றுக்கொள்ளவோ, அபகரிக்கவோ ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன்.

கட்டப்பட்டுள்ள 178 வீடுகளில் 144 வீடுகளைப் பெறுவதற்குத் தகுதியானவர்களை அடையாளப்படுத்தும் நோக்கில் இன்னும் ஓரிரு வாரத்துக்குள் பெயர்ப் பட்டியலொன்றை வெளியிடுவேன். அதில் ஏதாவது குளறுபடிகள் இருப்பின் நேரடியாகவே, எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்க முடியும்.

கிராமசேவகர் மற்றும் பிரதேச செயலக மட்டத்திலுள்ள இடைஞ்சல்களைக் குறைக்கும் நோக்கில் அவர்களின் எந்தச் பரிந்துரைகளும் இன்றி நேரடியாகவே பெயர்ப் பட்டியல் தொடர்பிலான முறைப்பாடுகளைச் செய்ய வழி ஏற்படுத்துவேன். இந்த வீட்டுத் திட்டக் கையளிப்புத் தொடர்பில் கூட்டம் கூட்டவோ, நடவடிக்கை எடுக்கவோ கூடாது என்று முஸ்லிம் பிரதேச செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிப்பேன்.

178 வீடுகளில் 144 பயனாளிகளின் வீடுகள்போக மீதமுள்ளதை இரண்டாம் கட்டமாகத் திறந்த நேர்முகப்பரீட்சை மூலம் தேவையுள்ளவர்களுக்குக் கையளிக்க நடவடிக்கை எடுப்பேன்.

அரசியலை இந்த விடயத்தில் சம்பந்தப்படுத்தினால் தலையீடுகள் அதிகம் ஏற்படவாய்ப்புள்ளன. அவ்வாறான பரிந்துரைகளுடன் எவரும் என்னிடம் வந்தாலும் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்- என்றார். (ச)

# காத்தான்குடி கிராம அலுவலருக்கு 6 வருடங்களுக்குப் பின் இடமாற்றம்

காத்தான்குடி,ஏப்.7

காத்தான்குடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்னர் உள்ளக இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கோமலேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த இடமாற்றங்கள் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பிலான இடமாற்றக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அனைத்துக் கிராம உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

காத்தான்குடிப் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலின் ஆலோசனையின் பேரிலேயே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆணி அறையப்பட்டு பெண் சாவு

இரத்தினபுரி,ஏப்.7

நெஞ்சில் ஆணி ஏற்றப்பட்ட காரணத்தினால் மதுகம, அகலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண்ணின் நெஞ்சுப்பகுதியில் ஆணியை ஏற்றியவர் அவரது சகோதரன் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண் 37 வயதானவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பெண் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணின் சகோதரனும் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




உங்கள்
GCE O/L உடன் LONDON
செல்லும் கனவை நனவாக்க
இன்றே எம்முடன் இணையுங்கள்
☑ இலவச கருத்தரங்கும்
☑ உடனடி அனுமதிகளும்
STUDY IN UK
Spot Admission!



Jan/Febயில் விசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்



Pirajeeth JAFFNA, Ajanthan VAVUNIYA, Krishanth JAFFNA, Karthigaran JAFFNA, Gobiraj JAFFNA
Praveena KAITHADY, Elayaruby VAVUNIYA, Athavan JAFFNA, Kalpana VAVUNIYA, Tharshika ANAIKODAI
Kabilthev VAVUNIYA, Nitharshan KOKUVIL, Vijenthiran VAVUNIYA, Nithyadarsan VAVUNIYA, Niruthika VADDUKKODAI

காலம் 08 APRIL 2012 : 10.00a.m. - 3.00p.m.
இடம் Exponet (Branch Office) No. 197 Arasady Road,Jaffna

GCE O/L முடித்த பின்னர் நேரடியாக பட்டப்படிப்பினை தொடருங்கள்
3 ஆண்டுகளில் Degree முடியுங்கள்

இலங்கை – GCE O/L → 03 YEARS → GCE A/L
லண்டன் – GCE O/L → 03 YEARS → DEGREE

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை

GCE(O/L) தகமை போதுமானது
பதிவுகளுக்கு
Colombo-011 7 555511/14 Fax-011 7 555517
Jaffna-021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants
Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna.
(Between Kanthermadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# மலேஷியத் தமிழரின் ஆதரவுக்கு நன்றி

### தெரிவித்தார் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரன்

ஐ.நா மனித உரிமைச் சபையை மையப்படுத்தி, மலேஷியத் தமிழர்கள் மேற்கொண்ட போராட்டங்களுக்கும், அரசியற் செயற்பாடுகளுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திர குமாரன் நன்றி தெரிவித்துள்ளார்.

மலேஷியாவின் செம்பருத்தி ஊடகத்துக்கு வழங்கிய கருத்துப் பகிர்விலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார். அதன்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா மனித உரிமைச் சபையில், இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு, மலேஷியா ஆதரவளிக்காது என்ற நிலைப்பாட்டை மலேசிய அதிகாரிகள் தெரிவித்திருந்த போது, அதற்குத் தங்களது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி, தொடர்ச்சியான போராட்டங்களையும் அரசியற் செயற்பாடுகளையும் மலேசியத் தமிழர்கள் முன்னெடுத்திருந்தனர்.

அதுமட்டுமன்றி ஈழத் தமிழினத்தின் மீது இன அழிப்பை மேற்கொண்ட இலங்கைக்கு, மலேஷியா அரசு ஆதரவளிக்கக் கூடாது. அவ்வாறு ஆதரவளித்தால் 20 லட்சம் மலேஷியத் தமிழர்களின் வாக்குகளை, ஆளும் மலேஷிய அரசு இழக்க நேரிடுமெனவும் மலேஷியத் தமிழர்கள் எச்சரித்திருந்தனர்.

இதன்போது மலேஷியத் தமிழர்கள் தனித்து, தமிழர்களின் போராட்டமாக அல்லாமல், மலே இனமக்களையும், மலேசிய சீன இன மக்களையும்ஒன்றிணைத்து போராட்டத்தை மேற்கொண்டனர். இத்தகைய உணர்வு பூர்வமான செயற்பாடுகள் ஊடாகவே, இலங்கைக்கு ஆதர வளிக்காது மலே ஷியா நடுநிலை வகித் தது.இது ஐ.நா மனித உரிமைச் சபையில், இலங்கைக்குக் கிடைத்த மாபெரும் இராஜ தந்திரத் தோல்வி. இலங்கைக்கு இது கடைசித் தோல்வியாக இருக்கப்போவதில்லை'' - என்றார். (ந)

# உள்ளக் கதவு

ஸ்டீபன் ஹக்கிஸ் என்கிற விஞ்ஞானி ''இந்த அண்டத்தை இயக்குவதற்கு ஆண்டவன் தேவையில்லை. இயல்பாகவே அதுதோன்றி இயங்குகின்றது.'' என்று கூறியுள்ளார். அறிவு வளர்ச்சியோடு ஆணவத்தையும் வளர்த்துக்கொண்ட பரிசேயத்தனமான வார்த்தைகள்தான் இவை. ஆண்டவனை அணு உலைகளிலும், ஆராய்ச்சிக் கூடங்களிலும், ஓர் அறிவியல் பொருளாகத் தேடுகின்றவர்களின் முடிவு இப்படிப் பட்டதாகவே இருக்கும்.

இனிப்பு.... புளிப்பு...., கைப்பு...., துவர்ப்பு..., உறைப்பு.... போன்ற ..... நம் வாழ்வில் எளிமையான இந்த ஐந்து சுவை களையும் அனுபவிக்கின்ற புலன்களில்லாத ஒருவருக்கு அறிவு பூர்வமாக விளக் கிப் புரிய வைக்க முடியுமா? இவற்றை அனுபவித்தலே புரியவைக்க முடியும். கடவுளுடைய அருட்செல்வம், ஞானம்,அறிவு,தீர்ப்பு இவற்றை மனிதர் தம் அறிவினால் அறிய இயலாது. தற்பெருமை கொண்டு தம் அறிவினால் அறிய முற்படுவோர் பாமேல் கோபுரம் கட்டிய மனிதருக்கு ஒப்பாவர். தாழ்ச்சியோடு அமைந்த உள்ளத்தோடு இறைவனைத் தமது உள்ளத்தில் வரவேற்பவரே அவரை அனுப விக்க முடியும்.




கோல்மான் கண்ட் என்ற ஓவியர் ''கிறிஸ்து உலகின் ஒளி'' என்கிற ஓவியத்தை வரைந்தார். இரவு நேரத்தில் இயேசு தோட்டத்தில் கையில் விளக்குடன் ஒரு கதவைத் தட்டுகின்ற காட்சியைப் படமாக்கியிருந்தார். அதைப் பார்த்த அவரது நண்பர் ''இக் கதவுக்கு கைபிடி இல்லையே''! என்றார். அதற்கு கோல்மான்கண்ட் ''இந்தக் கதவு ஒவ்வொரு மனித இதயத்தையும் குறிக்கின்றது. இதன் கைபிடி உள்பக்கம் உள்ளது'' என்று பதிலளித்தார்.

எவ்வளவு மழை பெய்தாலும் குடத்தை தலைகீழாக வைத்தால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட உட்புக முடியாது. நாமும் நமது ஆணவத்தால் உள்ளக் கதவை அடைத்து விட்டால் ஆண்டவரை அனுபவிக்க முடியாது.

க. அருள்நேசன், குருநகர்.

# பிரிட்டனில் மாணவர் விசாவில் மாற்றம்

### கற்கை முடித்தபின், இரண்டு ஆண்டுகள் வரை வேலை செய்யும் விசா சலுகை ரத்து

வெளிநாட்டு மாணவர்கள் தங்களது கற்கையை முடித்தபின், இரண்டு ஆண்டுகள் வரை வேலை பார்க்க வழி செய்யும் விசா சலுகை பிரிட்டனில் நேற்று முதல் ரத்துச் செய்யப்படுகிறது.

மேற்கத்திய நாடுகளைச் சேராத மாணவர்கள் பிரிட்டனில் படிக்க ஆர்வம் காட்டி வந்தனர். அவர்கள் தங்களது படிப்பை முடித்த பின் அங்கேயே தங்கி இரண்டு ஆண்டுகள் வரை வேலை செய்ய மாணவர் விசாவில் வழி செய்யப்பட்டு வந்தது.

தற்போது பிரிட்டன் குடியேற்றச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்கள் படிப்பை முடித்தபின் தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதிமுறை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அரசின் இந்தத் திட்டத்தை பிரிட்டிஷ் கவுன்ஸில் எதிர்த்துள்ளது.

இந்தப் புதிய விசா சட்டத்தால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாக உள்ள கற்கைகளுக்குச் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது என்றும் இதனால் வெளிநாட்டு மாணவர்கள் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி கணிசமாகக் குறையும் என்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் மேலும் தெரிவித்துள்ளது. (ந)

# மெய்வன்மைப்போட்டி

வடமராட்சி, ஏப்.7

கரணவாய் தெற்கு விபுலானந்தர் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் கே.கே. சற்குணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனும், கௌரவ விருந்தினராக அதே பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசுவும் கலந்துகொள்வர். (ந-8)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை திருவிளங்கம்
தோற்றம்
03 ★ 10★ 1943
மறைவு
10 ★ 04★ 2010

ஆண்டுகள் இரண்டு கழிந்தாலும்
என்றும் எங்கள் இதயங்களில்
அழியா ஓவியமாய் இருக்கின்றீர்

விஸ்வநாதர் ஒழுங்கை,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

- என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

(இ/398) (2-6-7)

## நீங்காத நான்காம் ஆண்டு நினைவலைகள்



பன்னாலை, தெல்லிப்பழை
திருமதி முருகையா அன்னலட்சுமி
(கிளி ஆச்சி)
திதி: பிரதமை
தோற்றம்
21 ★ 03 ★ 1940
மறைவு
21 ★ 03 ★ 2007

அம்மா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எப்படி அம்மா எங்கள் குரல்
கேட்காமல் இருக்கிறீர்கள் - அம்மா
பலநூறு உறவுகள் இருந்தென்ன
பல கோடி இன்பங்கள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா - அம்மா
இங்கே உங்களைத் தொலைத்துவிட்டு
ஏங்கித் தவிக்கிறோம் அம்மா
எப்போது வருவீர்கள் - அம்மா
நீங்கள் நடந்த பாதைகள் எல்லாம்
நாம் இங்கு தடுமாறுகின்றோம்
அம்மா என்று நாம் யாரை அழைப்பது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவபூதவராயரை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
மு. ஜெயராணி (மகள்)
பிரதேசசபை வைத்தியசாலை,
அளவெட்டி.

கணவர் - வீ. முருகையா
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(18339)(15.8.7)

## கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு

மல்லாகத்திற்கும், சுன்னாகத்திற்கும் இடையில் யாழ்ப்பாணம் K.K.S றோட்டில் அமைந்துள்ள 3 தளங்களைக் கொண்ட (G + 2 தளங்கள்) 6500 சதுரஅடி பரப்பளவைக் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
077 9003780 , 077 1726642

## விற்பனைக்குண்டு

கொக்கோஸ் ஸ்பேனியன்ஸ் 45 நாள் நிரம்பிய நாய்க் குட்டிகள் பொம்ரேணியன் நாய்க் குட்டிகள் அல்சேஷன் நாய் (பெண்) விற்பனைக்குண்டு. (சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்)

தொடர்பு: இல.06, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி.
தொ.பே. 078 3568079

## SPOKEN ENGLISH WITH GRAMMER

Group And Individual Classes
Commence: 07.04.2012
Contact:N.Sivananthan.
184, A, Navalar Road, Jaffna.
T.P.0713106279

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் கோழிகள் தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்த புறொயிலர் ரூ.450 மட்டுமே.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல.021 222 6944

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் தற்போது திருகோணமலையில் இருப்பதால் அவர் களுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. பணிக்கு அமர்த்தப்படுவர் குடும்பத்தில் ஒருவர் போன்று கவனிக்கப்படுவார். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0771569349

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஐயனார் கோயிலடி சிவப்பிரகாசம் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0779496948

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
மாணிக்கவாசகர் இராசம்மா
(சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு)

கடந்த 06.03.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த அன்புத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.04.2012) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்துநிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத் திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்

குடும்பத்தினர்

என்ன வேண்டும் உங்களுக்கு எல்லாமே இங்கு இருக்கு

## பனிசாரு நுங்கனிச் சோலை

311/1, பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

தொ.இல:
021 222 8199, 071 8475629,
077 3876203.

(பதிவு இலக்கம்: SA/JFA/02677)
விதைச் சட்டத்துக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும்.

இளையவளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நோய்தாக்கம் எதுவும் அற்ற குறுகிய காலத்தில் பயன்தரவல்ல உயரம் குறைந்த கவண்டிஸ் வாழை, கப்பல் வாழை, அன்னாசி, ஐந்தூரியம் என்பன மிக குறைந்த விலையில் செய்முறை விளக்கத்துடன்

பழ மரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 kg கொய்யா | ரெட்லேடி பப்பாசி | மாதுளை | ஒட்டுப்பலா |
| ஒட்டு மா | ஒட்டுத்தேசி | ஒட்டுகயூ | கயூ |
| மங்குஸ்தான் | றம்புட்டான் | விலும்பிலி தேசி | |
| ஒட்டுநெல்லி | ஒட்டுத்தோடை (விபிலிய சுவிட்) | | |

அலங்காரத் தாவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| செவ்வரத்தை | குறோட்டன் | பாம் வகைகள், | றோஸ், |
| பாரியாதம் | ஐந்தூரியம் இன்டோர் | தாவரங்கள், | |
| சைபிரஸ் | அலகேரியா | நித்தியகல்யாணி, | முல்லை, |
| நந்தியாவட்டை | இந்தியன் மடு மல்லிகை, | பிச்சி | |

மூலிகைகள்

| | | |
|---|---|---|
| இந்தியன் புதினா | கற்பூரவள்ளி | கருவேப்பிலை |
| கோப்பி | மிளகு | கராம்பு |
| கறுவா | யாதிக்கா | வெற்றிலை |
| துளசி | கொறுக்காப்புளி | கொக்கோ |

பயன்தரு மரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஈரப்பலா | கமுகு | தென்னை | செவ்விளனி | தேக்கு |
| மகோகனி | சந்தரவேம்பு | | யம்பு | சமண்டலை |

மற்றும் பல மரக்கறி நாற்றுக்களும், சகல விதமான காய்கறி விதைகளும், பிளாஸ்ரிக், சீமெந்து சாடிகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தங்கள் ஆதரவால் உயர்ந்து நிற்கும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் பேராதரவை நாடி நிற்கின்றோம்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு ஒரே தினத்தில் 10 நாற்றுக்களை கொள்வனவு செய்பவர்களுக்கு 01 நாற்று இலவசமாக வழங்கப்படும். 05.04.2012 - 22.04.2012 வரை மட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு வருடத்தில் வீதிகளில் வாகனங்கள் செல்லமுடியாத நிலை!

## அதனாலேயே வரிவிதிப்பு என்கிறது அரசு

கொழும்பு, ஏப். 7

போர் முடிவடைந்த பின்னர் நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்து வருகிறது. நாட்டில் 5 பேருக்கு ஒரு வாகனம் என்ற நிலைமை தற்போதுள்ளது.

இந்த நிலைமை தொடருமானால் இன்னும் ஒரு வருடத்தில் வீதிகளில் வாகனங்கள் ஓர் அடிகூட நகரமுடியாத நிலை ஏற்படலாம். அதிகரித்துச்செல்லும் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே வாகன வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவித்துள்ளது.

- இவ்வாறு கூறுகிறது இலங்கை அரசு.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிவடைந்த பின்னர் நாட்டில் வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளது. 2009ஆம் ஆண்டு 3ஆயிரத்து 421 ஆக இருந்த மோட்டார் கார் இறக்குமதி 2010இல் 37ஆயிரத்து 134 ஆக உயர்ந்தது. அந்தத் தொகை 2010இல் 54ஆயிரத்து 285ஆக அதிகரித்தது.

அத்துடன், வான், கப், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் இறக்குமதியும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக 2009இல் 2 லட்சத்து 11 ஆயிரத்து 629 ஆகக் காணப்பட்ட வாகன இறக்குமதி 2010 இல் 4 லட்சத்து 69 ஆயிரத்து 707ஆக இருந்தது. 2011இல் 5 லட்சத்து 23ஆயிரத்து 963 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

கடந்த வாரத்தில் 5 பொருள்களுக்கான வரிகள் குறைக்கப்பட்டன. ஆனால், வாகன வரி மாத்திரம் அதிகரிக்கப்பட்டதைப் பெரிதுபடுத்துகின்றனர் எதிர்க்கட்சியினர். 2009 ஆம் ஆண்டு 50 சதவீதம் வாகனவரி குறைக்கப்பட்டதை இவர்கள் மறந்துவிட்டார்களா?

இன்று எதிர்க்கட்சிகளுக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு துரும்பின்றித் தவிக்கின்றனர். சிகரெட், மதுபானம் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் அதற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடியாத நிலையில் அக்கட்சிகள் உள்ளன.

அரிசி, முட்டை, பருப்பு ஆகிய பொருள்கள் உட்பட இன்னும் பல பொருள்களின் விலைகள் கடந்த வருடத்தை விட நன்றாகக் குறைக்கப்பட்டுள்ளன. எனவே, பொருள்கள் விலையேற்றத்தைக் கண்டித்துப் போராட முடியாதநிலை எதிர்த்தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் வாகன இறக்குமதியை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் இன்னும் ஓரிரு வருடங்களில் வீதியில் வாகனங்கள் ஓரடிகூட நகரமுடியாத நிலை ஏற்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டே வாகனவரி அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிரநிபந்தனைகளுக்குக்கட்டுப்பட்டல்ல-என்றார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் (05.04.2012) இல் நடைபெற்ற கம்பன் கழக விழாவில் சான்றோர் விருதான ''கம்பவாணர் க. அருணகிரி'' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர்
**வசந்தி அரசரத்தினம்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை அடைகிறோம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (சி/2973) (45.6.7)

## சேவை நலன் பாராட்டு



திருமதி
மகாலட்சுமி சிவபாதம்
(ஆசிரியை யா/முத்துத்தம்பி ம.வி.)எமது பாடசாலையில் கடந்த 17 வருடங்களாகச் சிறப்புற சேவையாற்றிய திருமதி மகாலட்சுமி சிவபாதம் அவர்கள் இன்று (07.04.2012) அகவை அறுபதில் இனிதே ஓய்வுபெறுகின்றார். மணி விழாக் காணும் அவர் சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(சி/3891) (2-6-7)

ஆசிரியர் கழகம், யா/முத்துத்தம்பி, ம.வி.

பழைய மாணவர் சங்கம்
மானிப்பாய் இந்துக் கல்லூரி

**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும் 06.05.2012 ஞாயிறு மாலை 4.00 மணியளவில் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. சகல பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் பழைய மாண வர்களும் அங்கத்துவப் பணத்தை செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

ந.விவேகானந்தராஜா, கௌரவ தலைவர் (16529) (6,7,10) க. கணேசமூர்த்தி, கௌரவ செயலாளர்

## வேலைவாய்ப்பு

குருநகரில் இயங்கும் பனிக்கட்டி ஆலையில் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் தேவை.
(வயதெல்லை 18 -45)
சுய விவரக் கோவையுடன் ஞாயிற்றுக்கிழமை காலை 9 -11 மணிக்கிடையில் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்துக்கு நேரில் வரவும்
ஸ்ரார் இன்டஸ்ரியல் சேர்விஸஸ் பிறைவேட் லிமிட்டெட்
15/1, பிள்ளையார் கோயில் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

## வீடு வாடகைக்கு தேவை

சுன்னாகம் தொடக்கம் இணுவில் வரை K.K.S. வீதியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. மாதவாடகை (ரூபா 10,000) பத்தாயிரம் வரை.
தொடர்பு: 077 044 0570

## புது வருட மலிவு விற்பனை

மிக மலிவு விலையில் Sony Wega Flat T Vகள் 21", 25"-13,500/=, Sw 29"-17,000/=, 12Box - 12,000/= DVD-4,250/= குளிர்சாதனப் பெட்டிகள் - 19,000/=
தொடர்பு: 077 044 0570
சோனி ரேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக) 56, K.K.S. வீதி, சுன்னாகம். (16339) (45-7-9)

## வெளிக்கள நிலையம் தொண்டமானாறு

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

FWC
வெளிக்கள நிலையம், தொண்டமானாறு.

இடம்:- யாழ்.இந்துக் கல்லூரி
திகதி:- 21.04.2012 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி
தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்துக்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.
- செயலாளர்

## மரண அறிவித்தல்



திருமதி
செல்லம்மா சுப்பிரமணியம்

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியை - அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாசாலை) ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி 2012 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், மாரீசங்கூடலை சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (திரு. ஸ்ரீமுருகன்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்), கோவிந்தசாமி (லிகிதர்), இராமசாமி (இளைப்பாறிய ஆசிரியர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ராசநாயகத்தின் (CTB) அன்பு மைத்துனியும், வாசுகி (கொழும்பு), இளங்கோ (கனடா), கண்ணகி (கனடா), நளாயினி (லண்டன், (UK), இளஞ்சேய் (கனடா), தேவநந்தி (கனடா) ஆகியோரின் தாயும், அருள்ராஜசிங்கம் (அருள்கொழும்பு), சிரோண்மணி (கனடா), பஞ்சாட்சரம் (USA), சர்வானந்தன் (லண்டன், (UK), கவிதா (கனடா), பவனீதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதுமை, மாதுளன், மதுரா, துளசியா, மதுஷா, சுகன்யா, சர்சியா, அம்புஷா, வாகீசன், கீரண், அபிஷயா, அனிருதன், விப்ரணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Ave இல் உள்ள Chapel Ridge Funeral Home மண்டபத்தில் (05.04.2012) வியாழக்கிழமையும், (06.04.2012) வெள்ளிக் கிழமையும் மாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (07.04.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரையும் அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4570 Yonge Street இல் அமைந்துள்ள (Forest Lawn Crematorium) இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
வாசுகி (மகள்),
அருள்ராஜசிங்கம் (மருமகன்),
கொழும்பு, பம்பலப்பிட்டி.

தகவல்:
சு.யோகன் (பெறாமகன்),
அளவெட்டி மேற்கு,
தம்பளாவத்தை.

(16527) (45.6.7)

## வீடு, கடை வாடகைக்குண்டு

யாழ்.பஸ் நிலையத்துக்கு அண்மையில் இரண்டு கடைகளும், யாழ்.பலாலி வீதியில் இரண்டு வீடுகளும் வாடகைக்குண்டு.
தொடர்பு:- 077 7232535

## காணி விற்பனை

பெருங்குளம் சங்கத்தானை வீதியில் டச்சு றோட்டிற்கும் A9 வீதிக்கும் இடைப்பட்ட தூரத்தில் சங்கத்தானை முருகன் கோயிலுக்கு அருகில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
தரகர் தேவையில்லை
தொலைபேசி இல: 0777 422568 (16486)


## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் சிவலிங்கப்புளியடியில் 45 பேர்ச்சஸ் 4½ பரப்புக் காணியும், யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன் மணிக்கூட்டு வீதியில் 45 பேர்ச்சஸ் 4½ பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0777232535

## கடை வாடகைக்குண்டு

K.K.S. றோட் D.F.C.C வங்கி அருகில்
அருள் விநாயகர் ரேடர்ஸ்
தொடர்பு:- 106, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 2 ஆம் ஆண்டு நினைவில்



மலர்வு 10 ★ 03 ★ 1952
உதிர்வு 30 ★ 03 ★ 2010

அமரர்
நாகமுத்து பரமலிங்கம்
திதி : அபரபக்கபிரதமை

அன்பு எனும் சொல் அதனை
பாசம் என்னும் வலைவீசி
உறவு என்னும் ஓடம் அதில்
உரிமையுடன் ஆண்டு இரண்டு ஆகியும்
வாழ்ந்து வந்தோம்
சிங்கம் போன வழி தெரியவில்லை
தேசம்விட்டு காலனால் விண்ணுலகு சென்றீரோ
பொங்கிவரும் கண்ணீருக்கு அளவில்லையே
உனை நினைத்து தேம்புகின்றோம்

புத்தூர் வடக்கு,
புத்தூர்

மனைவி,
மகன் - ஜரிசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைத் திருப்பித்தரக்கோரும் நோர்வேயிலுள்ள தமிழ் பெற்றோர்

நோர்வேயில் வசிக்கும் இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்று தமது குழந்தைகளை அந்தநாட்டு சிறார் பராமரிப்பு அதிகாரிகள் தம்மிடம் திருப்பித் தரமறுப்பதாக முறைப்பாடு செய்துள்ளது.

12 வயதுடைய தமது பெண் பிள்ளையை அடித்து தண்டித்த சம்பவத்தின் பின்னரே, பாடசாலையிலிருந்து தமது மூன்று பிள்ளைகளையும் அதிகாரிகள் அழைத்துச் சென்றுவிட்டனர் என்று நோர்வே குழந் தைகள் பராமரிப்பு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 3 குழந்தைகளின் தாயான ஜெக்லின் டிலாந்தினி பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

**குழந்தைகளுக்கு கையால் உணவூட்டுவது, ஒரே அறையில் உறங்கச் செய்வது போன்ற பழக்கங்கள் தவறானவை. உள்ளூர் நீதி மன்றமொன்று, தமது பிள்ளைகளைச் சிறார் பராமரிப்பு நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தைகளுக்கு கையால் உணவூட்டுவது, ஒரே அறையில் உறங்கச் செய்வது போன்ற பழக்கங்கள் தவறானவை. உள்ளூர் நீதி மன்றமொன்று, தமது பிள்ளைகளைச் சிறார் பராமரிப்பு நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், பல வாரங்களுக்கு ஒரு தடவையே தமது குழந்தைகளைப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றது. 12 வயது மற்றும் 8 வயது பெண் பிள்ளைகளும் 6 வயது ஆண் பிள்ளையும் இவ்வாறு 5 மாதமாக எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளைகள் நோர் வேயைச் சேர்ந்தவர்கள் என்ற போதிலும் தான் இலங்கை நபர் என்ற அடிப்படையில் நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதரகத்திடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

இதேவேளை, கலாசார ரீதியான கருத்து முரண்பாடு தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம். ஆனால், இந்தியப் பெற்றோர் சம்பந்தப்பட்ட இவ்வாறான பிரச்சினையொன்றின் போது, குழந்தைகளின் பாதுகாப்புக் குறித்த அச்சம் ஏற்பட்ட பின்னரே தாம் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது என்று நோர்வேயின் சிறார் நல பாதுகாப்புத் துறையினரிடம் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## இந்திய எல்லைக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

எல்லை தாண்டி இந்திய பகுதிக்குள் நுழைந்து பிடிபட்ட இலங்கை மீனவர்கள் மூன்று பேர் விடு விக்கப் பட்டு நேற்று முன்தினம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர் என்று இந்திய செய் திகள் தெரிவிக்கின்றன.

நீர்கொழும்பு மற்றும் யாழ்ப் பாணம் பகுதியைச் சேர்ந்த டெல்டின், ரவிசுதன், விக்னேஸ்வரன் ஆகியோர் கடந்த 29 ஆம் திகதி, நீர்கொழும்பிலிருந்து விசைப் படகில், யாழ்ப் பாணம் செல்லும் வழி யில், திசை மாறி, இந்திய எல்லையான, மூன்றாம் மணல் திட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர்.

அந்தப் பகுதியில் ரோந்து வந்த, இந்தியக் கடலோரக் காவல் படையினர், இலங்கை மீனவர்கள்மூவர் மீதும் எவ்வித வழக்கும் பதியப்படாமல் தனியார் விடுதியில் தங்க வைத்தனர்.

இவர்களை விடுவிக்குமாறு உயரதிகாரிகள் விடுத்த உத்தரவுப்படி மூன்று மீனவர்களும் விசைப் படகில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு இந்தியக் கடலோரக் காவல் படையின் வழி காட்டுதலில் மண்டபத்திலிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டுள்ளனர். (வ)

## கைவிடப்பட்டிருந்த இரு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். நகரில் கைவிடப்பட்ட நிலையில் இரண்டு சைக்கிள்களை யாழ். பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். உரியவர்கள் ஆதாரம் காட்டி சைக்கிள்களைப் பெற்றுச் செல்லலாம் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

லுமாலா ரகத்தைச் சேர்ந்த 1407846 இலக்கமுடைய ஆண் கள் சைக்கிள் ஒன்றும் லுமாலா ரக NU 63830 இலக்கமுடைய பெண்கள் சைக்கிள் ஒன்றுமே அவையாகும்.(ஒ-4)

## வர்த்தகரின் பங்களிப்புடன் மாணவருக்கு உதவிகள்

தென்மராட்சி, ஏப்.7


சாவகச்சேரி கைத் தொழில் மன்றத்தின் 33 வர்த்தகர்களின் பங்களிப்புடன் சுமார் 100 வறிய மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில் கல்வி நிதி வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் மேலும் சில வர்த்தகர்களின் பங்களிப்புடன் விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு வருடாந்தம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது என்று மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

நகர்ப் பகுதி வர்த்தகர் ஒருவர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இரு மாணவர்களுக்கு இந்த வருடம் சைக்கிள்களை கடந்த பொதுக் கூட்டத்தில் வைத்து வழங்கினார்.

இதே வர்த்தகர் கடந்த வருடம் வன்னிப் பகுதியைச் சேர்ந்த பத்து மாணவ மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார்.

மன்றத்தின் வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தில் பங்கேற்க வெளிநாடுகளில் உள்ள பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-9)



சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் மாணவனுக்கு சைக்கிள் வழங்குவதையும் அருகில் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், பொருளாளர் இ.சுரேஸ் நிற்கின்றனர். (ம-9)

## சீரான எரிபொருள் விநியோகம்

நவாலி,ஏப். 7

மானிப்பாய் ப.நோ. கூ.சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தின் பெற்றோல் நிரப்பி திருத்தி அமைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் சீரான பெற்றோல் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

இங்குள்ள இரண்டு நிரப்பிகளில் ஒன்று சில வாரங்களாகப் பழுதடைந்திருந்ததன் காரணமாக பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

ஆனால் தற்போது சீரான விநியோகம் மேற்கொள்வதால் அவர்கள் உடனுக்குடன் இவற்றை பெற்றுச் செல்கின்றனர்.

ஆனால் இங்குள்ள மின் பிறப்பாக்கி திருத்தி அமைக்காததினால் மின்சாரம் தடைப்படும் நேரத்தில் வழமை போல் பெற்றோல் நிரப்ப வருபவர்கள் ஏமாற்றத் துடன் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர். (ந-100)

## டைட்டானிக் கப்பலின் பாகங்கள் யுனெஸ்கோவிடம்

சர்வதேச மக்கள் மத்தியில் மிகப் பிரபலமான டைட்டானிக் கப்பலின் பாகங்கள் ஐக்கிய நாடுகளின் கல்வி மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

இந்தக் கப்பல் சேதமடைந்ததை அடுத்து அட்லாண்டிக்கின் வட பிராந்தியத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடற் பிராந்தியம் சர்வதேச கடற்பரப்புக்குச் சொந்த மானது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் கப்பலை ஒரு பாரம்பரிய சொத்தாக கருதி அதனைப் பாதுகாக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் கல்வி மற்றும் கலாசார அமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதற்கு 41 நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாக யுனெஸ்கோ அமைப்பு குறிப்பிட்டுள்ளது. இந்த வருடத்துடன் டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளாகி 100 வருடங்கள் நிறைவடைகின்றன. 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தமது கன்னிப் பயணத்தை ஆரம்பித்த டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. (வ)

## ஸ்ரீலங்கன் விமானசேவை சேவையை மட்டுப்படுத்தியது

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானசேவை சுவிஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கான தனது பயணிகள் சேவையை மட்டுப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

சுவிஸின் சூரிச் மற்றும் இத்தாலியின் ரோம் ஆகிய நகரங்களுக்கான தனது சேவையை மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கு இடைநிறுத்துவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. செலவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவ் விரு நாடுகளுக்கான சேவையை மட்டுப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரிசுச்சுக்கான தனது சேவையை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி யில் இருந்து இடைநிறுத்தும் ஸ்ரீலங்கன் .ஏர்லைன்ஸ், ஜூன் 27ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை சேவையில் ஈடுபடுத்தப் படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. உரோமுக்கான தனது சேவையை மே 5 ஆம் திகதி முதல் இடைநிறுத்துவதாகவும், ஜூன் 27 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் சுற்றுலாப்பயணத்தில் குறிப்பிட்ட வீதம் வீழ்ச்சி ஏற்படுமென எதிர்பார்க்கப் படுகின்ற நிலையிலேயே, ஸ்ரீலங்கன் எயலைன்ஸ் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் ரஷ்யாவுக்கான தனது சேவையை விஷ்தரிப் பதற்கும் ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் தீர்மானித்துள் ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மோதிக்கொண்டன மோ. சைக்கிள்கள் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.7

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதால் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து உடுவில் பெண்கள் கல்லூரியை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம்முற்பகல்11மணியளவில் இடம் பெற்றது. சம்பவத்தில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா (வயது-56) என்பவரே காயமடைந்தார். மற்றைய மோட்டார் சைக்கிளில் சென்றவர் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.(ஒ-4)

## போயா தினத்தில் மது விற்பனை செய்த விடுதி முற்றுகை

கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபல இரவு விடுதியொன்று நேற்று அதிகாலை முற்றுகையிடப்பட்டுள்ளது.

போயா தினமான நேற்று வெள்ளிக்கிழமை காலை மதுபானம் விற்பனை செய்ததாலேயே இந்த விடுதி முற்றுகையிடப் பட்டது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

டுப்ளிகேசன் வீதியிலுள்ள இந்த விடுதியில் அதிகாலை 3.00 மணியளவில் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது. அந்த வேளையில் மேற்படி நிலையத்தில் வாடிக்கையாளர்களுக்கு மதுபானம் விற்கப் பட்டது. போயா தினத்தில் மதுபானம் விற்பது சட்டவிரோதமான நடவடிக்கை என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## எதிர்வரும் 40 ஆண்டுகளில் மக்கள்தொகை

### இந்தியா, சீனா முதலிடம் வகிக்கும்

உலக நகரங்களில் எதிர்வரும் 40 ஆண்டுகளில் மக்கள் தொகை நிலவரம் குறித்து சில புள்ளி விவரங்களை ஐ.நா. சபை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அந்தப் புள்ளி விவரத்தில், நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் இந்தியாவும், சீனாவும் முன்னிலையில் இருக்கும் என்பது தெரியவந்துள்ளது.

இந்த மக்கள் தொகை வளர்ச்சியானது அந்த நாடுகளுக்குப் பெரும் சவாலாக இருக்கும் என்றும் வேலைவாய்ப்புகள், வீட்டு வசதி, [illegible], உட்கட்டமைப்பு போன்ற [illegible] ஏற்படுத்திக் கொடுப்பதில் மக்கள் தொகை பெருக்கம், அந்த நாடுகளுக்கு புதிய சவாலாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனாவுக்கு அடுத்தபடியாக நைஜீரியா, அமெரிக்கா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் நகரங்களில் மக்கள் தொகை பெருக்கம் கணிசமாக இருக்கும்.

2010-2050 வரையிலான காலக்கட்டத்தில் இந்திய நகர மக்கள் தொகையில் கூடுதலாக 49.7 கோடி பேர் (497 மில்லியன்) சேருவார்கள்.

சீனாவில் 34.1 கோடி, நைஜீரியாவில் 20 கோடி, அமெரிக்காவில் 10.3 கோடி, இந்தோனேஷியாவில் 9.2 கோடி என மக்கள் தொகை பெருக்கம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப் 7

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**கம்பர்மலை வித்தியாலயம்**

க.மகனேஸ் 6ஏ,2பி,சி, சு.தர்ஜிகா 5ஏ,3சி,எஸ், சி.கௌதமன் 5ஏ,2சி,2எஸ், மோ.கரிலக்ஷ்மன் 4ஏ,2பி,சி,2எஸ், து.கலைநேசன் 3ஏ,பி,4சி, எஸ்.

**கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி**

ச.டர்சிகா 4ஏ,3பி,2எஸ், ச.வேணுஜா 3ஏ, பி,4சி,எஸ், தெ.லோஜிதா 2ஏ,3பி,3சி, த.தனுசிகா 2ஏ,2பி,2சி, 2எஸ், இ.தீபா 2ஏ,பி,4சி, எஸ், தெ.துவாரகன் ஏ,2பி, 3சி,3எஸ், தி.தயாளினி ஏ, 2பி,3சி,2எஸ், அ.நிஷாந்தினி ஏ,2பி,3சி,2எஸ், நி.கிருஷ்ணதயாளினி ஏ,பி,5சி,2எஸ், ர.சாரங்கன் ஏ,பி,4சி,2எஸ், க.பிரவீனன் ஏ,பி,3சி,3எஸ், சு.றொசாந்தன் ஏ,6சி,எஸ், ர.கஜீவனா ஏ,பி,3சி,2எஸ், யோ. மதிசாந்தன் ஏ,4சி,4எஸ், சி.தாட்சாயினி ஏ,3சி,4எஸ், சி.பிரமிளா ஏ,3சி,4எஸ், செ.மீனாம்பிகை ஏ,2சி,4எஸ்.

**சங்கானை சிவப்பிரகாச ம.வி.**

கி.விதுசா 9ஏ, ச.நித்திலன் 5ஏ,3பி,எஸ், தே.பவரூபன் 5ஏ,3பி,எஸ், ஜெ.துலக்ஜா 3ஏ, பி, 5சி, ர.கஜதீபன் 3ஏ, 2பி,2சி, எஸ், ஜெ.நிகாசனா 2ஏ,4பி, 3சி, இ.இராகவன் 2ஏ,2பி, 4சி, ஜெ.அபிசனா 2ஏ,3பி, 3சி,எஸ், ம.மகிளினி 2ஏ, 3பி, 3சி,எஸ், க.டர்சனா 2ஏ,3பி,சி, எஸ், பா.நிரோஜா 2ஏ,2பி,4சி, எஸ், ஜெ.நிருபா 2ஏ,2பி,4சி, எஸ், செ.மதுரா 2ஏ,பி,4சி, எஸ், க.துஷாரா 2ஏ,4சி, 3எஸ், தெ.விபூசன் 2ஏ,பி,3சி, 2எஸ், உ.விதூசன் 2ஏ,4சி, 2எஸ், க.விமலேஸ்வரன் 2ஏ,பி,2சி, 3எஸ், வ.துஷாந்தன் 2ஏ,2சி, 4எஸ்.

**கிளிநொச்சி ம.கல்லூரி**

யோ.விதுசன் 6ஏ,3பி, ம.சோபிகா 4ஏ,2பி,சி,2எஸ், செ.மேனகா 4ஏ,2பி,3சி, மு.கயல்விழி 3ஏ,3பி,3சி, யோ.யுசாந்தி 2ஏ,6பி, பி.செல்சி புளோரிடா 2ஏ,4பி, 3எஸ், கி.விதுஷா 2ஏ,3பி, 3சி,எஸ், வீ.சுஜிதா 2ஏ,3பி, 2சி,2எஸ், க.அனோஜன் 2ஏ,பி,4சி, 2எஸ், ச.காயத்திரி 2ஏ,பி,4சி, எஸ், ப.விஜிந்தன் 2ஏ,4சி,2எஸ், சு.கிருஷ்ணபவன் 2ஏ,4சி, 2எஸ், க.திலக்சணா 2ஏ,2சி, 5எஸ், மே.வனோஜா 2ஏ, 3சி, 2எஸ், சு.செல்வக்குமார் 2ஏ,3சி,2எஸ்,

**இணுவில் மத்திய கல்லூரி**

பா.பாலஜீவன் 8 ஏ சி, பு.சுரேந்திரன் 6ஏ 2பி எஸ், த.மிதுர்ஷன் 6ஏ 2பி எஸ், செ.பானுகோபன் 4ஏ பி 2சி 2எஸ்,ப. பானுமதி 4ஏ பி 2சி 2எஸ், அ.தர்சிகரூபன் 4ஏ 2பி 2சி 2எஸ், த.அருட் செல்வி 3ஏ 3பி சி 2எஸ், ப.தர்சன்2ஏ 3பி சி 2எஸ், ஜெ.கேதீஸ்வரன் 2ஏ 2பி 3சி 2எஸ், க.விசாகினி ஏ 3பி 4சி எஸ், கி.மதுசன் ஏ 2பி 3சி 3எஸ், சி.பிரவீணன் ஏ 2பி 2சி 4எஸ், ஜெ.கேதீஸ் வரன் 2ஏ 2பி 3சி 2எஸ், மோ.பவன் ஏ 3பி 2சி 3எஸ், மு.மதுரா 2ஏ 4பி சி எஸ், செ.நிஷானி 2ஏ 3பி 2சி எஸ்.

**கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.**

ப.தேவிகா 6ஏ சி எஸ், யோ.விதுசா 6ஏ பி சி எஸ், தி.றொசானி 4ஏ 3சி 2எஸ், சோ.பிரசாந்தன் 3ஏ 3சி 2எஸ், சி.கஜரூபன் 3ஏ 2பி 3சி, க.பானுஜா 3ஏ 3பி 2சி எஸ்,கா.லோஜினி 3ஏ பி சி 3எஸ், க.ஜேக்கப் 2ஏ 2பி 3சி எஸ், த.யாதவமருகன் 2ஏ பி 3சி 2எஸ், சி.விபூஷணன் 2ஏ 4பி சி எஸ், வ.விஜய கரன் 2ஏ பி 2சி 3எஸ், பே.குயிலினி 2ஏ 4பி சி எஸ், உ.பிரியங்கா 3ஏ 2பி சி 3எஸ், அ.சுஜீவா 2ஏ பி சி 3எஸ், ச.கிரிஜா 2ஏ பி 3சி எஸ்.

**ஆங்கில மொழி மூலம்**

சி.கேசவன் 4ஏ 4சி எஸ், சி.பிரதாபன் 2ஏ பி 3சி 3எஸ், ம.ஸ்வஸ்திக்கா ஏ பி 3சி எஸ்.

(வ)

## கோண்டாவில் பொது நூலகத்தில் வலுவூட்டல் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 7

நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் பொது நூலகத்தில் நடத்திய நூலக வலுவூட்டல் நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை திருநெல் வேலி கருணாலயத்தில் இடம் பெற்றது.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக இளைப்பாறிய நூலகர் திருமதி. ரோகினி பரராஜசிங்கம் வாசிப்பின் மேண்மை தொடர்பாக மாணவர்களுக்குக் கருத்துரைகளை வழங்கினார்.

கருணாநிலைய மாணவர்கள் கோண்டாவில் பொது நூலகத்தில் இலவச அங்கத்துவம் பெறுவதற்கு தேவையான ஒழுங்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(வ-14)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 7

வரணி-கும்பிட்டான் புலம் கற்பகப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 9 மணிக்கு விநாயகர் வழிபாடும் பிற்பகல் 6 மணிக்கு சாயரட்டை, வசந்த மண்டபப் பூசையும் நடைபெறவுள்ளது. (வ)

* * *

யாழ்.வண்ணை அரசடி விநாயகர் கோயிலின் பிரதிஷ்டை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.27 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ-13)

## யாழ். சாரணர் சங்கங்களுக்கு ஜப்பான் விசேட அழைப்பு

தென்மராட்சி, ஏப். 7

ஆசிய, பசுபிக் நாடுகளின் சாரணர்களின் பாராட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளது யாழ்.மாவட்ட சாரணர் சங்கங்கள்.

2015ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த சாரணர் பாசறைக்கு யாழ்.மாவட்ட சாரணர் சங்கங்களுக்கு ஜப்பான் நாட்டு சாரணர்களால் விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் தம்புள்ள சேனநாயக்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் இலங்கை சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியங்களின் 29 ஆவது ஆண்டு விழா ஆகியவற்றில் யாழ். மாவட்ட சாரணர் சங்கங்களின் செயற்பாடுகளைக் கவனித்த விழாவில் பங்கு கொண்ட 23 நாடுகளும் இந்த சங்கங்களை வெகுவாகப் பாராட்டியுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து இந்த விழாவுக்கு சென்ற காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்களும் சாரணத் தலைவர்களும் சிறந்த முறையில் சாரண செயற்பாடுளை மேற் கொண்டதாகவும் பலருக்கு ஏனைய நாடுகளின் சாரணர்கள் கௌரவ விருதுகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** உற்சாகத்தோடு காணப்படுவீர்கள். ஒவ்வொரு பணியையும், மிக நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். நண்பர் ஒருவரின் ஆலோசனைகள் மிகுந்த பயன் தரும். பணவரவுகளால், பொருளாதார நிலைமை மாறும். குடும்பத்தில் கோபதாபங்கள் நிலவியபோதும், மகிழ்ச்சி குறையாது கொண்டு செல்வீர்கள்.

**இடபம்:** நம்பிக்கையோடு, ஒவ்வொரு காரியங்களையும் மேற்கொள்வீர்கள். வெற்றியும் பெறுவீர்கள். எதிர்பாராத தகவல் ஒன்று கிடைக்கப் பெறும். குடும்ப விடயங்களுக்காக சற்று அலைச்சல் இருக்கும். வங்கி சம்பந்தப்பட்ட பணிகளுக்காகச் சிலரின் உதவியை நாடுவீர்கள். மாலைக்கு மேல் பயணம் ஒன்று உண்டு.

**மிதுனம்:** தாங்கள் ஒவ்வொரு காரியங்களையும் எளிதாக முடித்து விடலாம் என்று எண்ணியபோதும், அலைச்சல் அதிகமாக இருக்கும். மனைவி வழியில் சிறு மருத்துவ செலவுகள் உண்டாகலாம். குழந்தைகளின் வளர்ச்சிக்காக, தாங்கள் எடுத்திருக்கும் முடிவு ஒன்றை நெருங்கிய நண்பர் ஒருவரிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத விதமாக பணவரவு ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். சிலர் பணிமாற்றம் தொடர்பான வேலைகளில் ஈடுபடலாம். உறவினர்கள் மத்தியில், வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டியது அவசியம். அலுவலக பணிகளில், சக ஊழியர் ஒருவரின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும்; பொருள்படுத்திக் கொள்ளாதீர்கள்.

**சிங்கம்:** நீண்டநாள், தாமதப்பட்ட காரியம் ஒன்றைச் செய்து முடிக்க வாய்ப்புக் கிடைக்கும். புதிய தொழில் மற்றும் அதன் தொடர்பான தொழில் நுட்பங்களை, தெரிந்து கொள்வதற்காக அலைச்சல் இருக்கும். தாயாரின் உடல் நலன் மனதுக்கு சங்கடத்தைத் தரலாம். எதிர்பாராத செலவுகளால், தற்காலிக பணத்தட்டுப்பாடு தோன்றும்.

**கன்னி:** நேற்றைய கனவு ஒன்று அதிகம் யோசிக்க வைக்கும். கணவன், மனைவி உறவில் அன்யோன்யம் கூடும். கைமாற்றாக வாங்கிய பணத்தை கொடுத்து நாணயத்தைக் காப்பாற்றுவீர்கள். தொழிலிலோ அல்லது அலுவலகப் பணிகளிலோ பணப் பொறுப்பை கையாள்பவர்கள், மிகுந்த எச்சரிக்கையோடு செயற்படுதல் அவசியம்.

**நாளை**

பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை 08.04.2012
திதி: துதியை மு.இ 09.02 வரை
நட்சத்திரம்: சுவாதி சித்தம் மு.இ10.23 வரை
சுபநேரம்: 09.07-10.37 வரை
ராகு காலம்: 04.37-06.07 வரை

**துலாம்:** இன்று, கூடுதல் அக்கறையோடு ஒவ்வொரு காரியங்களிலும் செயற்படுவீர்கள். தங்களின் செயல்கள் மற்றவர்களால் பாராட்டப்படும். குடும்ப உறுப்பினர்களிடையே நிலவிய மனக் கசப்பு நீங்கும். கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமான பலன்களைக் காணலாம்.

**விருச்சிகம்:** இன்று குடும்ப விவகாரங்களில், அதிக அக்கறை காட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். சுபகாரிய விடயங்களில் பணவிரயமும் உண்டாகலாம். அலுவலகப் பணிகளில் பொறுப்பாகச் செயற்பட்டாலும், சில நேரங்களில் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகலாம். தொழிலில் ஏற்ற இறக்கமான நிலை நிலவும்.

**தனுசு:** சொத்து சம்பந்தப்பட்ட வகையில், நிலவிய சச்சரவுகள் நீங்கி சமாதானம் ஏற்படும். குடும்பத்துடன் தெய்வ வழிபாடு மேற்கொள்வீர்கள். பணம் தொடர்பாக நிலவிய இழுபறி நிலை நீங்கும். வியாபார விரிவாக்கத்திற்காக ஆலோசனைகள் மேற்கொள்வீர்கள். பணி நிமித்தம் வெளியூர் பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

**மகரம்:** எதிர்பார்த்த மற்றும் எதிர்பாராத வகையில் பணங்கள் கைக்கு வந்து சேரும். தங்களின் தேவைகளையும், குடும்பத் தேவைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றுவீர்கள். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்களோடு வாக்கு வாதங்கள் வேண்டாம். தொழிலில் போட்டிகள் அதிகமான போதும் விற்பனை குறையாது.

**கும்பம்:** இன்று சோம்பல் கூடுதலாக இருக்கும். பிறருக்காக உதவப்போய் சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாள் கவலை ஒன்று இன்று தீர்வுக்கு வரும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் தொடர்புடையவர்கள், சாதகமான நன்மைகளை அடைவர்.

**மீனம்:** இன்றைய தினத்தை நீங்கள் ஒரு திட்டத்தோடு ஆரம்பித்தபோதும், எதிர்பாராத விதமாக மாற்றி அமைக்க வேண்டியிருக்கும். எடுத்துக் கொண்ட பணிகளில் மிகவும் பொறுப்போடு நடந்து கொள்ளுங்கள். வியாபார காரியங் களில் தலையீடுகளை குறைத்துக் கொள்ளுதல் நல்லது. தொலைபேசி தகவல் ஒன்று புதிய சிந்தனைக்கு வழிவகுக்கும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 1 | | | | 5 | |
| | | 7 | 2 | 5 | | | | |
| 5 | | | | | 3 | 6 | | |
| 9 | 7 | 6 | 4 | | | 2 | 1 | |
| | | | | 2 | | | | |
| | 1 | 2 | | | 7 | 4 | 6 | 8 |
| | | 3 | 8 | | | | | 9 |
| | | | | 1 | 2 | 3 | | |
| | 4 | | | | 5 | 1 | 8 | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 5 | 9 | 6 | 1 | 7 | 8 | 3 |
| 3 | 7 | 6 | 8 | 4 | 2 | 9 | 5 | 1 |
| 1 | 9 | 8 | 5 | 3 | 7 | 4 | 2 | 6 |
| 9 | 5 | 3 | 2 | 8 | 6 | 1 | 4 | 7 |
| 8 | 1 | 4 | 3 | 7 | 5 | 2 | 6 | 9 |
| 6 | 2 | 7 | 1 | 9 | 4 | 8 | 3 | 5 |
| 4 | 8 | 9 | 7 | 5 | 3 | 6 | 1 | 2 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 8 | 5 | 9 | 4 |
| 5 | 6 | 1 | 4 | 2 | 9 | 3 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரும் இந்தியக் குழுவில் அ.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

**அ.தி.மு.க சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் ரபி பேர்னாட் இடம்பெறுவார் என்று தெரிகிறது.**

புதுடில்லி,ஏப்.7

இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலை குறித்து அறிய, இலங்கை வரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அ.தி.மு.கவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செல்லும் 14 பேர் கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்க்ள் குழுவுக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமை தாங்குகிறார்.

வெங்கைய நாயுடு (பா.ஜ.க), டி.கே.எஸ். இளங்கோவன் (தி.மு.க), என்.எஸ்.வி. சித்தன், சுதர்சன நாச்சியப்பன், மாணிக் தாக்கூர், எம். கிருஷ்ணசாமி (நால்வரும் காங்கிரஸ்) ஆகியோருடன் பிற கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கைப் பயணத்துக்கான ஏற்பாடுகளை வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து நாடாளுமன்ற விவகார அமைச்சகம் செய்து வருகிறது.

இலங்கை செல்லும் குழுவில் இடம்பெறுவது குறித்து அ.தி.மு.கவுக்கு நாடாளுமன்ற விவகார அமைச்சர் பவன் குமார் பன்சால் கடிதம் எழுதியிருந்தார். ஆனால், அதற்குப் பதில் ஏதும் வராத நிலையில், இலங்கைப் பயணத்தை அ.தி.மு.க. புறக்கணித்துவிட்டதாக முதலில் கூறப்பட்டது.

இது குறித்து அ.தி.மு.க. மாநிலங்களவைத் தலைவர் வா. மைத்ரேயனிடம் கேட்டதற்கு, இலங்கைப் பயணத்துக்கு யாரை அனுப்புவது என்பதைக் கட்சியின் மேலிடம் விரைவில் முடிவு செய்யும் என்று கூறினார்.

இந்த நிலையில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அ.தி.மு.க சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் ரபி பேர்னாட் இடம்பெறுவார் என்று தெரிகிறது. இது தொடர்பான தகவலை அ.தி.மு.க தலைமை, கடிதம் மூலம் நாடாளுமன்ற அமைச்சகத்துக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. இதே போல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராஜனும் இலங்கை செல்லும் குழுவில் இடம் பெறுவார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடி வரும் தங்களை இலங்கை செல்லும் குழுவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜாவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனும் நாடாளுமன்ற விவகார அமைச்சரிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை'' என்று நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தின் மூத்த அதிகாரி தெரிவித்தார். (த)

## ஜெனிவா தீர்மானம் குறித்து மக்கள் கருத்தை அறியுங்கள்

### அரசிடம் கோருகிறார் குணதாச அமரசேகர

கொழும்பு,ஏப்.7

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதா? இல்லையா? என்பது குறித்து அரசு தனித்துத் தீர்மானிக்க முடியாது எனவும், அரசு உடனடியாக மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்ல வேண்டும் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசு மக்களின் நிலைப்பாடுகளை அறியாமல் அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது, நாட்டை காட்டிக்கொடுப்பது மாத்திரமல்ல, அடிப்பணிவதற்கான ஆரம்பத்தின் அடையாளம்.

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கை இறுதியில், லிபியாவுக்கு நேர்ந்த கதியை எதிர்நோக்க நேரிடுவது கட்டாயம். அவ்வாறான நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லாது தடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பு அரசுக்கு உள்ளது- என்றார் அமரசேகர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் மனித உரிமைகள் சபையின் அறிக்கை ஆகியவற்றை சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகளில் சூழ்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த இரண்டு அறிக்கைகளையும் ஒன்றுடன் ஒன்று சமநிலைப்படுத்த முடியாது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்த கூடிய பரிந்துரைகள் இருக்குமாயின் அரசு அதனை நடைமுறைப்படுத்தலாம். எனினும் மக்களின் விருப்பத்தை அறியாது, மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது எனவும் குணதாச அமரசேகர கூறியுள்ளார். (த)

## உரிமை மீறல் குறித்து 1,399 முறைப்பாடுகள்

கொழும்பு,ஏப்.7

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 1,399 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் எனப் பலருக்கு எதிராக இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் சட்டவிரோத கைது, துன்புறுத்தல்கள், தடுத்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக பொலிஸாருக்கு எதிராக 217 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரச திணைக்களங்களினால் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் 141 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பில் அநீதி இழைக்கப்பட்டதாக 81 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் வகையீடு செய்யப்பட்டு விரைவில் விசாரணை நடத்தப்படும் என மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## பீரிஸ் தலைமையில் குழு மாலைதீவுக்குப் பயணம்



கொழும்பு,ஏப்.7

உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட இலங்கைக் குழுவொன்று மாலைதீவு சென்றுள்ளது.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு நடத்தவுள்ளார்.

மாலைதீவின் ஜனாதிபதி மொஹமட் வாஹீட்டையும் இந்தக் குழுவினர் சந்தித்துப் பேசவுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்தப் பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, இலங்கைக்கு ஆதரவாக மாலைதீவு வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## சன் சீ கப்பல் சூத்திரதாரியை உறுதிப்படுத்தியது கனடா

மொன்றியல்,ஏப் 07

எம்.வி. சன் சீ கப்பல் மூலம் இலங்கை அகதிகளை கனடாவுக்குச் சட்டவிரோதமான முறையில் அழைத்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நபரே குற்றவாளி எனக் கனடா உறுதி செய்துள்ளது.

தயாகரன் மார்கண்டு என்ற இலங்கைப் பிரஜையே குற்றவாளி எனக் கனேடியப் பொலிஸார் அறிவித்துள்ளனர். இவர் 2010ஆம் ஆண்டில் இலங்கை அகதிகள் 500 பேரைக் கனடாவுக்கு அழைத்துச் சென்றார்.

முன்னதாக தயாகரன் மார்கண்டு மீது கனடா பிடியாணை பிறப்பித்த நிலையில் அவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டார். பிரான்ஸ் பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள தயாகரனைக் கனடாவுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

## அதிக வெளிநாட்டுக் கடன் நாட்டுக்குப் பெரும் பாதகம்

### திறைசேரியின் செயலாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.7

அதிகளவு வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக் கொள்வதனால் பாதக விளைவுகள் ஏற்படும் என திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிடமிருந்து தொடர்ச்சியாகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரோக்கியமானதல்ல எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சளவிலான கடன்களை அரசு ஏற்கனவே அண்மித்துள்ளது. இனிமேலும் கடன் பெற்றுக் கொள்வது ஆரோக்கியமான நிலைமையல்ல. வங்கி வட்டி வீதங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பீ.பி.ஜயசுந்தர ஆளும் கட்சியின் மிக முக்கியமான நிதிக் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## அரசின் அமெரிக்க எதிர்ப்பு மக்களை ஏமாற்றும் நாடகம்

### சாடுகிறது ஐ.தே.க

**அரசு அமெரிக்காவுடன் இரகசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண் டதனாலேயே வொஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கியது.**

கொழும்பு,ஏப்.7

அரசின் அமெரிக்க எதிர்ப்பு மக்களை ஏமாற்றும் நாடகமாகுமென்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பரிந்துரைகளில் சில்லறைத்தனமானவையும் உள்ளன. அதேபோன்று முக்கியமான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசியல் தீர்வு அதிகாரப் பரவலாக்கல் சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமித்தல் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட வேண்டுமென்ற முக்கிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே அரசு எதனை நடைமுறைப்படுத்தப் போகின்றது, எதனைக் கைவிடப் போகின்றதென்பதை வெளியிட வேண்டும். போர் முடிந்த பின்னர் இலங்கைக்கு ஐ.நா செயாலளர் நாயகம் பான் கீன் மூன் பயணம் செய்த போது இறுதிக் கட்டத்தில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருப்பதால் விசாரணைகள் நடத்தப்படுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததோடு கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்தாததன் காரணமாக இன்றைய நிலைமை உருவானது.

அமெரிக்காவுக்கு எதிரான அரசின் கருத்துக்கள் விமர்சனங்கள் அனைத்தும் நாடகம். இதில் உண்மை இல்லை. அரசு அமெரிக்காவுடன் இரகசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதனாலேயே வொஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கியது. இவ்வாறு அமெரிக்காவுடன் இரகசிய உறவுகளை பேணும் அரசு நாட்டு மக்களை ஏமாற்ற அமெரிக்க எதிர்ப்பு நாடகத்தை அரங்கேற்றுகிறது என்றார். (த)

## ஜெனிவா தீர்மானம் குறித்து மக்கள் கருத்தை அறியுங்கள்

### அரசிடம் கோருகிறார் குணதாச அமரசேகர

கொழும்பு,ஏப்.7

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதா? இல்லையா? என்பது குறித்து அரசு தனித்துத் தீர்மானிக்க முடியாது எனவும், அரசு உடனடியாக மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்ல வேண்டும் எனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசு மக்களின் நிலைப்பாடுகளை அறியாமல் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது, நாட்டை காட்டிக்கொடுப்பது மாத்திரமல்ல, அடிப்பணிவதற்கான ஆரம்பத்தின் அடையாளம்.

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கை இறுதியில், லிபியாவுக்கு நேர்ந்த கதியை எதிர்நோக்க நேரிடுவது கட்டாயம். அவ்வாறான நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லாது தடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு உள்ளது- என்றார் அமரசேகர

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் மனித உரிமைகள் சபையின் அறிக்கை ஆகியவற்றை சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகளில் சூழ்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த இரண்டு அறிக்கைகளையும் ஒன்றுடன் ஒன்று சமநிலைப்படுத்த முடியாது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்தக் கூடிய பரிந்துரைகள் இருக்குமாயின் அரசு அதனை நடைமுறைப்படுத்தலாம். எனினும் மக்களின் விருப்பத்தை அறியாது, மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது எனவும் குணதாச அமரசேகர கூறியுள்ளார். (த)

## ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது அரசு

ஏழைகளின் வயிற்றில் அரசு அடித்துள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ''மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்றவற்றுக்கான வரிகளை உயர்த்தி, அரசு ஏழைகளின் வயிற்றில் அடித்துள்ளது.

ஏழைகள் எவ்வாறு வாழ்கின்றனர்? எவ்வாறு உணவு உட்கொள்கின்றார்கள்? என்பதனை அரசு அறியவில்லை.

மிகவும் அருவருக்கத்தக்க வகையில் வறியவர்களின் சொத்துக்களை அரசு சுரண்டுகின்றது.

நாட்டு மக்களை எதிர்காலத்தில் நாம் மீட்போம்'' -என்றார். கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளச் சென்று திரும்பிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துஜனின் 'ஹற்றிக்' உடன் வீரர்கள் போர் ஆரம்பம்


விருந்தினர்கள்


வீரர்கள் அழைத்து வரப்படுகின்றனர்

வலி. வடக்கு ஏப்.7
ஸ்கந்தா வீரன் சிந்துஜன் தொடர்ந்து மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றி 'ஹற்றிக்' சாதனை படைத்ததுடன் வீரர்களின் பெரும் போர் அசத்தலாகத் தொடங்கியது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான வீரர்களின் பெரும் போர் 12 ஆவது ஆண்டாக நேற்று மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

மகாஜன வீரர்கள் ஸ்கந்தாவின் இறுதித் துடுப்பாட்ட வீரர்களான செந்தூரன், கோபிநாத்தை ஆட்டமிழக்கச் செய்யும் வாய்ப்பைத் தவறவிட்டதால், முதல் இன்னிங்ஸில் ஸ்கந்தா அணி 28 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்று முன்னிலையைப் பெற்றது.

29.3 ஓவரில் 97 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது பிடியெடுக்கும் வாய்ப்பை கைவிட்ட மகாஜன வீரர்கள் தொடர்ந்து மூன்று வாய்ப்புக்களையும் தவறவிட்டனர்.

பூவா தலையா போட்டதில் வென்ற மகாஜன முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. ஆரம்ப விக்கெட்டுக்கள் விரைவில் சரிந்தன. 31 ஓட்டங்கள் பெறுவதற்குள் 3 விக்கெட்டுக்கள் சரிந்தன.

நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த அஜித், சாரங்கன் ஆகியோர் நிதானத்தை வெளிப்படுத்தினர். இணைப்பாட்டமாக 42 ஓட்டங்களை பெற்று அணியை சரிவிலிருந்து தூக்க முயற்சித்தனர். எனினும் 24 ஓட்டங்களுடன் அணித் தலைவர் அஜித் வீழ்த்தப்பட்டார்.

ஐந்தாவது விக்கெட் 29.2 ஓவரில் சிந்துஜனால் வீழ்த்தப்பட்டது. டிலோசன் 15 ஓட்டங்களுடன் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்த பந்திலேயே பிரணவன் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்த பந்தை வீசினால் 'ஹற்றிக்' என்ற நிலையில் களத்துக்கு வந்தவர் ஜனந்தன். விக்கெட் வீழாமல் தடுக்க விரும்பி பந்தைத் தடுத்தாட முயன்றார். ஆனால் பந்து மட்டையில் பட்டு தடுப்பாளரிடம் சரணடைந்தது.

சிந்துஜன் தனது முதலாவது 'ஹற்றிக்' விக்கெட்டுக்களை ருசிபார்த்தார். அப்போது மகாஜனவின் ஓட்ட எண்ணிக்கை வெறும் 97.

அடுத்த இரண்டு விக்கெட்டுக்களும் 7 ஓட்டங்களில் இழக்கப்பட மகாஜன 31.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களை மட்டும் பெற்றது.


அஜித் 24, பிரசாந், டிலோசன் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 25 ஓட்டங்களை ஸ்கந்தா கொடுத்தது.

சிந்துஜன் 9 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்திப் பிரகாசித்தார். ஜனக்சன் 8 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சஜன் 5.3 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதில் ஆட்டத்துக்கு இறங்கிய ஸ்கந்தா விக்கெட்டுக்களை இழப்பதில் தாமும் மகாஜனவுக்குச் சளைத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தினர். 42.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் அணி பெற்றது.

கோபிநாத் 22, தூபகன் 19, செந்தூரன் ஆட்டமிழக்காது 15, ஜெனக்சன் 15, சஞ்சஜன் 14, நிலக்சன் 12 என்று சொற்ப ஓட்டங்களுடன் துடுப்பாட்ட வீரர்கள் சீரான இடைவெளிகளில் ஆட்டமிழந்தனர். உதிரிகளாக 18 ஓட்டங்களை மகாஜன வழங்கியது.


கொடியேற்றல்


ஆட்டத்தில் ஒரு காட்சி

அஜித் 14 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்தினார். ஜனந்தன் 11.2 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ரமேஷ் 4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் டிலாக்சன் 12 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் மகாஜன ஆரம்பித்து 15 ஓவர்கள் கடக்கையில் ரசிகர்கள் அடிக்கடி மைதானத்துக்குள் இறங்கி குறுக்கீடு செய்தார்கள். அவர்கள் விளையாட்டு நேரத்தை வீணடித்ததால் 12 ஓவர்கள் வீசப்பட வேண்டியிருந்த நிலையிலும் ஏற்பாட்டாளர்கள் முடிவு நேரத்தில் உறுதியாக இருந்ததால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது.

இதனால், இரண்டாவது இன்னிங்ஸில் 15 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி இருக்க வேண்டிய மகாஜன வெறும் 3 ஓவர்களை மட்டும் எதிர்கொண்ட நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரமேஷ் மற்றும் பிரசாந் ஆகியோர் களத்தில் இருந்ததால் உதிரிகளாக 2 ஓட்டங்கள் பெறப்பட்டன. இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கும். (உ-86)

## சதுரங்கப் போட்டி முல்லை முடிவுகள்

வடமராட்சி ,ஏப்.7
முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே ஆண், பெண், குழுச் சதுரங்கப் போட்டி முள்ளியவளை வித்தியானந்தா தேசிய பாடசாலையில் முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மைக்கல் தலைமையில் இடம் பெற்றது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலை வருமாறு

**15 வயது ஆண்கள்**
வற்றாப்பளை மகாவித்தியாலம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் ,உடுப்புக்குள தமிழ் வித்தியாலயம்.

**15 வயதுப் பெண்கள்**
முள்ளியாவளை வித்தியானந்தா தேசியக் கல்லூரி, செம்மலை மகாவித்தியாலயம் சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்.



**19 வயது ஆண்கள்**
முள்ளியவளை வித்தியானந்தா தேசிய கல்லூரி, சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய மகாவித்தியாலயம்

**19 வயதுப் பெண்கள்**
செம்மலை மகாவித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முள்ளியவளை வித்தியாணந்தா தேசிய கல்லூரி .

## வலி.கிழக்கு பெரு விளையாட்டு அச்சுவேலியில்

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இந்த வருடம் அச்சுவேலியில் நடைபெறவுள்ளது. நிகழ்வுகள் அச்சுவேலி யூனியன் மைதானத்தில் நடை பெறும் இந்த மாத நடுப்பகுதியில் அச்சு வேலியில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் தெரிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான இறுதிப் போட்டியும் பெருவிளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன. விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் வலி. கிழக்கு பிரதேச செயலாளர் [illegible] தலைமையில் இடம்பெறும்.(2-11)

## மன்னாரில் கரபந்தாட்டம் இன்றும் நாளையும் போட்டி

மன்னார்,ஏப்.07
கிறிஸ்தவர்கள் தற்போது தவக் காலத்தின் இறுதி வாரத்தினை அனுஷ்டித்து வருகின்ற நிலையில் மன்னாரில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் தேசிய கரபந்தாட்ட போட்டி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அமைச்சர்களான டிலான் பெரேரா மற்றும் றிசாட் பதியுதின் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அதிகளவான கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் தற்போது கத்தோலிக்க மக்களினால் புனித தவக்காலம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதன் இறுதி வாரம் தற்போது அனுஷ்டித்து வரும் நிலையில் இன்று பெரிய சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இன்று சனிக்கிழமை குறித்த விளையாட்டுப் போட்டி இடம் பெறுகின்றமையால் கத்தோலிக்கர்கள் விசனம் தெரிவித்தனர்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் பலர் கத்தோலிக்க இளைஞர், யுவதிகள் என்பதால் இந்த விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (உ-8)

## வவுனியாவில் இன்று காலை மரதன் ஓட்டம்

வவுனியா, ஏப்.7
வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு வவுனியாவில் நடக்கின்றது. இன்று காலை 6 மணிக்கு பரக்கும்பா மகா வித்தியாலயத்தின் முன்றிலில் ஆரம்பமாகும் மரதன் ஓட்டப்போட்டி ஓமந்தையில் முடிவடையும்.

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு வலயங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட முதல் 10 இடங்களையும் பெற்ற 120 ஆண்கள், 120 பெண்கள் அதிகபட்சமாக பங்குகொள்ள உள்ளனர் என வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சத்தியபாலன் தெரிவித்தார். (உ-400)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 9 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோத உள்ளது. (உ-23)

## உயிர்ப்பு விழா போட்டிகள்

கொழும்புத்துறை, ஏப்.7
உயிர்ப்பு விழாவை ஒட்டி கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய இளையோர் ஒன்றியத்தால் கிரிக்கெட் போட்டி, சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாஸ் தலைமையில் உயிர்ப்பு ஞாயிறான நாளை காலை 9.30 மணிக்கு மரதன் ஓட்டமும் சிறுவர்களுக்கான போட்டியும் நடைபெறும். பி.ப. 2 மணிக்கு இளைஞர் எதிர் சம்சாரிகளுக்கான சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டியும் இளையோருக்கான போட்டிகளும் இடம்பெறும். (உ-135)


## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.7
இலங்கைச் சதுரகச் சம்மேளம் நடத்தும் வடமாகாணத்துக்கான இளையோர் சதுரங்கப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டுத் திடலில் ஆரம்பமானது.

யாழ். மாவட்டத்தில் இருந்து 46 போட்டியாளர்கள் பங்கு கொண்டுள்ளனர் என யாழ். மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் செயலாளர் க.ஆதவன் தெரிவித்தார். (உ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புமா இலங்கை



இலங்கை எதிர் இங்கிலாந்து (கொழும்பு சரவணமுத்து மைதானம்)
இலங்கை - 275 & 218/6 இங்கிலாந்து - 460

இலங்கை (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பிரசாத் | c பிறஸ்னன் b பின் | 34 | 59 | 5 | 0 |
| திரிமன்னே | c ஸ்ரோரஸ் b அண்டர்ஸன் | 11 | 28 | 1 | 0 |
| டில்ஷான் | c அண்டர்ஸன் b சுவான் | 35 | 66 | 0 | 0 |
| சங்ககார | c பிரையர் b சுவான் | 21 | 86 | 2 | 0 |
| ஜெயவர்தன | (ஆட்டமிழக்காமல்) | 55 | 157 | 4 | 0 |
| சமரவீர | b சுவான் | 47 | 139 | 4 | 0 |
| ரந்தீவ் | b சுவான் | 00 | 02 | 0 | 0 |
| மத்தியூஸ் | (ஆட்டமிழக்காமல்) | 03 | 09 | 0 | 0 |
| | உதிரிகள் | 12 | | | |
| | மொத்த ஓட்டங்கள் | 218 | | | |

இலக்கு இழப்பு: 1-23, 2-64, 3-104, 4-125, 5-215, 6-215

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அண்டர்ஸன் | 16 | 6 | 27 | 1 |
| பின் | 15 | 1 | 30 | 1 |
| சுவான் | 26 | 1 | 82 | 4 |
| பிறஸ்னன் | 11 | 5 | 14 | 0 |
| பட்டேல் | 19 | 6 | 37 | 0 |
| பீற்றர்ஸன் | 4 | 0 | 18 | 0 |

Sri Lanka Cricket

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பீற்றர்ஸனின் அதிரடிச் சதத்தின் உதவியுடன் பலமான நிலையை இங்கிலாந்து எட்டியுள்ளது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்களுடன் தனது சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன சதமடித்தார். உப தலைவர் மத்தியூஸூம், சமர வீரவும் அரைச்சதம் கடந்தனர். இங்கிலாந்தின் சுழல் மன்னன் சுவான் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

இதற்குப் பதிலளித்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்ஸனின் அதிரடியான சதத்தின் மூலம் வலுவான இலக்கினை நிர்ணயித்தது. முதலாவது இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இங்கிலாந்து அணிக்கு துடுப்பாட்டத்தில் தூணாக நின்று பீற்றர்ஸன் 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இந்த ஓட்ட எண்ணிக்கையை அவர் 'ரி-20' ஆட்டம் போன்று அதிரடியாக விளாசிப் பெற்றுக் கொண்டார். இலங்கையின் சார்பில் அடுத்த முரளியாக உருவெடுத்திருக்கும் ஹேரத் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இலங்கை அணி 185 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை நேற்று முன்தினம் தொடங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக 'நைற் வோர்ச்மன்' தம்மிக்க பிரசாத், திரிமன்னே களமிறங்கினர். நேற்று முன்தினம் ஆட்டத்தில் இலங்கை அணி ஓர் பந்துப் பரிமாற்றத்தை மாத்திரமே எதிர்கொண்டது. உதிரிகளாகப் பெற்றுக் கொண்ட நான்கு ஓட்டங்களுடன் மூன்றாவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்திருந்தது. இந்த நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. 'நைற் வோர்ச்மன்' பிரசாத் தனித்திருந்து ஆட மறுமுனையில் திரிமன்னே ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்து இலங்கை அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தினார். தொடர்ந்து நுழைந்த டில்ஷான் வழமை போலல்லாது மிக நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். இரண்டாவது இலக்குக்கான போராட்டம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. 'நைற் வோர்ச்மன்' ஆகக் களமிறங்கிய பிரசாத் ஆட்டமிழந்து வெளியேற சங்ககார களமிறங்கினார்.

இங்கிலாந்துடனான தொடரில் தொடர்ச்சியாக ஏமாற்றி வரும் சங்ககார நேற்றைய தினம் டில்ஷானுடன் இணைந்து தடுத்தாடினார். மிக நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய டில்ஷான் அணி 100 ஓட்டங்களைத் தாண்டியதும் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சங்ககாரவும் ஆட்டமிழக்க இலங்கை அணி 125 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது. அதன் பின்னர் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன மற்றும் திலான் சமரவீர இருவரும் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். சிறந்த போரட்டத்தை வெளிப்படுத்திய மஹேல இலங்கை அணியின் தோல்வியை தடுப்பதற்காக கடுமையாகப் போராடினார். 41 ஆவது அரைச்சதம் கடந்து மஹேல போராட அதற்கு சிறப்பான முறையில் ஒத்துழைப்பைத் திலான் சமரவீர வழங்க இலங்கை அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

ஐந்தாவது இலக்குக்காக 90 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் திலான் சமரவீர மூன்று ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்ட நிலையில் ஆட்டமிழக்க இலங்கையின் வெற்றிப் பயணம் கேள்விக்குறியானது. அதே பந்துப் பரிமாற்றத்தில் அடுத்து நுழைந்த ரந்தீவ் ஆட்டமிழக்க இலங்கை அணி தடுமாறத் தொடங்கியது. இறுதியில் நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. களத்தில் மஹேல 55, மத்தியூஸ் 3 ஓட்டங்களுடன் உள்ளனர். இலங்கை அணி 33 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை விட முன்னணியில் உள்ளது. இன்றைய இறுதி நாளில் இலங்கை அணி கைவசம் உள்ள நான்கு இலக்குகளையும் பாதுகாக்குமாக இருந்தால் தொடரை வெல்ல முடியும். (5)

# செல்ஷி கழகம் அரையிறுதிப் போட்டியில் பார்சிலோனா அணியை எதிர்கொள்கிறது

செல்ஷி மற்றும் பென்பிக்கா கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக் காலிறுதிப் போட்டியில் செல்ஷி கழகம் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது. பென்பிக்காவின் இறுதி நேர கடுமையான சவாலை முறியடித்தே செல்ஷி கழகம் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது.

போட்டியின் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய செல்ஷி கழகம், 21 ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி உதையொன்றைக் கோலாக்கியது. முதலாவது கோலை செல்ஷி கழகம் சார்பாக பிராங்க் லம்பார்ட் போட்டார்.

அதன் பின்னர் போட்டியின் 40 ஆவது நிமிடத்தில் பென்பிக்கா கழகத்தின் அணித்தலைவர் மக்ஸி பெரைய்ரா சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். போட்டியின் அரைவாசி நேர இடைவேளையின் போது செல்ஷி கழகம் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்டதோடு எதிரணி 10 பேர்களுடன் விளையாட வேண்டி ஏற்பட்டமையால் செல்ஷி கழகம் இலகுவான வெற்றியைப் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இரண்டாவது பாதியில் விட்டுக்கொடுக்காமல் ஆடிய பென்பிக்கா கழகம் 85 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் போட்டு போட்டியை 1-1 என்ற கணக்கில் சமநிலைப்படுத்தியது.

பிரான்சிஸ்கோ ஜேவியர் கார்சியா அந்தக் கோலை பென்பிக்கா கழகம் சார்பாக போட்டார். எனினும் சுதாகரித்து ஆடிய செல்ஷி கழகம் 90 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் போட்டு போட்டியை 2-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டது.

செல்ஷி கழகம் சார்பாக இரண்டாவது கோலை மத்திய கள வீரர் ரோல் மெய்ரீலெஸ் போட்டார்.

இந்த வெற்றியை அடுத்து செல்ஷி கழகம் அரையிறுதிப்போட்டியில் பார்சிலோனா அணியைச் சந்திக்கவுள்ளது. (5)



# எனது பந்து வீச்சு தொடரும்

தொடர்ச்சியான உடல் உபாதைகளினால் பாதிக்கப்பட்டு வரும் இலங்கை அணியின் உப தலைவரும் சகலதுறை வீரருமான அன்ஜலோ மத்தியூஸ் தான் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்ற போட்டியில் தொடர்ந்தும் பந்துவீச எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். கால்ப் பகுதிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான உபாதைகள் காரணமாக சகலதுறை வீரராக அன்ஜலோ மத்தியூஸின் எதிர்காலம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டது.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் தேர்வுசெய்யப்பட்டிருந்த அன்ஜலோ மத்தியூஸ், போதிய உடற்தகுதி இல்லாமை காரணமாக முதலாவது ஆட்டத்துக்கான அணியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். அதன் போது கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் அஜந்த டி மெல், சகலதுறை வீரராக அன்ஜலோ மத்தியூஸின் எதிர்காலம் கேள்விக்குரியது எனத் தெரிவித்ததோடு, எதிர்காலத்தில் அவரைத் தனித்த துடுப்பாட்ட வீரராகப் பயன்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார்.

எனினும் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நடுவே கருத்துத் தெரிவித்த அன்ஜலோ மத்தியூஸ், ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள் மற்றும் 'ரி-20' ஆட்டங்களில் பந்துவீசுவதை ஒருபோதும் கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்த வரையில் தனது பந்துவீச்சுத் தொடர்பாக திரும்பச் சிந்திக்க வேண்டியிருப்பதை ஏற்றுக்கொண்ட அன்ஜலோ மத்தியூஸ், தனது காலில் தொடர்ந்து வரும் உபாதைகள் காரணமாக இதைச் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சியாகத் தனது காலை அண்டி உபாதைகளைச் சந்தித்து வருவதற்குரிய காரணங்களை கண்டறிய முடியவில்லை எனத் தெரிவித்த அன்ஜலோ மத்தியூஸ், இந்த உபாதைகளை இல்லாமற் செய்யத் தன்னால் முடிந்தளவு முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்கள், ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள் மற்றும் 'ரி-20' ஆட்டங்கள் மூன்றிலும் விளையாடி வருவதன் காரணமாக தனது வேலைப் பழு தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகத் தெரிவித்த அவர், மூன்று வகையான ஆட்டங்களிலும் விளையாடுவது, அதுவும் சகலதுறை வீரராகப் பங்கேற்பது உடலுக்கு மிகவும் கடினமானது எனத் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தை தவறவிட்ட அன்ஜலோ மத்தியூஸ், அதன் பின்னர் அண்மையில் இடம்பெற்ற ஆஸ்திரேலிய முக்கோணத் தொடரின் இறுதி ஆட்டங்களை தவறவிட்டதோடு, ஆசியக் கிண்ணத் தொடரில் அனைத்தையும் தவறவிட்டிருந்தார். முதலாவது டெஸ்ட் ஆட்டத்தைத் தவறவிட்டதன் பின்பு இடம்பெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தனித் துடுப்பாட்ட வீரராக அன்ஜலோ மத்தியூஸ் பங்கேற்று வருகிறார். (5)



# ரெய்னா முதலிடத்தில்

ஐ.பி.எல் 'ரி-20' கிரிக்கெட் தொடரில் அதிக ஓட்டங்கள் உள்ளிட்ட பல சாதனைகள் செய்த வீரர்களின் பட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சுரேஷ் ரெய்னா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கிய ஐ.பி.எல் 'ரி-20' கிரிக்கெட் தொடர், தற்போது ஐந்தாவது வருடமாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டுக்கான ஐந்தாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் 36 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தார் ரெய்னா, ஆனால் இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல் சீசனில் 63 ஆட்டங்களில் விளையாடி 1849 ஓட்டங்கள் (சராசரி: 36.25) எடுத்து முதலிடத்தில் உள்ளார். அதே போன்று அதிக ஆட்டங்களில் விளையாடிய வீரர்கள் பட்டியலில் சி.எஸ்.கே வீரர்கள் ரெய்னா, பத்ரிநாத் இருவரும் தலா 63 ஆட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளனர். இவர்கள் இருவர் மட்டுமே சென்னை அணி இதுவரை விளையாடியுள்ள எல்லா ஆட்டங்களிலும் பங்கேற்றுள்ளனர்.

அதிக ஆறு ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலிலும் ஆஸ்திரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்டுக்கு (82) அடுத்தபடியாக ரெய்னா 2 ஆவது இடத்தில் (79) உள்ளார். அதிக பிடி எடுத்த வீரர்கள் பட்டியலிலும் ரெய்னா (31) முதலிடத்திலும், அடுத்தபடியாக ரோகித் சர்மா (30) 2 ஆவது இடத்திலும் உள்ளனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்ஸனுக்கு எச்சரிக்கை




இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கு மிடையில் இடம்பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் கெவின் பீற்றர்ஸன் - நடுவர்களால் எச்சரிக்கப்பட்டார். 'ஸ்விற்ச் ஹிற்'' என்று அழைக்கப்படும் புதியவகைத் துடுப்பாட்டம் தொடர்பாகவே அவர் எச்சரிக்கப்பட்டார்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர் இடதுகைத் துடுப்பாட்ட வீரராக மாறியும், இடதுகைத் துடுப்பாட்ட வீரர் வலதுகைத் துடுப்பாட்ட வீரராக மாறியும் துடுப்பெடுத்தாடும் இந்த வகைத் துடுப்பாட்டத்தை கெவின் பீற்றர்ஸன், ஆஸ்திரேலியாவின் டேவிட் வோணர் உட்பட சில வீரர்கள் சிறப்பாக விளையாடி வருகிறார்கள். இந்த ஆட்ட முறை குறித்து விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வந்தாலும், பொதுவாக இதற்கு ஆதரவாகவும் கருத்துக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

எனினும் இந்த ஆட்டத்தில் கெவின் பீற்றர்ஸன் 'ஸ்விற்ச் ஹிற்' முறையில் சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தார். அதன்போது டில்ஷான் வீசிய ஓர் பந்து பரிமாற்றத்தில், இரண்டாவது பந்தை வீச முற்பட்ட போது கெவின் பீற்றர்ஸன் முன்னதாகவே 'ஸ்விற்ச் ஹிற்' இற்கு தயாராகினார். அதைக்கண்ட டில்ஷான் தனது பந்து வீச்சை நிறுத்தி மீளப் பந்து வீசினார். இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு பந்து பின்னதாக இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்களான மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார மற்றும் திலகரட்ண டில்ஷான் ஆகியோர் நடுவரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தனர். அது கெவின் பீற்றர்ஸனின் ' ஸ்விற்ச் ஹிற்' தொடர்பாகவே அமைந்தது எனக் கருதப்படுகிறது.

அதன் பின்னர் அந்த பந்து பரிமாற்றத்தின் ஐந்தாவது பந்தை வீச டில்ஷான் முற்பட்ட போது கெவின் பீற்றர்ஸன் மீண்டும் 'ஸ்விற்ச் ஹிற்' ஐ ஆட முனைந்தார். அதைக் கண்ட டில்ஷான் மீண்டும் பந்துவீசுவதை நிறுத்தினார். திரும்பப் பந்துவீச டில்ஷான் முனையும் போது மீண்டும் கெவின் பீற்றர்ஸன் 'ஸ்விற்ச் ஹிற்' ஐ ஆட முனைய டில்ஷான் மீண்டும் தனது பந்துவீச்சை நிறுத்தினார்.

டில்ஷான் அந்தப் பந்து பரிமாற்றத்தில் 3 ஆவது முறையாகவும் தனது பந்துவீச்சை இடைநிறுத்தியதைக் கண்ட நடுவர் - கெவின் பீற்றர்ஸனுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

விதிகளின்படி பந்துவீச்சாளர் தனது பின்னங்காலை பந்துவீச நிலத்தில் ஊன்றிய பின்னரே ஒரு துடுப்பாட்ட வீரரால் 'ஸ்விற்ச் ஹிற்' இற்காக தன்னைத் தயார்படுத்த முடியும். அதற்கு முன்னதாக கெவின் பீற்றர்ஸன் 'ஸ்விற்ச் ஹிற்' இற்காக முயற்சித்தார் எனத் தெரிவித்தே நடுவர் எச்சரிக்கை விடுத்தார்.

இன்னுமொருமுறை கெவின் பீற்றர்ஸனோ அல்லது ஏனைய இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரரோ இந்த இன்னிங்ஸில் அவ்வாறு தவறாக 'ஸ்விற்ச் ஹிற்' ஐ ஆட முனைந்தால் இங்கிலாந்து அணியின் ஓட்டங்களிலிருந்து 5 ஓட்டங்கள் கழிக்கப்படும் எனவும் உத்தியோகபூர்வ எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் மீள் ஒளிபரப்புகளில் கெவின் பீற்றர்ஸனுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட மூன்றாவது தடவை அவர் விதிகளுக்கு அமைவாகவே 'ஸ்விற்ச் ஹிற்' இற்கு முயற்சித்தார் எனக் காண முடிந்தது.

(5)


சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

**மாபெரும் விலைத் தள்ளுபடி**

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | |
|---|---|
| கணினி மேசை | 3,250 |
| கணினி கதிரை | 3,850 |
| றெசிங் ரேபிள் | 3,000 |
| குசன் செற் | 20,000 |
| லெதர் செற் | 36,000 |
| அலுமாரி | 10,750 |



மெத்தை [Arpico] கணினி மேசை, கணினி கதிரை, றெசின்ரேபிள், சோக்கேஸ் அயன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சுமெத்தை

தொடர்புகளுக்கு: 0773583879, 021 2227892



வடமராட்சியில்

**London College of Achievers**
**French மொழி வகுப்புகள்**

பிரான்ஸ் நாட்டிற்கு திருமணமாகியோ அல்லது Sponsor மூலமோ செல்பவர்களுக்கு தூதரக பரீட்சைக்கு ஏற்ற வகையில் CD, Book மூலம் மொழித்திறனும், அனுபவமும் உள்ள ஆசிரியரால் பிரெஞ் - French கற்பிக்கப்படுகின்றது.

* ஒரு வகுப்பில் குறிப்பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் உங்கள் இடத்தினை இன்றே உறுதி செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

திருமகள் சோதி வீதி, நெல்லியடி.
T.P. 021 2264206, H.L. 0777224994.



**பொருளியல்**
S. வரதராஜன் B.A(Hons)
A/L 2014
பிரிவு – II
ஏப்ரல் 10 பி.ப 4.00 மணி
**றோயல் அக்கடமி**
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)



**கணினி மலிவு விற்பனை**

HP 3.0 FULL SET -24,750/=
FREE- WEBCAM / 4GB PENDRIVE / HEAD PHONE
ஒருவருட உத்தரவாதம்
LAPTOP, DIGITAL CAMERA, PHONE
அனைத்துவகையான பொருள்களும் எம்மால் திருத்திக்கொடுக்கப்படும்.

**ST. ANTONY'S.COM**
187, KKS ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0750698608



**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**
**சுவிஸ், இலண்டன் விசா**

ஆலோசனைகளுக்கு:

**திசைகாட்டி**
(பிறை) லிமிட்

யாழ்ப்பாணம் - 021 2219016
கிளிநொச்சி - 021 2285544
கொழும்பு - 0112366925



சர்வதேச தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகள்
குறுகிய காலத்துக்குள், மிகக்குறைந்த கட்டணத்துடன்...

COURSE & EXAMS Rs. 6500 ONLY

ICDL
International Computer Driving Licence



- Concepts of ICT
- Using the Computer and Managing Files
- Word Processing
- Spreadsheets
- Using Databases
- Presentation
- Web Browsing and Communication

**Gateway**
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk



**யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்**
இல. 92/1, சேர் பொன். இராமநாதன் வீதி,
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

01. வங்கியியல் கற்கைள் : CBF, DBF
 * வங்கியியல் கற்கைகளுக்கான அனைத்து பாடங்களும் ஆரம்பமாகின்றன.
 * வங்கி உத்தியோகத்தர்கள், வங்கிப் பயிலுநர்கள் இணைந்து கொள்ளமுடியும்.
 * க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கும் விசேட பிரிவு
 * புதிய பாடத்திட்டம், கட்டுரை வினாக்கள் பயிற்சியளிக்கப்படவுள்ளன.

02. சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர் கற்கை நெறி : ACCA
 * 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.
 * தொழில் வாய்ப்பினைப் பெறக்கூடிய கற்கை நெறி.
 * இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறி.

சனி, ஞாயிறு தினங்களில் 2.00 pm - 5.00pm
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 09.04.2012 - 15.04.2012 முற்பகல் : 10.00 மணி

இயக்குநர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்



**வீடு வாடகைக்குத் தேவை**
3 பேர் கொண்ட Family ஒன்றுக்கு நல்லூர், திருநெல்வேலி அல்லது அதனை அண்டிய இடத்தில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 077220 3080



**சிங்களம் பேச்சுப்பயிற்சி**
(சிங்களம் கதைப்பது எவ்வாறு)
ஆரம்பம் 07.04.2012 சனியன்று
மாலை 07.00 மணிக்கு

**பேச/எழுத/வாசிக்க**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
(சனி/ ஞாயிறு மற்றும் வார நாள்களில்)
(பாடநெறி முடிவின் போது அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். கடந்த காலங்களில் என்னிடம் கல்வி கற்றவர்கள் (யாழ் மற்றும் சாவகச்சேரி) சான்றிதழ் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ மாஸ்டர்**
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
இல. 41, றக்கா லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777033729



**Sky Computers (Pvt) Ltd**
விடுமுறைக்கால கணினி
வகுப்புக்கள் ஆரம்பம்
(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)
Ms Office, DTP, Hardware ,Graphic Designing, Web Designing, Internet & E-mail , Computer Type Setting, Kids Program.
162, Main Street, Jaffna. TP:-021 222 1417



**நெல்லியடி-நாவலர் மடம் வீடு உடன் விற்பனைக்கு**
நெல்லியடி-யாழ்ப்பாணம் பிரதான வீதி, ஓரத்தில் நாவலர் மடம், கால்நடை, கோட்டக்கல்வி, வீதி அதிகார சபை ஆகிய அலுவலகங்களுக்கு முன்பாக அமைந்துள்ள 5 பரப்புக் காணியுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள வீடு (4அறை, 2 சமையலறை, 2 ஹோல், முன் விறாந்தை, குளியலறை) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: சி.லோகேஸ்வரன் (ஆசிரியர்)
நாவலர் மடம். 021-2264304
(16443) (6,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கடப்பதற்குத்
தடைகளும்
வெல்வதற்குப்
போர்களும்
இல்லையென்றால்
வாழ்க்கை
சப்பென்றாகிவிடும்.
நேரு



வீர வசந்தம் 01

உதயன் | 07 ஏப்ரல் 2012 | சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு

# மன ஊக்கமே செயல் ஆக்கம்



■ மணி

குதிரையை குளத்திற்குத்தான் கூட்டிச்செல்லலாம், ஆனால் குதிரைதான் தண்ணீர் குடிக்க வேண்டும், உண்மைதான், ஆயிரம் பேர் ஆயிரம் புத்திமதிகள் சொன்னாலும் கேட்பவர்கள் செயல்படவில்லையென்றால் ஒரு உபயோகமுமில்லை.

இந்த "success" என்கின்ற வெற்றி வார்த்தையில் இறுதியில் இருக்கிற "s" ஏழாவது எழுத்து மிகச்சரியான பொருளைப் பொருத்தமாக Self Motivation என்று வெற்றி பெறுவதற்கான மிக இன்றியமையாத குணத்தை நமக்குத் தெரிவிக்கும் விதமாக அமைந்திருக்கிறது.

எத்தனை பயிற்சிகள் பெற்றாலும் எத்தனை நூல்களைக் கற்றாலும் தனி மனிதன் தன்னைத்தானே " செயல்படுத்துவதற்கான " ஊக்கத்தை உருவாக்கிக் கொள்ளாவிட்டால் பயனின்றிப்போகும்.

இந்தப் பிரபஞ்ச நியதி " செயல் - விளைவு" என்கின்ற பேருண்மை செயலின்றி விளைவு இல்லை. இதனால்தான் "கடின உழைப்புக்கு ஈடுஇணை ஏதுமில்லை" என்றும் " உழைத்தால்தான் உயர முடியும்" என்றும் உலகத்தில் மாறாத ஒரு உண்மையை மாற்றி, மாற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

உழைப்பது செயல், செயல் செய்ய ஊக்கம் தேவை, ஊக்கம் என்பது உற்சாகத்தால் உருவாவது, உற்சாகம் உருவாக உள்ளத்தில் மகிழ்ச்சி தேவை, மகிழ்ச்சி என்பது விளைவை எண்ணிப்பார்த்து விரும்பிய விளைவை அடைந்துவிட்டால், அதை அனுபவிக்கிற நிலையை கற்பனையில் கண்டு, அதை அடைய இப்போது செயல்பட வேண்டும் என்று செயலில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வது, அதாவது உற்சாகத்தோடு உழைக்க முயல்வது, மகிழ்ச்சியோடு உழைப்பின் வலியை உணராமல் உழைப்பது.

வள்ளுவர் சொல்லுவார் "மடுத்தவாயெல்லாம் பகடன்னான்" என்று அதாவது வண்டிகளை இழுக்கப் பூட்டப்பெற்ற எருதுகள் வண்டிச்சக்கரம் மணலில் அமிழ்ந்தாலும், சேற்றில் சிக்கினாலும், கற்கள் இடைப்பட்டாலும் வாயில் நுரை தள்ள தன் வாய் நிலத்தில் படுமளவு முனைந்து குனிந்து அந்த வண்டியைப் பாரத்தோடு வெற்றிகரமாக இழுப்பது போல, வெற்றியை நோக்கிப் பயணப்படுகிறவர்கள் இடர்களையெல்லம் கால்களால் இடறிவிட்டு எழுந்துநின்று, நிமிர்ந்து, வீர நடைபோட்டு, வெற்றியை நோக்கி முன்னேற வேண்டும்.

"ஊக்கமது கைவிடேல்" என்று உரக்கக் கூறுவார் ஆத்தி சூடியருளிய ஔவையார்.

வள்ளுவரின் வாக்கு,

"**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை**" - குறள் 594

"ஆக்கம்" என்பது "செல்வம்" ஆக்கம் என்பது ஒன்றை உருவாக்குவது ஆக்கம் ஆக்கபூர்வமானது.

அசைவிலா, அதாவது தளர்வில்லாத, மனத் தளர்ச்சி அடையாத, சலிப்பு ஏற்படாத ஊக்கத்தோடு உழைப்பவனுடைய முகவரியை வழி கேட்டுக் கொண்டு "செல்வம் என்கிற திருமகள் சேர்வாள் என்று உருவகப்படுத்துகிறார் வள்ளுவர்.

வளமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதுதான் அனைவரின் ஆசை. வளமான வாழ்க்கைக்கும் வளமையை அனுபவிக்கவும் ஊக்கம் தான் உறுதுணை.

உற்சாகம் ஒன்றே ஊக்கம் தரும். ஊக்கம் ஒன்றே செயல்பட வைக்கும். செயல்பட்டால் தான் விரும்பிய இலக்கை அடைய முடியும். விரும்பியதை அடைவதில்தான் மகிழ்ச்சி. மகிழ்ச்சிதான் வாழ்வின் இலக்கு. பல நேரங்களில் நம்மை நாம் ஊக்குவித்துக் கொள்வதற்கும், செயல்பட வைப்பதற்கும், பல உத்திகளை நாம் கையாளலாம்.

சாதனையாளர்களின் வாழ்க்கைச் சரிதங்களைப் படிக்கலாம். சாதிக்க முயன்ற அவர்கள், சந்தித்த சவால்களை அறிந்து கொள்ளலாம், அப்படிப் படிக்கிற பொழுது அவர்கள் சந்தித்த இடையூறுகளும், தடைகளும், சவால்களும் நம்முடைய சிரமங்களோடு ஒப்புநோக்கினால் நாம் சந்திக்கிற தடைகள் மிகச் சாதாரணமானவைகள் என்று நம்மை எண்ண வைக்கலாம்.

மற்றவர்களனைவரும் தடைகளைத் தாண்டாமல், தகர்த்தெறியாமல் சாதிக்கவில்லை என்பதை உணரலாம். நமக்குள் ஒரு தன்னம்பிக்கையை உருவாக்கலாம்.

மிகச் சிறந்த தன்னம்பிக்கை பேச்சாளர்களின் உரைகளை நேரில் சென்று கேட்கலாம். உணர்ச்சி பூர்வமான உற்சாகமான பேச்சுக்கள் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணும். இரத்தத்தில் "அட்ரீனலினை "(ADRENALINE) சுரக்கச் செய்யும். நரம்புகள் புடைத்தெழும். சாதிக்க வேண்டும் என்கிற வெறி உண்டாகும்.

தன்னம்பிக்கை பேச்சாளர்களின் உரையை நேரில் கேட்கும் வாய்ப்பில்லாதபோது பதிவு ஒலிநாடாக்களை வாங்கி வைத்து அவ்வப்போது கேட்கலாம் உற்சாகப் படுத்திக் கொள்ளலாம்.

ஒரு நல்ல புகழ்பெற்ற நட்சத்திரங்கள் நடித்த வெற்றித் திரைப்படத்தைப் பார்க்கிற பொழுது கூட அந்த நட்சத்திரத்தின் திறமைகளையும் சாதனைகளையும் எண்ணிப் பார்த்து நம் மனதிற்குள் சாதனை எண்ணங்களை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

**உற்சாகம் ஒன்றே ஊக்கம் தரும். ஊக்கம் ஒன்றே செயல்பட வைக்கும். செயல்பட்டால் தான் விரும்பிய இலக்கை அடைய முடியும். விரும்பியதை அடைவதில்தான் மகிழ்ச்சி. மகிழ்ச்சிதான் வாழ்வின் இலக்கு.**

வெற்றிக்குத் தேவை விடாமுயற்சி, விடா முயற்சி என்பது விட்டுவிடாமல் தொடர்ந்து செயல்படுவது என்பதாகும்.

எந்த ஒன்றை நம்மால் மிகச் சிறப்பாகச் செய்ய முடியுமோ அந்த ஒன்றைத் தொடர்ந்து செய்கிற பொழுது வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை.

வரலாற்றில் இந்த விடாமுயற்சி என்கிற பண்பு நலத்தால் வெற்றி பெற்றவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஹோண்டா நிறுவனத்தைத் தொடங்கிய "ஹோண்டா" அப்போதைக்கு புகழ்பெற்ற "டயோட்டா" கார் தயாரிக்கும் நிறுவனத்தின் கார்களுக்குத் தேவையான எஞ்சின் பிஸ்டன் ஒன்றை வடிவமைத்து அது குறித்த வரை படத்துடன் டயோட்டா நிறுவன அதிகாரிகளைச் சந்திக்கச் சென்ற பொழுது அவர்கள் ஹோண்டாவைச் சந்திக்கவே இசையவில்லையாம். பல நாள்கள் முயற்சிக்குப் பின்னர் சந்தித்துப் புதிய பிஸ்டனின் நல்ல மேம்பட்ட தன்மைகளை எடுத்துக் கூறிய பொழுது டயோட்டா நிறுவனம் அதை ஹோண்டா அவர்களே தயாரித்து தரும்படி கேட்டதுடன், அதைத் தொடர்ந்து வாங்கிக் கொள்ளவும் இசைவு தந்தார்கள்.

"ஹோண்டா" அவர்கள் உளம் மகிழ்ந்து ஒரு பிஸ்டன் தயாரிப்பதற்கான உற்பத்தி நிறுவனத்தைப் பெரும் பொருள் செலவழித்து உருவாக்கினாராம், ஜப்பானில் நில நடுக்கம் ஏற்பட்டுத் தொழிற்சாலை முழுவதும் அழிவுக்குள்ளானது.

இயற்கையின் சீற்றத்திற்கு யார் தான் என்ன செய்ய முடியும்? நாட்டிலே அனைவருக்கும் ஏற்பட்ட ஒன்று தான் தனக்கு நேர்ந்தது என்று மனதைத் தேற்றிக் கொண்டு, மீண்டும் முனைந்து இரண்டாவது முறையாக தனது தொழிற்சாலையை நிர்மாணித்தார். உற்பத்தியைத் தொடங்கலாம் என்று எல்லா ஏற்பாடுகளும் தயாராக இருந்த போது, இரண்டாவது உலகப் பெரும் போரில் ஜப்பானின் சல்லடைக் கண்களாகக் குண்டு மழையால் துளைக்கப் பட்டது. ஹோண்டாவின் இரண்டாவதாக நிர்மானிக்கப் பெற்ற தொழிற்சாலையும் தரைமட்டமானது.

ஹோண்டா மனம் தளரவில்லை, இந்த மனம் தளரா நிலைதான் விடா முயற்சியின் அத்திபாரம்.

மீண்டும் மூன்றாவது முறையாக ஹோண்டா முயன்று தனது பிஸ்டன் தொழிற்சாலையை எடுத்து நிறுத்தி டயோட்டா நிறுவனத்திற்கு பிஸ்டன் தயாரித்துக் கொடுத்து வணிகத்தைத் தொடங்கிய நிறுவனம் தான் இன்றைக்கு உலகம் முழுவதும் தனது தனித்துவம் மிக்க கார்களாலும் இரு சக்கர வாகனங்களாலும் இணையற்ற நிறுவனமாகக் கொடிகட்டிப் பறக்கிறது.

ஹோண்டா அவர்களின் விடா முயற்சி தான் நமக்கெல்லாம் நல்லதொரு எடுத்துக் காட்டு.

மனிதர்கள் தோற்பது பல காரணங்களினால் என்றாலும் விடாமுயற்சியின்மை ஒரு தலையாய காரணம்.

ஒரு சாதாரணமான தேனிரும்பு (SOFT IRON) அதாவது MILD STEEL கடினமான எஃகு இரும்பாகவோ அல்லது வார்ப்பு இரும்பாகவோ மாற கரி என்கின்ற கார்பனின்(CORBON) அளவை அதில் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

மென்மையான கம்பியாக நீட்டவோ, தகடாக அடிக்கவோ முடியக் கூடிய தேனிரும்பைக் கடினமான வார்ப்பு இரும்பாக மாற்ற கார்பன் எப்படித் துணை புரிகிறதோ அதுபோல, அந்தக் கார்பனைப் போல, விடா முயற்சி வெற்றிக்கு வலுசேர்க்கிறது. வெற்றியை அடைய வைக்கிறது.

வரலாற்றில் ஜூலியஸ் சீஸர் என்கின்ற மாவீரன் ரோமாபுரி பேரரசன் ஐரோப்பாவில் பிரான்சை வென்ற பின்னர் இங்கிலாந்தை வெல்ல நினைத்தானாம், இங்கிலாந்தோ கடலால் சூழப்பெற்ற ஒரு தீவு. ஐரோப்பாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே ஆங்கிலேயர் கால்வாய்.

ஜூலியஸ் சீஸரின் படைகளோ நிலத்தில் போரிட்டு அனுபவம் பெற்ற படைகள். கடல் கடந்து போரிட்ட அனுபவம் இல்லாத போர் வீரர்கள் இதனால் இரண்டு தடவை போரில் தோல்வி கண்டு மூன்றாவது முறை வென்றது. இப்படியாக முயற்சி எமக்கு கண்டிப்பாக வெற்றியை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (42)

**'எண்களும் நட்பும்' தலைப்பிலான விபரங்கள் தொடர்கின்றன.**

**பிறப்பு எண் 2(2,11,20, 29 திகதிகளில் பிறந்தவர்கள்)**

1,3,4,7,8 போன்ற எண்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் இவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல உதவிகளை பல நேரங்களில் செய்வார்கள். என்றாலும் 7 ஆம் எண்காரர்கள் இவர்களின் பேச்சுக்கு வசியமாகி இவர்கள் கேட்கும் அனைத்துவிதமான உதவிகளையும் செய்து தருவார்கள். இவர்களது நட்பு நன்கு வேரூன்றிக் காணப் படும். எந்த மந்திர தந்திர சக்தியாலும் பிரிக்க முடியாத நட்பாக இருக்கும். இவர்களின் பேச்சுத்தான் அவ ருக்கு (7 ஆம் எண்காரருக்கு) வேதவாக்காக அமையும். 1ஆம் எண் காரர்கள் நட்பும் நன்றாக அமையும். பல உதவி களை 1ஆம் எண்காரர்கள் செய்வார்கள். 1,7, 2 எண் காரர்கள் ஒரு கூட்டமாகச் செயல்படுவார்கள். 2ஆம் எண் காரர்கள் நட்பு, 2 ஆம் எண்காரர்களுக்கு வளர்பிறை, தேய் பிறை போன்று இரண்டு விதமாகவே அமைந்து விடும். முதலில் நன்கு ஒன்றிப் பழகிய இவர்கள் பின்னர் ஜென்ம எதிரிகளாக மாறிவிடுவார்கள். கவனமாக இருக்க வேண்டும்.

**பிறப்பு எண் 3 (3,12,21,30 திகதிகளில் பிறந்தவர்கள்)**

2,3,9 போன்ற எண்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் இவர்களுக்கு மிகச்சிறந்த உதவிகளைச் செய்வார்கள். 5ஆம் எண்காரர்களால் சிறு உதவிகள் கிடைக்கும். 2ஆம் எண்காரர்கள் குறிப்பிட்டுச் சொல்லும் படி வாழ்க்கையில் மிகப் பெரிய உதவிகள் பல செய்வார்கள். வாழ்வின் பல அத்தியாயத்தில் உறு துணையாக இருப்பார்கள். 9 ஆம் எண் காரர்கள் மிகவும் காந்தம் போன்ற ஈர்ப்புடன் பழகுவார்கள். ஆழ்ந்த நட்பு 9ஆம் எண்காரர்களுடன் இவர்களுக்கு மலரும். மிகச்சிறந் உதவிகளைப் பரிமாறிக் கொள்வார்கள். மற்றவர்களிடம் இவர்களை விட்டுக்கொடுத்துப்பேச மாட்டார்கள். 6 ஆம் எண்காரர்களால் ஆபத்தும், நஷ்டமும் வந்து சேரும், 3 ஆம் எண்காரர்கள் 6 ஆம் எண்காரர்களால் நஷ்டமும் வந்து சேரும்.3ஆம் எண்காரர்கள் 6 ஆம் எண்ணின் உதவியால் பல அவமானத்தையும், கெட்ட பெயரையும், நஷ்டத்தையும் சந்திக்க நேரிடும்.

**பிறப்பு எண்:4 (4, 13, 22,31 திகதிகளில் பிறந்தவர்கள்)**

1,2,4,8 போன்ற எண்காரர்கள் இவர்களுக்குச் சிறந்த உதவிகளைச் செய்வார்கள். 1 மற்றும் 8 ஆம் எண்காரர்கள் இவர்களின் வாழ்க்கையில் முக்கிய நபர்களாக வலம் வருவார்கள். 1 ஆம் எண்காரர்களுடன் காந்தம் போல ஒட்டிக் கொள்வார்கள். மிகப் பெரிய உதவிகளை 1 ஆம் எண்காரர்களுக்கு வசியமாகி பல உதவிகளைப் பகிர்ந்து கொள்வார்கள். 8 ஆம் எண்காரர்களுடன் மிகச்சிறந்த நட்பை உருவாக்கிக் கொள்கின்றனர்.



**பிறப்பு எண் 5 (5,14, 23 திகதிகளில் பிறந்தவர்கள்)**

1,3,5,7,9 போன்ற எண்காரர்கள் சிறந்த உதவிகளைச் செய்வார்கள். பொதுவாக அனைத்து நபர்களிடமும் சகஜமான நட்பு வைத்திருப்பார்கள். 9 ஆம் எண்காரர்கள் இவர்களிடம் வசியமாகி பல உதவிகளை இவர்களுக்குச் செய்வார்கள். 7ஆம் எண்காரர்கள் நல்ல நட்புறவுடன் பழகுவார்கள். 5,7,9 எண்காரர்களை விடவும் நட்பாக பழகுவார்கள்.

**பிறப்பு எண் 6 (6,15,24 திகதிகளில் பிறந்தவர்கள்)**

6,9 போன்ற எண்காரர்கள் இவர்களிடம் நெருங்கிப் பழகுவார்கள். வாழ்க்கையின் முக்கிய நபர்களாக இந்த இரு எண்காரர்களும் உதவிகள் பல உடனிருந்து செய்வார்கள். 9ஆம் எண்காரர்கள் மிகவும் நட்பாகி இவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வார்கள். மிகுந்த நட்புறவுடன் பழகுவார்கள். பல வெற்றிகரமான சம்பவங்கள் இவர்கள் இருவரது நட்பினால் நடக்கும்.

**பிறப்பு எண் 7 (7,16,25 திகதிகளில் பிறந்தவர்கள்)**

1,2,4,7 போன்ற எண்காரர்கள் இவர்களுக்குச் சிறந்த உதவிகளைச் செய்வார்கள். 2 ம் எண்காரர்கள் இவர்களுக்கு வசியமாகி சிறந்த ஆலோசனைகள் வழங்கி வாழ்க்கையை மேம்படுத்த உதவுவார்கள். இவர்களது நட்பு ஆழமானதாக அமைந்துவிடும். மிகவும் விசுவாசமுள்ள நட்பாக அமைந்து விடும். இவர்களின் பேச்சுக்கு மறுப்புக் கூறமாட்டார்கள். 2ம் 7ம் இணைந்து செயலாற்றி வெற்றிக்கனியைப் பறிப்பார்கள். உலகத்தவர்கள் வியக்கும் சாதனைகள் பல இந்த 2ம் 7ம் சேர்ந்து செயலாற்றும்போது அரங்கேறும். 1,2,7 எண்காரர்கள் இவர்களைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள்.

**பிறப்பு எண்:8 (8,17, 26 திகதிகளில் பிறந்தவர்கள்)**

1,4,5,8 போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் இவர்களுடன் நட்புறவுடன் பழகுவார்கள். 1 மற்றும் 4ம் எண்காரர்கள் இவர்களுக்கு பல உதவிகளை வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகளில் செய்வார்கள். 4 ஆம் எண்காரர்களால் இவர்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வார்கள். 8ஆம் எண்காரர்கள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளை வலிய வந்து செய்வார்கள்.

**பிறப்பு எண்: 9 (9,18,27 திகதிகளில் பிறந்தவர்கள்)**

3,5,6,8,9 போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நண்பர்களாக அமைவார்கள். 3 மற்றும் 6 ஆகிய எண்காரர்கள் இவர்களிடம் நெருங்கிப் பழகுவார்கள். 3 ஆம் எண்காரர்கள் இவர்களிடம் வசியமாகி பல மனப்பூர்வமான உதவிகளைச் செய்வார்கள். பல இரகசியங்களை 3ஆம் எண்காரர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

**எண்களும் மனித உடலும்**

ஒவ்வொரு எண்ணுக்குடைய கிரகமும் மனித உடலின் பல்வேறு பகுதிகளை ஆட்சி செய்கின்றது. வாதம், பித்தம்,கபம் போன்ற நோய்கள் மனிதனை ஆட்கொள்கின்றன.

1.சூரியன்- தலைப்பாகம்.
2.சந்திரன்- முகபாவனை, மனம்,குடல்,வயிறு.
3.குரு- இருதயம், மூளை பாகங்கள்.
4.இராகு- தொடை, கால், மூட்டு இணைப்பு, விரல்கள்.
5.சுக்கிரன்- இனப்பெருக்க உறுப்புகள்.
7.கேது- கை,தோள்பட்டை, விரல்கள்.
8.சனி- முழங்கால், எலும்பு மச்சை.
9.செவ்வாய்- தமனி, சிரை (இரத்தக் குழாய்), இரத்தம், கைகால் அசைவுகள்.

*(தொடரும்)*

---

# சங்கீதமும் சரித்திரமும்

## "என் ஜன்னலின் வழியேயயில்" கவிஞர் வைரமுத்துவின் வரிகள்

அது என்னவோ தெரியவில்லை. இசைதான் என் உயிருக்கு உணவாக இருக்கிறது. வாத்தியக்கருவிகளின் கானமழையில் என் அத்தனை வெப்பமும் ஆவியாகி விடுகிறது. யாரும் கட்டளை இடாமலேயே இமைகள் இறங்கி விடுகின்றன. ஒரு புல்லாங்குழலின் சின்னச் சிணுங்கல், ஒரு கிடாரின் ரகசிய அதிர்வுகள், ஒரு வீணையின் கனதொனி, வயலின்களின் ஒட்டு மொத்தமான பிரவாகம், ஷெனாயின் அகலமான ஓசைகள். தில்ருபாவின் ஆனந்தமான அழுகை இவைகளையெல்லாம் இப்போது என்னால் ஜாதி பிரித்து நேசிக்க முடிகிறது. திரைப்படத்துறைக்கு வருவதற்கு முன்னால் நான் காற்றைப் போல் முற்றும் சுதந்திரமானவனாக இருந்தேன். இப்போதோ ஒரு தங்கச் சிறைக்குள் கைதியாக இருக்கிறேன். பரபரப்பான ஒவ்வொரு நிமிஷமும் இந்தக் கைதியைக் காவல் காத்து வருகிறது. வளரும் கலைஞன் ஒவ்வொருவனும் எதிர்கொள்ள வேண்டிய இன்னல் இது.

குழந்தைக்குப் பல் முளைக்கத் தொடங்கும்போது வயிற்றுக்கடுப்பு வருமாமே, அது மாதிரி இது.

ஒவ்வொரு கலைஞனும் பரபரப்பான அந்த வேர்வைச் சிறையிலிருந்து விடுபட நினைக்கிறான். சிலருக்கு புது மகிழ்ச்சியளிக்கிறது. சிலருக்கு கால் முளைத்த மது மகிழ்ச்சியளிக்கிறது. பலரது கைகளில் சிகிரெட் என்பது எப்போதும் நீங்காத வெள்ளை விரலாக ஆகிவிடுகிறது. ஆத்ம சோதனையில் ஈடுபடுகிறவர்கள் தியானத்தில் விழுந்து திளைக்கிறார்கள். இசையைக்கேட்கும் இனிப்பு இராத்திரிகளில் மேற்சொன்ன உதிரிச் சந்தோஷங்கள் அத்தனையும் நான் ஒட்டு மொத்தமாக அடைகிறேன்.

மௌனத்தைச் சுமந்து கொண்டிருக்கும் இரவு வேளைகளில் அறையை மெழுகிக் கொண்டிருக்கும் மெல்லிய வெளிச்சத்தில், என் ஜன்னல் வடிகட்டி அனுப்பும் வாலிபத்தென்றலில் மிதந்து கொண்டே இசையை இணைந்தோ தனித்தோ அனுபவிக்கும் ஆனந்தமிருக்கிறதே அடடா அது... வாக்கிய வலைகளுக்கு வசப்படாது.

மனசில் இருக்கும் துருக்களையெல்லாம் அது துவக்கி விடுகிறது. மயிர்கால்கள் எங்கும் யாரோ பூவாளியால் பன்னீர் தெளிப்பது மாதிரி இருக்கிறது. என்னைப் புதுப்பித்துக் கொண்டு அடுத்த விடியலுக்கு ஆயத்தமாகிறேன். அதிலும் எனது எழுத்தே சங்கீத வாகனத்தில் ஆரோகணித்து வரும் போது நான் தேவதைகளின் மடியில் கண்ணயர்கிறேன்.

அண்மையில், இளையராஜாவின் சங்கீத ஒலி கேட்கும் ''சலங்கை ஒலி'' என் உறக்கத்தில் கூட ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் இளையராஜாவின் இசை, யாருக்கும் சிக்காத சிகரங்களில் சிம்மாசனம் போட்டுக் கொண்டிருக்கிறது என்றே எண்ணுகிறேன். என்னடா இது. இந்த ஊமை வாத்தியம் இந்த மனிதனின் உத்தரவுக்கு மட்டும் கட்டுப்பட்டு இத்தனை உற்சாக மொழிகளைப் பேசுகிறதே!

இந்தக் கம்பீரமான இசை வெள்ளத்துக்கு இடையில் வரும் சின்னச் சின்ன மௌனங்களுக்குமல்லவா அர்த்தகனம் வந்து விடுகிறது.


''நாத வி[illegible] அவர் நிகழ்த்தியிருக்கும் கீத வினோதங்கள் மனதுக்குள் ஒரு பிரபஞ்சப் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன.

தவஞானிகள் சொல்லும் அத்வைத நிலையை நான் பாடல் ஆரம்பிக்கும் போதே அடைந்துவிடுகிறேன். ஒன்றன் மேல் ஒன்று படரத்துடிக்கும் இரு மனசுகள். நெருப்புக் கங்குகளை முடிந்து வைத்திருக்கிற பட்டுத்துணி மாதிரி அவர்கள் காதலை மறைக்க முடியவில்லை. மொழியைத் துணைக்கழைக்காமலேயே அவர்கள் இமைகளின் அசைவுகளாலும், இதழ்களின் நெளிவுகளாலும் அவர்களின் விலாசம் சொல்லும் வெட்க ரேகைகளாலும் தங்களின் பாஷையைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஓர் இரவில் விரல்களின் எதிர்பாராத ஸ்பரிசத்தில் அதிர்ந்து, மௌனித்துப் போகிறார்கள். பாடல் அந்த மன்மத விநாடிகளில் ஆரம்பமாகிறது.

''மௌனமான நேரம்- இள
மனதிலென்ன பாரம்?
மனதில் ஓசைகள்,
இதழில் மௌனங்கள்
ஏனென்று கேளுங்கள்''

பல்லவி அவர்களின் மண உணர்ச்சிகளைச் சுருக்கிச் சொல்லுகிறது. சரணம் அதற்கு உரை எழுதுகிறது.

''இளமைச் சுமையை மனம்
தாங்கிக் கொள்ளுமோ?
[illegible] அலையைக் கடல்
மூடிக் கொள்ளுமோ?



குளிக்கும் ஓர் கிளி
கொதிக்கும் நீர்த்துளி
கூதலான மார்கழி
நீளமான ராத்திரி
நீ வந்து ஆதரி'' என்னைப் பொறுத்தவரையில் இந்தப் பாடலுக்கு இரு சிறப்புகள் இருக்கின்றன. இளைய ராஜா அவர்கள் இந்தப் பாடலுக்கு மெட்டமைத்த பிறகு மட்டுமல்ல. சங்கராபரணம் கே.விஸ்வநாதன் அவர்களால் இந்தப் பாடலுக்கான காட்சிகளும் எடுத்து முடிக்கப்பட்ட பிறகு எழுதப்பட்ட பாடல் இது.

இந்தப் பாடலின் தொடக்கத்தில் ஆடம்பரமாக ஆரம்பித்த புல்லாங்குழல் சற்று நேரத்தில் மெல்ல மெல்லத் தேய்ந்து தன்னைக் குறுக்கிக் கொள்ளும். காதலர்களின் உள்ளத்தில் உற்பத்தியான வார்த்தைகள், நாவுக்கு வரும்போது கரைந்து விடுகின்றன என்பதற்கான குறியீடு அது. இளையராஜாவின் கற்பனைக்கு நாம் கைதட்டத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க வாத்தும் பாதி அப்பமும்...!

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அதைக் கேட்ட பாங்கோ, இவன் சொல்வது சரிதான். இந்த வாத்தைப் பிடுங்குவதால் என்ன பயன்? தேவை இல்லாமல் ராஜாவின் கோபத்துக்கு ஆளாக வேண்டும். அதற்குப் பதிலாக, இவனுக்கு ராஜா கொடுக்கிற பரிசுகளைப் பறித்துக் கொள்ளலாம்! என்று நினைத்தான்.

பாங்கோ துப்பாக்கியை அகற்றிவிட்டுச் சொன்னான், உன்னை நான் சும்மா விடுகிறேன். ஆனால், ராஜா தருகிற பரிசில் பாதியை எனக்குத் தர வேண்டும்!

நிச்சயம் தருகிறேன்! என்று வில்ஃப்ரெட் சம்மதித்தான். பிறகு, வாத்துடன் அரண்மனைக்குச் சென்றான். தங்க வாத்தைக் கண்டு ராஜா பெரிதும் வியந்தார்.

யாரங்கே? இந்த அற்புதமான பரிசைக் கொண்டுவந்த இவருக்கு, அருமையான விருந்து கொடுங்கள்! என்று கட்டளை இட்டார்.



விருந்து முடிந்த பிறகு, வில்ஃப்ரெட்டுக்கு விலை உயர்ந்த பரிசுகள் தரச் சொன்னார் ராஜா. அப்போது வில்ஃப்ரெட், ராஜாவே... எனக்கு ஒரு அப்பம் மட்டும் போதும். அதுவும் ஒரு பகுதியில் மயக்க மருந்து கலந்து செய்த அப்பம்! என்றான்


ராஜா அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். அவன் கேட்டவாறு அப்பத்தைத் தயாரித்துக் கொடுத்தார்கள். வில்ஃப்ரெட் நேராக பாங்கோவிடம் வந்து சொன்னான், ராஜா எனக்கு இந்த அப்பம் மட்டும் தான் கொடுத்தார். இதில் பாதியை நான் எடுத்துக்கொள்கிறேன்!

வில்ஃப்ரெட் அப்பத்தின் நல்ல பகுதியைப் பிரித்துத் தின்றான். மிச்சத்தை பாங்கோவிடம் கொடுத்தான். சினம் கொண்ட பாங்கோ, வில்ஃப்ரெட்டை சோதனையிட்டான். அவன் எதையும் ஒளித்துவைத்து இருக்கவில்லை என்பது உறுதிப்பட்டது. ஏமாற்றம் அடைந்த பாங்கோ ஏற்கெனவே பசியில் இருந்ததால், பாதி அப்பத்தை இதுவாவது கிடைத்ததே என்று நினைத்தபடி தின்று முடித்தான். தலை சுற்றியது உடனடியாக மயங்கிக் கீழே விழுந்தான். வில்ஃப்ரெட் காத்திருந்தது இதற்குத்தானே.


பாங்கோவைத் தூக்கிக்கொண்டு விரைவாக அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். நடந்ததை எல்லாம் ராஜாவிடம் தெரிவித்தான். படை வீரர்கள் பாங்கோவைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். அறிவாளியான வில்ஃப்ரெட்டுக்கு ராஜா, மதிப்பு உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பிவைத்தார்.

(முற்றும்)


# நமது உடம்பு ஓர் அதிசயம்



நாம் பிறக்கும்போது நமது உடலில் 270 எலும்புகள் அமைந்திருக்கின்றன. ஆனால் வளர்ச்சி அடைந்தவுடன் அவற்றில் 64 எலும்புகள் காணாமல் போய்விடுகின்றன. மனிதன் முதுமைப் பருவமடைந்து இறக்கும் போது 206 எலும்புகளே எஞ்சியிருக்கின்றன. குறிப்பிட்ட எலும்புகள் எப்படிக் காணாமல் போகின்றன? அவை மற்ற எலும்புகளுடன் இணைந்து விடுகின்றன. நமது உடம்பில் தேவைக்கேற்ப மின்சாரமும் உள்ளது. இந்த மின்சாரத்தைக் கொண்டு 25 வாட்ஸ் மின்சார விளக்கை எரியவிடலாம். ஒரு சராசரி மனிதன் தன் வாழ்நாளில் 52 டன் எடையுள்ள உணவை உண்கிறான். 19 ஆயிரம் காலன் திரவங்களை அருந்துகிறான்.




# உலகத்தில் மிக உயரமாக பறக்கக் கூடிய பறவை




உலகத்தில் மிக உயரமாக பறக்க கூடிய பறவை பார் ஹீதேத் கூசே ஆகும் . இது ஆச்சரியப்படதக்க உயரமான 10,175 ட் (33,382 feet) பறக்க வல்லது. இதனால் வருடத்துக்கு 3-8 முட்டைகளை இடும் இந்த பறவையால் உலகின் மிக உயரமான மலையான எவரெஸ்யை இலகுவாக (8,848 மீற்றர் 29,028 feet) கடக்க முடியும். இதனால் ஒக்சிசன் மிக குறைந்த இடத்தில் சுவாசிக்கவும் அதனுடைய உடல் வெப்பநிலையை இழக்காமல் கட்டுபடுத்தவும் முடியும். இது ஒரு நாளைக்கு 1,000 மைல் தூரத்தை ஜெற் வேகத்தில் பறக்க முடியும் இதனுடைய நீளம் 71 - 76 செ.மீற்றர் (28-30 in). நிறை 1.87-3.2 கிலோகிராம் ஆகும்

# விண்வெளியில் நடந்த முதல் மனிதன்



அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ் சோவியத் ரஷ்யாவின் இளைப்பாறிய விண்வெளி வீரரும் சோவியத் வான்படையின் ஜெனரலும் ஆவார். இவர் மார்ச் 18 1965 இல் விண்வெளியில் நடந்த முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றார்.

# தண்டவாளங்கள்



ரயில் தண்டவாளங்கள் மற்றும் பாலங்களில் சிறிய இடைவெளி இருப்பது ஏன்? வெப்பத்தால் பொருள்கள் விரிவடையும் என்பது விதி. ரயில் தண்டவாளங்களில் இரும்பு வெப்பத்தால் சூடேறும் போது இரும்பின் மூலக் கூறுகள் விரிவடைகின்றன.


இந்த விரிவை விடப்பட்ட இடைவெளி சரி செய்து கொள்கிறது. இல்லையெனில் தண்டவாளம் உடையவோ பிறழவோ செய்யும். இதே போல்தான் சிமெண்ட்டால் கட்டப்பட்ட பாலங்களிலும் சிறு இடைவெளி விட்டு கட்டப்படுகிறது. இது அழுத்தத்தையும் சரி செய்துகொள்கிறது. தொழில் சார்ந்த இயந்திரங்களில் பயன்படும் போரிங் போன்றவைகளும் இதே தத்துவத்தால்தான் தயாரிக்கப்படுகின்றன. தர்மாமீற்றரும் இந்த வெப்பத்தால் உருப்பெருக்கம் என்ற தத்துவத்தில் தான் செயல்படுகிறது!



# ஒட்டகச்சிவிங்கி



காட்டில் திரியும் ஒட்டகச்சிவிங்கி ஆபிரிக்காவில் மட்டுமே உண்டு. புகழ்பெற்ற ரோம அரசரான ஜூலியஸ் சீசர்தான் ஒட்டகச்சிவிங்கியை முதன் முதலாக ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தார். ரோம் நகர சர்க்கஸுக்காக இது கொண்டு வரப்பட்டது. பின்னால் வந்த ரோமானியப் பேரரசர்களும் அவ்வப்போது ஒட்டகச்சிவிங்கியை வெளிநாடுகளில் இருந்து தருவித்தார்கள். ஆனால் கி.பி. 5-ம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு வீழ்ந்த பின் அங்கு ஓர் ஒட்டகச்சிவிங்கி கூடப் போகவில்லை. 1827 இல் எகிப்திய அரசரிடம் இருந்து இங்கிலாந்து நாட்டுக்கும், பிரான்சுக்கும் பரிசுப் பொருளாக இரு ஒட்டகச்சிவிங்கிகள் சென்றன. அப்போதிருந்தே ஆபிரிக்க ஒட்டகச் சிவிங்கிகள் உலகெங்கும் உள்ள மிருகக் காட்சி சாலைகளுக்கு வர ஆரம்பித்து விட்டன.



# ரின் உணவுகள் உருவான விதம்




1796 இல் மாவீரன் நெப்போலியன் பிரான்ஸின் எல்லைகளை விஸ்தரிக்க, 3 லட்சத்து 50 ஆயிரம் வீரர்களை இத்தாலிக்கு அனுப்பினார். வீரர்களுக்கு எதிரிகளுடன் மட்டுமல்ல, பசி உடனும் சண்டை போட வேண்டியிருந்தது. அதனால், பிரான்ஸ் திரும்பியதும், பயணத்தின் போது உணவை கெட்டுப் போகாமல் வைத்திருக்கும் வழிமுறையைக் கண்டு பிடிப்பவர்களுக்கு பெரிய பரிசு வழங்குவதாக அறிவித்தார் நெப்போலியன்.

இந்த வெற்றிக் கோப்பையைப் பறித்தவர் நிக்கோலஸ் அப்பெர்ட் என்ற மளிகைக்கடைக்காரர். நெப்போலியனின் அறிவிப்புக்கு முன்னரே இதை பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவர் இவர். காற்று படாமல் இருக்கும் உணவுகள் அதிக காலம் கெட்டுப்போகாமல் இருக்கிறது என்று கண்டுபிடித்தார். காற்று எளிதில் புக முடியாத கண்ணாடிப் பாத்திரங்களை வடிவமைத்து பரிசோதனை செய்தார்.

மாதக் கணக்கில் உணவு கெட்டுப் போகாமல் இருந்தது. ஆனால், அப்பெர்டினின் கண்ணாடி பாத்திரங்கள் கனமானதாகவும், விலை உயர்ந்ததாகவும் இருந்தது. தவறி விழுந்தாலும் உடைந்து போகும். ப்ரையன் டான்கின் என்ற ஆங்கிலேயரிடம் இந்த பிரச்சினையை தீர்க்கும் வழி இருந்தது. கண்ணாடிப் பாத்திரங்களுக்கு பதில் ப்ரையன் ரின்னைப் பயன்படுத்த ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்தித்தாளின் தோற்றமும் பத்திரிகைச் சுதந்திரமும்






**பத்திரிகைகள் ஆரம்பத்தில் இலக்கியம், மதம், சமூக சீர்திருத்தம், பொதுஅறிவு ஆகிய விடயங்களை மட்டுமே பிரசுரித்து வந்தன. பாரதத்தில் உண்டான சுதந்திரப் போராட்டத்துக்குப் பின்னரே அரசியல் செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.**

ரஷ்யாவில் முக்கியமான பத்திரிகைகள் ''ஈஸ்ட் வெஸ்ரியர்'' ''பிராவ்டா'' என்பனவாகும். இந்தியாவிலே ஔரங்கசீப் காலத்திலேயே பத்திரிகை அச்சிடும் முறை தொடக்கப்பட்டது.

சென்னையில் முதன் முதல் வெளிவந்த பத்திரிகை 'சென்னை கூரியர்' என்பதாகும். அதேவேளை தமிழ் நாட்டில் முதலாவதாக பிரசுரிக்கப்பட்ட ஆங்கிலப் பத்திரிகை 'த ஹின்டு (Thchindu)ஆகும் இதனை ஜி.சுப்பிரமணிய ஐயர் என்பவரே தோற்றுவித்தார். இந்த நாளிதழ் மெல்லிய ரிஸ்யு (Tissue) ரக கடதாசியிலே அச்சிடப்பட்டது. சுதேச மித்திரன் முதன் முதல் தமிழில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை என்ற இடத்தைத் தட்டிக் கொண்டது. சுப்பிரமணிய ஐயராலேயே இதுவும் வெளியிடப்பட்டதாகும். ஆரம்பத் தில் இந்திய பத்திரிகைகள் அரசியல் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில்லை. இலக்கியம், மதம், சமூக சீர்திருத்தம், பொதுஅறிவு ஆகிய விடயங்களை மட்டுமே பிரசுரித்து வந்தன. பாரதத்தில் உண்டான சுதந்திரப் போராட்டத்துக்குப் பின்னரே அரசியல் செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இலங்கையில் மும்மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கி சுமார் நூறு ஆண்டு காலமாகின்றன. நிருபர்களின் (REPORTERS) செய்தி தவிர்ந்த ஏனைய வெளிநாட்டுச் செய்திகள் செய்தி நிறுவனங்களிடமிருந்தே பெறப்படுகின்றன. 'பி.ரி.ஐ' P.T.I யு.என்.ஐ (U.N.I) என்பவற்றுடன் நம் நாட்டின் லங்கா புவத், என்பவை செய்திகள் வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

செய்திகளின் முக்கியத்துவம் கருதி அவை செய்தித் தாளின் முன்பக்கத்திலோ கடைசிப் பகுதியிலோ பிரசுரிக்கப்படுவதை செய்தி ஆசிரியர் (NEWS EDITOR)கவனித்துக் கொள்வார்.

அதேவேளை தற்சமயம் அதிகமானோர் கைகளிலே தவழுகின்ற 'உதயன்' நாளிதழ் தமிழ் மக்கள் அதிக அளவில் வாழுகின்ற வட மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரமாகின்றது.

'உதயன்' தோற்றத்தில் சிறிதென்றாலும் அன்றாடம் நிகழுகின்ற புதினங்களை சுடச்சுட வாசகர்களுக்கு அளிப்பதில் வல்லமை பொருந்தியது.

புலம் பெயர்ந்தோரின் நன்மை கருதி கனடாவிலும் சம காலத்தில் உதயன் நாளேடு பிரசுரமாகி எமது சொந்தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது சிறப்பு அம்சமெனக் கொள்ளலாம். உதயன் வாரவசந்தத்தில் வெளியாகின்ற சிறுவர் சுடர், வார வசந்தக் கருத்து, புத்தகசாலை, நீத்தார் நயப்புரை என்பன இந்தப் பத்திரிகையை மேலும் மெருகூட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே செய்தித்தாளின் தோற்றத்தையும் சுதந்திரத்தின் அவசியத்தையும் நாம் தெரிந்து கொள்வது உத்தமம் ஆகும்.

# மீன்பாடும் தேன் நாட்டின்

## பண்பாட்டு அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு!

■ அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.



எந்த ஆண்டிலென்றாலும் சரி மட்டக்களப்பில் விளைவிக்கப்படும் நெல் எப்பொழுதுமே தன்னிறைவை மேவிய நிலையிலே காணப்படுகின்றது. கடந்த கால அசாதாரண சூழ்நிலை, அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் விதிவிலக்காகக் கொள்ளப்பட வேண்டும்.

மட்டக்களப்பு வாவியில் மட்டி, கல்லாட்டி, இறால், நண்டு, மீன் என்பன சஞ்சரிக்கின்றன. கடலிலும், குளங்களிலும் பெரும் தொகையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மேலதிகமாகப் பிடிக்கப்படுகின்ற கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தும் பதப்படுத்தப்பட்ட நிலையில் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இந்தச் செயற்பாட்டுக்காக ஆங்காங்கே மீன் வாடிகள் காணப்படுகின்ற அதேவேளை மீன்களைத் தாமதமில்லாது கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கென்று பார ஊர்திகளும் தயார்நிலையில் உள்ளன.

காடுகளில் உலாவித்திரியும் மிருகங்களான மான், மரை, பன்றி போன்ற விலங்குகளின் இறைச்சியையும் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ள முடிகின்றது. சேனைப்பயிர் செய்வோர் அவ்வப்போது காட்டுக்கோழிகளை வேட்டையாடி உண்பதும் உண்டு.

மட்டக்களப்பில் பழங்களுக்கு குறைவு இல்லை. மா,பலா,தோடை,எலுமிச்சை என்பவற்றுடன் காட்டுக்கனிகளாகிய விளாம் பழம், சூரைப்பழம், ஈச்சம்பழம், நாவல் பழம், பாலைப்பழம் என்பன பருவத்துக்கு ஏற்ப நிறையவே கிடைக்கின்றன.

சிலர் பட்டி பட்டியாக ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகளை வீட்டிலும் வயல் வெளிகளிலும் பட்டிகள் அமைத்து பாதுகாப்பான முறையில் வளர்க்கின்றனர். இதன் காரணமாக பால், தயிர், நெய் என்பனவற்றை எந்நேரமும் எளிதில் பெறக்கூடியதாகவுமுள்ளது. பாதுகாப்பு கெடுபிடிகள் நிறைந்துள்ள இந்தக் காலகட்டத்திலும் கூட காட்டுத் தேன் மட்டக்களப்ப எங்கும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளமையும் தேன் பாவனையாளர் மத்தியில் மகிழ்ச்சிதரக் கூடிய விடயமெனலாம். தென்னை மற்றும் பனை மரத்திலிருந்து பெறப்படும் கள்ளு, சாராயம் போன்றவை மதுப்பிரியர் அருந்தி தமது தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியில் சஞ்சரிக்கின்ற விநோத மீன் ஒன்று நிலவு பொழிகின்ற கோடைகாலத்து இரவுகளில் வீணையின் நாதத்தையொத்த குரலில் பாடுவதை அனேகமானோர் கேட்டு மகிழ்கின்றனர். பாடல் எழுகின்ற வேளை மட்டுநகர் வாசிகள் ஊரிகானம் இசைக்கிறது என்பார்கள். ஊரி என்பது நத்தை இனத்தைச் சேர்ந்த நீர் வாழ் சிறு உயிரினமாகும். இவை அதிகமாக கடலேரியில் தான் தென்படுகின்றனவாம். இவற்றை மக்கள் பாடுமீன்! என்கின்றனர். எனினும் மட்டக்க ளப்பு நாட்டார் தமது நாடு 'மீன் பாடும் தேனாடு' என்று பெருமை கொள்கின்றனர்.


மட்டக்களப்பு மக்களை இயற்கை அனர்த்தங்கள் அவ்வப்போது உண்டாகி பெரும் சேதத்தை விளைவிக்கின்றன என்பது நிதர்சனமாகும். மட்டக்களப்பு பிரதேசம் வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்றினால் மழையைப் பெறுகின்றது. புரட்டாதி (SEPTEMBER) மாதம் முதல் தைத்(JANUARY) திங்கள் வரை இங்கு மாரி காலம் (WINTER) ஆகும். இக் காலத்தில் வங்கக்குடாக் கடலில் தாழமுக்கம் (DEPRESSION) ஏற்படுவது சகஜம். இதனால் அழவுக்கதிகமான மழை பொழிந்து பெரு வெள்ளம் உருவாகின்றது. துரதிர்ஷ்டவசமாக தாழமுக்கம் சில வேளைகளில் சூறாவளி(CYCLONE) யாக மாறி மணிக்கு நூற்று இருபது முதல் நூற்று முப்பது கிலோ மீற்றர் வேகத்தில் நாட்டுக்குள் வீசுவதுமுண்டு.

தற்பொழுது மட்டக்களப்பு நாட்டார் பாடல்களில் அறிந்திருக்ககூடிய சூறாவளி 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வீசியது. மணிக்கு நூற்று எழுபத்தைந்து கிலோமீற்றர் வேகத்தில் வீசிய இந்தக் கொடூர சூறாவளியினால் 915 பேர் வரை பலியானார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸும் வாழ்வும்



பஸ் எப்பொழுதும் படபடத்து
ஓடுகிறது ஆனால் படபடப்பு
இல்லாமல் பஸ் ஓடுவது போலும்
இடைக்கிடை படபடப்புடன்
பஸ் ஓடுவது போலும்
மனதில் ஏற்படுகிற போது
பஸ்ஸுக்கும் எமது வாழ்வுக்கும்
நிறைய வித்தியாசம் இருப்பது
தெரியவில்லை பஸ் ஓடுகிற தெரு
புனரமைக்காமல் இருப்பதால் தான்
பஸ் பயணம் கடுமையாக இருக்கிறது
பஸ்ஸில் நிறையப் பேர்
எமக்குத் தெரியாதவர்களும்
ஏறுவதால் தான் எமது
பயணத்தைத் தொடர முடிகிறது
இந்த இடைவெளிக்குள்
எத்தனை பேர் ஏறிக்கொள்கிறோம்
எத்தனை பேர் இறங்கிக் கொள்கிறோம்
எத்தனை பேர் இடையில்
ஏறிக்கொள்கிறோம்
எத்தனை பேர் இடையில்
இறங்கிக்கொள்கிறோம்
என்பது தெரியாமல் இருப்பது போல்
எமது வாழ்வும் இருக்கிறது.
நிறையப் பேரினை ஏற்றிக்கொண்டு
ஆரம்பித்த இடத்தில் இருந்து
கடைசி இடம் வரை செல்லும்
பஸ் போல சுமையுடன் வாழ்கிறோம்.
முதல் பஸ்ஸில் ஏறிவிட
வேண்டுமென்று
ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில்
ஓடிப்போய் ஏறிச் செல்வதும்
முன்னரே வந்து பஸ்ஸை
பார்த்து நின்று பஸ் வந்தும்
சன நெரிசலில்
அடுத்த பஸ்ஸில் ஏறுவோம் என்று
காத்திருப்பவர்களுடன்
ஆறுதலாக கதைத்துக் கொண்டு
அடுத்த பஸ்ஸில் ஏறிச் செல்வதற்கும்
இடையில் எந்த வித மாற்றமும்
இல்லாதது போல்
ஒவ்வொருவருக்குள்ளும்
நிகழும் நிகழ்வுகளும்
எந்த வித மாற்றமும் இல்லாமல்
இருப்பது எவருக்கும் தெரியவில்லை
பஸ்ஸில் உள் இருக்கைகள்
இருந்தும் வெளியே தொங்கிக் கொண்டு
செல்பவர்களும் யன்னல் ஓரமாக
இடம்பிடித்து இருந்து
வெளியே பார்த்துக் கொண்டு
ரசிப்பவர்களும் இருக்கைகள் இருந்தும்
உள்ளே நின்று கொண்டு
பயணிப்பவர்களும் இருக்கைகள் இருந்தும்
எதிர் எதிர் இருக்கையில் நெருங்கி
இருந்து கொண்டு சத்தம் போட்டு
அரட்டை அடித்து சிரிப்பதுமான
பலரின் செயற்பாடுகளில்
சுவாரசியமாக பஸ் பயணம்
அமைவது போல
ஒவ்வொருவரின் வாழ்வும்
வித்தியாசமாக இருக்கிற
போது தான் வாழத்தூண்டுகிறது
பஸ்ஸின் உள் புகைப்பிடித்தல்
ஆகாது என விளம்பரப் படங்கள்
இருந்தும் புகைப்பிடித்துக் கொண்டு
வாசலில் நிற்கக் கூடாது என்று சொல்லியும்
வாசலில் நின்று கொண்டு
பஸ் நின்ற பின் இறங்க வேண்டும்
பஸ் புறப்பட முன் ஏற வேண்டும்
என்று தெரிந்திருந்தும்
பஸ் நிற்க முதல் இறங்கியும்
ஓடிக்கொண்டு இருக்கும் போது ஏறியும்
நிகழ்கின்ற சூழலில்
கண்டும் காணாமல் இருப்பது போல
சிலவற்றை எமது வாழ்விலும்
நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது
இரவு வேளையில் பஸ் பயணம்
மின் கம்பங்கள் ஓடுவது
தெரிவது போலும்
ஒவ்வொரு பஸ் நிலையம் நெருங்கும் போது
வெளிச்சம் தந்து விடைபெறும்
பூரிப்பு போலும் நிகழ்கின்ற மனசுக்கு தான்
எத்தனை பார்வை இருக்கிறது
ஒவ்வொரு தரிப்பு நிலையத்திலும்
வந்து நிற்கும் பஸ் புறப்பட ஆரம்பிக்கும்
ஒரு சில நிமிடங்களுக்குள்
அழுக்கான சட்டையும்
கிழிந்த காற்சட்டையும் அணிந்து கொண்டு
பஸ்ஸில் ஏறி இறங்கிடும்
பழங்கள், கச்சான், சுண்டல்
விற்கும் பையனும் பஸ்ஸில் ஏறி இறங்கி
பயணச் சீட்டினை பரிசோதனை செய்யும்
பரிசோதகரும் எதிர்பார்ப்பது
வாழ்வினைத் தான் என்பது
மற்றவர் பார்வைக்கு தெரியாமல்
இருந்ததால் தான்
இரண்டுக்குமே வித்தியாசம் பார்க்கிறார்கள்
சில வேளைகளில் கூட்டம் அதிகமாகவும்
சில வேளைகளில் வெறுமையாகவும்
பஸ் பயணிப்பது போல
எமது மனசு பாரமாகவும்
ஒன்றுமேயில்லாதது போலவும்
இடைக்கிட ஏற்படுகிறது
பஸ்ஸில் கூட்டம் அதிகமாக
இருக்கும் போது இருக்கை தேடுவதும்
இருப்பதற்கு இருக்கை இருந்தும்
எழுந்து நிற்பதுவும் பஸ்ஸில் ஏறியவுடன்
நெரிசலில் முண்டியடித்துக் கொண்டு
முன்னே நிற்பவரையும் பாராமல்
இடித்துத் தள்ளிக் கொண்டு
இருக்கை தேடி ஓடுபவரும்
நீண்ட தூரம் செல்லும் போதும்
வாசலில் நின்று கொண்டு
உள்ளேயும் போகாமல்
முண்டியடித்து ஏறுபவர்களுக்கு
எதிரே நின்று இடியை வாங்கியும்
ஒருவாறு அவர்களுக்கு
வழி விடாமல் தானும் நகராமல்
அந்த இடத்தில் நிற்பவரையும்
பார்க்கக் கூடியதாக
பஸ் பயணம் போல எமது வாழ்வும் ஆகிறது

■ செல்வா

# பற்று



பாஷோ செருப்புக்கடை ஒன்றிற்குச் சென்றிருந்தார்.

அங்கே இரண்டு இளைஞர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் வாடிக்கையாளர்களிடம் மிக அன்போடு நடந்து கொண்டிருந்தான்

ஒருவன் வாடிக்கையாளர்களிடம் அலட்சியமாக நடந்து கொண்டான்.

பாஷோ கடை முதலாளியிடம் விசாரித்தார். ''இருவரும் எப்படி வேலை செய்கிறார்கள்?..''

''இருவரும் ஒரே அளவு படித்தவர்கள். இருவருக்கும் ஒரே அளவு சம்பளம். ஆனாலும் ஒருவன் ஒழுங்காக இருக்கிறான். ஒருவன் ஒழுங்காக இல்லை. எனது வாடிக்கையாளர்களைக் குறைத்து விடுவானோ என்கிற பயத்தில் அவனுக்கு ஏதாவது தீங்கு செய்யலாம் என மனம் யோசிக்கிறது. வேறு வேலையிலிருந்து துரத்தி விடுவேன்... இந்தக் கடை எனக்குச் சோறு போடுகிற இடமாயிற்றே...''

பாஷோ அறைக்கு வந்து தனது கரும்பலகையில் எழுதினார்.

**★சந்தோஷமாக இருப்பது வேலையைப் பொறுத்து அல்ல. அந்த வேலையை எடுத்துக் கொள்ளும் விதத்தில்**

**★பிடிக்காத வேலையைச் செய்யும் போது தேவையில்லாத எதிரிகளை உருவாக்கிக் கொள்கிறீர்கள்.**

**★[illegible] கும் [illegible] யுங்கள்.**

# ஹைகூ

## எனும் ஜப்பானிய அம்மானை

தமிழில் புதுக்கவிதை அலையைத் தொடர்ந்து ஜப்பானிய 'ஹைகூ' என்ற குறும் பா வடிவம் மிகவும் பிரபலமானது. எளிமையான மூன்றடி வசீகரம், சின்னச் சின்ன மின்தாக்குகள், சொற்செட்டு, படிம அழகு, ஆழமான உணர்ச்சிக் கொப்பளிப்புடன் பிரபஞ்சத்தின் முழுப்பரிமாணத்தையும் தன்னகத்தே பிரதிபலிக்கும் இந்த மின்மினிக் கவிதைகள்- ஜப்பானியர் தம் 'வாமன' உயரத்தைப் போல, அதே சமயத்தில் அவர் தம் தொழில்நுட்ப மின்னணுத்துறை விசுவரூபம் போல மண்ணையும், விண்ணையும் அளக்கும் அதீத ஆற்றல் கொண்டவை.

### 'ஹைகூ' உதயம்

'ஜென்' எனும் சொல்லுக்கு ஜப்பானிய மொழியில் தியானம் என்பது பொருள். ஜப்பானியக் கலாசாரத்தில் ஜென் புத்தமதத்தினால் நிகழ்ந்த மாற்றங்கள், நாகரிக முன்னேற்றங்கள் இன்றளவும் நிலைபெற்றுத் திகழ்கின்றன. அவ்வாறே ஓவியக்கலை, நோஹு நடனம், தேநீர் விருந்து உபசாரம், பூ நிரைப்படுத்தல் போன்ற அரிய கலைகளும், சீனத்தின் அந்த நாளைய உயர் பண்பாடுகளும் ஜப்பானில் நறுமணக்காற்றாய் வியாபித்தன. கவிதையிலும் உதித்தது ஹைகூ.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் - தமிழ் இலக்கிய வரலாற்றில் - கி.பி 1,200 முதல் 1,600 வரைக்குட்பட்ட நாயக்கர் ஆட்சிக் காலத்தில் மலர்ந்த சிற்றிலக்கிய வகைகள் - பிள்ளைத் தமிழ் தொடங்கிப் புராணம் ஈறாக தொண்ணூற்றாறு பிரபந்தங்கள். அவற்றில் அழகொளிரும் புயம், தவம், வண்டு, ஊசல், மறம் போன்ற பதினெட்டு அம்சங்களுள் ஒன்று அம்மானை. இந்த அம்மானைக்கும் ஹைகூவுக்கும் காலவரலாற்றில் மட்டுமின்றி யாப்பு அமைப்பிலும் இலக்கிய வளர்ச்சியிலும் வியப்பூட்டும் உள்ளமைதி இழையோடுகிறது.

களற்சிக்காய் விளையாடும் பெண்டிர் இருவரில் ஒருத்திதொடுத்த இரண்டு வரிகளுக்குப் பதிலடியாக அடுத்தவள் இரண்டடிபாட, முதலாமவள் அதற்கு மறுமொழி கூறி முடித்துவைப்பது அம்மானை.

*'இருவருக்கும் காண்பரிய*
*ஈசர் மதுரேசனார்*
*விருதுகட்டி அங்கம் வெட்டி*
*வென்றனர் காண் அம்மானை.'*

■ புத்தகவாசி

*'விருது கட்டி அங்கம் வெட்டி*
*வென்றனரே ஆமாகில்*
*அருமையுடல் பொன்றிருகூ(று)*
*ஆவதேன அம்மானை?'*

*'ஆனாலும் காயமிலை*
*ஐயரவர்க்(கு) அம்மானை.'*

என்பது மதுரைக் கலம்பகத்தில் ஓர் அம்மானைப் பாடல்.

புதிர்போட்டு விடையவிழ்க்கும் ஒருவித இலக்கிய விடு கதை -ஜப்பானில் ரெங்கா (Renka) எனப்படும். அம்மானை மாதிரி இதுவும் ஒரு போட்டிக் கவிதை விளையாட்டு ஐந்து வரிகள் முதல் மூன்று வரிகளில் ஒருவர் கவிதொடுக்க, அடுத்தவர் இரண்டு வரிகளில் எதிர்ப்பாட்டுக் கட்டுவது இந்த 'ரெங்கா' வின் சிறப்பம்சம். இந்தப் பொழுதுபோக்குப் பாடல்கள் மூன்று வரிகளோடு முற்றுப் பெற்றதுடன் ஜென் புத்தமதக் கொள்கை வெளியீட்டிற்குரிய புது உத்தியுமாயிற்று. அதுவே 'ஹோக்கு'(hokku) அல்லது இன்றைய ஹைகூ (haikku).

ஹைகூ என்பது நாம் நினைப்பது மாதிரி கட்டற்ற கவிதை அல்லது புதுக் கவிதை அல்ல. ஜப்பானில் அது மரபுக் கவிதை. மூன்றடிகளில் முறையே, ஐந்து ஏழு, ஐந்து எனவரும் சீர்கள் கொண்டது. முதலிரண்டு அடிகளின் முத்தாய்ப்பாக மூன்றாவது அடி பளிச்சென்று தெறிக்கும். நெஞ்சில் தைக்கும்!

அதன் முதலடியானது, சாட்டையைக் கையில் எடுக்கும் அமைதியுடனும், இரண்டாம் அடி அதை ஓங்கும் நிதானத்துடனும், மூன்றாவது அடி சுழற்றி வீசிய அடிக் கனத்துடனும் தெறிப்பாக அமைய வேண்டும். வெறுமனே வார்த்தைகளை மூன்று அடிகளில் பிரித்துப் போட்டால் மட்டும் ஹைகூ ஆவதில்லை. படித்து முடித்ததும் மனதில் உறைக்க வேண்டும்.

*'வேந்தனுக்கும்*
*தலைவணங்காது - விறைப்பான*
*காவல் பொம்மை.'*

தான்சூயி (Dansui)என்பவரின் ஹைகூ இது. இந்த நவீன கவிதை வடிவம் நாளடைவில் அழகியல், மன முறிவு, ஏக்கம், ஏமாற்றம், ஆதர்சம், நகைச்சுவை போன்ற பலவித உணர்வுப் பிரவாகங்களைச் சுமக்கும் இலக்கிய வாகனமானது.

பீட்டர் பெயிலன்சன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள Japanese Haiku எனும் நூலில் (Publication : Peter Pauper Press, Mount Vernon, New York, 1955_56) தரப்பட்டுள்ள 120 ஹைகூக்கள் சிலவற்றின் தமிழாக்கம் இதோ (இவற்றை எழுதிய கவிஞர்களின் பெயர்கள் அடைப்புக் குறிகளுள் தரப்பட்டுள்ளன.)

*'உதிர்ந்து வீழ்ந்த மலர்*
*கிளைக்குத் திரும்புகிறதா.....?*
*அட, வெள்ளைப் பட்டாம்பூச்சி.''*
*(மோரிடாகி)*

*'அழகிய திருவோடு*
*அதில் பூக்களை அடுக்கலாம்...*
*அரிசிதான் இல்லையே.*
*(பாஷோ)*

*'அத்தனையும் விழுங்கினேன்'*
*ஆ, வயிற்று வலி....*
*திருடப்பட்ட ஆப்பிள்கள்.'*
*(ஷிகி)*

தமிழில் இரண்டடிச் செய்யுள்களைக் குறள் என்றும் மூன்றடிப் பாடல்களைச் சிந்தடி என்றும் வழங்குகிறோம். இவ்வாறே கழிநெடிலடி வரை தமிழ் இலக்கண வரம்புகள் காட்டுகின்றன. தத்துவ வெளிப்பாட்டுக்குரிய அந்நிய ஊடகமாகத் தோன்றித் தமிழில் நுழைந்த 'ஹைகூ' வடிவத்தால் யாப்பால், உள்பொருளால், இலக்கிய வரலாற்றால் படிம அழகால் - தனித்தனியே உற்று நோக்கிட நமக்குப் புதுமை [illegible] எனினும் இப்பண்புகள் ஒருங்கிணைந்த 'ஹைகூ' தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கென்றோர் தனியிடம் பெற்றுவிட்டது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## சிவதொண்டன்




'எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்' என்ற மகுட வாக்கியம் தாங்கி, சிவத்தமிழ்ச் சேவையாளர்களின் தொண்டனாக சிவ தொண்டன் என்னும் சஞ்சிகையின் பவள விழா மலர் வெளிவந்துள்ளது. சைவநெறி தழைத் தோங்க ஆண்டுகள் பலவாக அடியவர் தமக் கும் அன்பர்களுக்கும் தொண்டாற்றத் துணை நிற்கும் சிவதொண்டன் சஞ்சிகையின் பவள விழா மலர் சைவப் பெரியார்களினதும், சைவத் தின் வளர்ச்சிக்குப் பணி தொடரும் தொண்டர் களினதும் பயன்தரும் கட்டுரைகளையும், சிந்தனைக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

பண்டிதர் கே.கே.நடராசனுக்குச் சுவாமிகள் பணித்தற்கமைவாகச் சிவதொண்டன் தனது பணியைத் தொடர்ந்தது. பவ ஆண்டு மார்கழித் திங்கள். அதாவது ஜனவரி மாதம் 1935 ஆம் வருடம் முதலாவது சிவதொண்டன் வெளி வந்தது. 2011 செப்ரெம்பர் - டிசெம்பர் மாதம் பவள விழாச் சிறப்பு மலராக வெளிவந்துள்ளது.

தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் கட்டுரைகளைத் தாங்கி 250 பக்கங்களோடு மிகப் பெரிய அளவு கொண்டு வெளிவந்துள்ள மலரின் முகப்பு அட்டை சந்தனம் செறிந்த நிறத்தில் நால்வர் குரவர்களின் சிற்ப அலங் காரங்களுடன் ஒளிர்கின்றது.

பவளவிழா வாழ்த்தும் பாவொன்றினைத் திமிலைத் துமிலன் எனக் கவியுலகம் போற்றும் இலக்கிய கலாநிதி த.கிருஷ்ணபிள்ளை அவர் கள் இயற்றியது முதற் பக்கங்களில் அச்சாகி யுள்ளது.

மலரின் நிறைவுக்கு நல்லனவும் வல்லனவு மான சைவ அறிஞர்களின் ஆக்கங்கள் மெரு கூட்டுகின்றன. இறுதி அட்டையில் 2012 வருட சிவ தொண்டன் நாட்காட்டி இடம்பெற் றுள்ளது. மலர் தரும் நற்சிந்தனைகள், பலரை யும் சிவதொண்டன் பால் ஈர்க்கின்றன.

பவள விழா மலரின் பொலிவை, முகர்ந் தறியும் வாசகர்களுக்கு அது இனிய தேனமுத மாகும்.

## விகடகவியின் கவிதைகள்




சமூக நீதியின் குரலாக ஒலிக்கும் நகைச் சுவைக் கவிதைகளைத் தாங்கிய ' விகடகவியின் கவிதைகள்' என்னும் அரியதோர் கவிதைநூல் வெளிவந்துள்ளது. சிந்திக்கவும் சிரிக்கவும் தூண் டும் கவிதைப் படைப்புக்கு நீதியின் காவலன் மு.திருநாவுக்கரசு அவர்களின் கவித்துவம் சந்தம் குலையாச் செந்தமிழ் தந்து சிறப்பூட்டியுள்ளது.

'விகடகவி' என்ற நாமத்துக்கு மிக மிகப் பொருத்தமான சிந்திக்கச் சிரிப்பூட்டும் கவிதை களை 'உதயன்' பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி மக்களை வாசகர்களைக் களிப்பூட்டியவர். கவிதை வழி நல்வழி காட்டியவர். இன்று ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி என்ற நிலையில் அவற் றைத் தொகுத்து நூலாக்கியுள்ளார்.

அகடம் விகடம் அனைத்தினதும் மகுடமா கத் திகழும் நகைச்சுவைக் கவிஞர், இனிக்கத் தமிழ் செய்து சிரிக்கச் செய்யும் வகை அவரு டைய உயர்வான இந்தக் கவிதைகளுக்கே உள்ளதென்பதை உணர முடிகிறது. சிரிப்பை மகிழ்வின்போதும் மாத்திரமல்ல அனைத்து நவரச நிலைகளிலும் மருந்தாகும் வகையில் எவரையும் புண்படுத்தாத சந்தக் கவிதைக ளாகத் தந்துள்ளார். 218 நிறைவான சுவையான பக்கங்கள் கவிஞரின் கவிதைகளால் நிரம்பும் வேளையில் அவர் சமூகத்தின் துயரங்களை நீக்கும் நீதிக் கருத்துக்களாலும் அதை நிறைத் துள்ளார். அரிய பல கவிதைகள் ஆக்கியோனின் ஆளுமையை வெளிக்காட்டி நூலுருவம் பெற் றுள்ளது.

தமிழ் இலக்கிய உலகு நல்லதொரு விகட கவிஞரைப் பெற்றுப் பெருமை கொள்கிறது. ''விகடகவியின் கவிதைகள்' விருப்புடன் வாசித்துச் சிந்தித்துச் செயலாற்ற ஒவ்வொரு வரின் வீட்டு நூலகத்திலும் சேமிக்கப்படக் கூடிய தாகும். காலத்தைக் காட்டும் இலக்கியமானாலும் காலத்தை வெல்லும் கவிவரிகள் என்றும் நிலைத்து வாழும் நூலாகியுள்ளமை சிறப்பாகும்.

## சிறுவர் பொது அறிவு




பல திசைகளிலிருந்தும் பரீட்சைக்கான வழி காட்டிகள் பலவும் வெளிவந்து கொண்டிருக் கின்றன. தரம் 4 தொடக்கம் 7 வரையான பாடத் திட்டத்திற்கு அமைவாக வேதநாயகம் தபேந்தி ரன் அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சை வழி காட்டியாக சிறுவர் பொது அறிவு எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

அழகிய அட்டையுடன் கூடிய இந்நூலில் 23 தலைப்புகளில் பொது அறிவுசார் விளக்கங் களும் விவரங்கள் அடங்கிய பல்வேறு திசைசார் படங்களும் குறிப்புக்களும் தரப்பட் டுள்ளன.

இந்த நூல் பரீட்சையை நோக்காகக் கொண்டமைவதால் நூலின் தேவையும், தேடலும் மாணவர்களுக்குப் பயன்தரும் எனலாம். இருப்பினும் பொது அறிவில் தம்மை புலமைபெறச் செய்யும் ஆர்வம்மிக்கோர் யாவரை யும் விரும்பி வாசித்தறியச் செய்யும் வகையில் அதன் அமைப்பு சிறப்பாக உள்ளது. இது ஒரு சிவகாமி பதிப்பக வெளியீடாகும்.

## ஒட்டுண்ணிகள்

சீன நாட்டு ஈயாற்றங்கரையில் ஒரு மலை, மலை மீது ஓர் அழகிய சமாதி; யாழ்.வடிவத்தில். உள்ளே உறங்கிக் கொண்டி ருப்பதும் ஒரு யாழ்தான். உணர்வு விரல்கள் மீட்டும் போதெல் லாம் இனிய பாடல்களை இசைத்துக் கொண்டிருந்த யாழ். கவிஞர் பாய் ஜுயி.

சீனர்களைப் பாராட்டத்தான் வேண்டும். கவிஞனின் மர ணத்தையும் அழகாக்கி விட்டார்கள். பழங்காலத்திலிருந்தே கவிதைக்கும் கவிஞனுக்கும் மதிப்பும் மரியாதையும் தருகிற இனம் சீன இனம்.

பாய் ஜுயி டாங் பரம்பரையினர் ஆட்சிக் காலத்தில் (618-907) வாழ்ந்திருந்த பெருங் கவிஞர். அவர் கவிஞர் மட்டும் அல்லர்; அரச உயர் அதிகாரியாக மாநில ஆளுநராகப் பணி யாற்றியவர். ஆனால் வித்தியாசமான அதிகாரி. பதவியில் தொற் றிக் கொண்டிருப்பதற்காக மானத்தையும் மனச் சாட்சியையும் அவர் அடகு வைத்ததில்லை. தம் எழுத்தைக் கற்பழிப்ப தில்லை.

அரசனுக்கு அவர் ஆலவட்டமாக இருந்ததில்லை. மக்களின் புழுக்கத்துக்கு விசிறியாகவே இருந்தார். காரணம் அவருடைய கவிதை உள்ளம்.

இத்தகைய அதிகாரியைச் சும்மா விட்டுவைப்பார்களா? அரசனின் அடிவருடிகள் சூழ்ச்சி செய்தார்கள். பாய் ஜுயி பதவி பறிபோயிற்று; நாடு கடத்தப்பட்டார்.

சாட்டப்பட்ட குற்றம் என்ன தெரியுமா? ஜுயியின் தாய் ஒரு முறை பூக்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது கிணற்றில் தவறி வீழ்ந்து இறந்துவிட்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் 'மலர்களை வியந்து, 'புதுக்கிணறு' என்று இரு கவிதைகளை எழுதினார் ஜுயி. இந்தக் கவிதைகள் தாய்ப் பாசம் என்ற சமூகத்தின் மரபான பண்பாட்டை அவமதிக்கின்றன என்று ஜுயியின் பகைவர்கள் அரசனிடம் குற்றம் சாட்டினார்கள்.

சீனக் கவிதை பொதுவாகவே எளிமையானது; கிராமத்துப் புன்னகையைப் போல அணி அலங்கார ஒப்பனைகள், ஆரவாரச் சொற் கும்பல் இவையெல்லாம் இருப்பதில்லை. ஜுயியின் கவிதைகளும் இந்த எளிமை அழகில் மலர்ந்து மணம் வீசுகின்றன.

பாய் ஜுயி தாம் புனைந்த கவிதைகளை யாராவது ஒரு கிழட்டுக் குடியானவப் பெண்ணிடம் பாடிக் காட்டுவாராம். அவள் அந்தக் கவிதைகளைப் புரிந்து கொண்டால்தான் எழுதி வைப்பாராம். அதனாலேயே அவருக்கு 'மக்கள் கலைஞர்' என்று பட்டம் சூட்டப்பட்டது.

இன்றைக்கும் சீனத்துப் பள்ளிப் பிள்ளைகள் அவருடைய 'கரி வியாபாரி' என்ற பாடலை உற்சாகத்தோடு பாடுகிறார்கள்.

அரச அதிகாரியாக இருந்தும் அரசின் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஏழைகளைப் பற்றிப் பாடுவதையே அவர் மிக வும் விரும்பினார். ஆளும் வர்க்கத்துக்கு மக்களின் குறைகளைத் தெரிவிப்பதே கவிதையின் அடிப்படைப் பணி என்பது ஜுயியின் கொள்கை.

நம் நாட்டில் ஒரு கதை உண்டு. ஒரு மன்னனும் மந்திரி யும் உலாவப் போனார்கள். வழியில் ஒரு மாடு. 'மந்திரி; இந்தப் பசு ஒரு குடம் பால் கறக்கும் போலிருக்கிறதே' என்றான் மன் னன். அரசே! இது ஒரு குடம்தான் கறக்கிறது; எப்படி உங்க ளால் சரியாகச் சொல்ல முடிகிறது' என்று குழையடித்தான் மந்திரி.

மன்னனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம். குனிந்து பார்த் தான். 'மந்திரி! இது பசு இல்லை; காளை' என்றான். மந்திரி உடனே, 'அரசே ! உங்களுக்குத் தான் எவ்வளவு அறிவு; இது காளை என்று உங்களைப் போல் யார் அறிந்து சொல்ல முடியும்' என்றான் மந்திரி. இந்த அழகில்தான் பல அரசாங்கங்கள் நடக்கின்றன.

ஓர் அரசாங்கத்துக்குக் கண்ணும், காதும், கையுமாகச் செயல் படுகிறவர்கள் அமைச்சர்களும், அதிகாரிகளும்தான். பல அரசாங்கங்கள் குருடாகி, செவிடாகி, முடமாகிப் போனதற்குக் காரணம் இந்தத் திருக்கூட்டம்தான்.

'வரும் பொருள் உரைத்தல் மந்திரிக்கு அழகு' என்பது பழ மொழி. வரம்பொருள் வாங்குதல் மந்திரிக்கு அழகு என்பது புது மொழி. இடித்துரைப்பது என்பது மந்திரிகளுக்குப் பழைய இலக் கணம். 'இந்திரனே, சந்திரனே!' என்று துதி பாடுவது புதிய இலக் கணம். இத்தகைய அண்டிப் பிழைக்கும் ஒட்டுண்ணிகளால் தான் பல அரச மரங்கள் சாய்ந்தி ருக்கின்றன; சாய்ந்து கொண்டி ருக்கின்றன.

மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு என்று இப்போது பேசுகி றோம். பழஞ் சீனத்தில் இதற்கு ஒரு முறையைக் கடைப் பிடித்தார்கள்.

மக்கள் அவ்வப்போது புனைந்து பாடும் நாட்டுப்புறப் பாடல்களைத் திரட்டுவதற்கென்றே அரசாங்கம் தனி அதி காரிகளை அமர்த்தியிருந்தார்கள். அவர்கள் ஊர் ஊராகச் சென்று பாடல்களைத் திரட்டி அரசனுக்கு அனுப்பி வைப் பார்கள். இந்தப் பாடல்கள் மக்கள் மனங்களின் கண்ணாடிகள். ஆகையால் மன்னன் இவற்றிலிருந்து தன் நாட்டின் நிலை மையைச் சரியாகப் புரிந்து கொண்டு தக்க நடவடிக்கை எடுப் பான்.

ஆனால் இந்த நல்ல முறை ஸெள என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தோடு நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பாய் ஜுயி ஒரு கவிதையில் வருத்தத்தோடு குறிப்பிடுகிறார்.

அப்துல் ரகுமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமையாகாதே... அடிமையாக்காதே!

கண் விழித்துப் படிக்கும் அருமைப் பிள்ளைக்குக் தேநீர் கோப்பையைக் கையில் கொடுத்துவிட்டு, தேநீர் குடித்ததும் கோப்பையைக் கையில் வாங்கிப் போகும் பெற்றோர்கள் எதிர்காலத் தலைமுறையை உருவாக்குகிறார்களா? உருக்குலைக்கிறார்களா? என்றால், உருக்குலைக்கிறார்கள் என்பதே சரியான கருத்து.

தன் வேலைகளைத் தானே பார்க்காதவனே தலைவன், மேலாளர், மேம்பட்டவன், மேஸ்திரி என்கிற அபிப்பிராயம் அடிமைப்புத்தி ஒவ்வொருவரின் பலவீனம். வளர்ந்த நாடுகளில் இந்த அடிமைத் தனம் இல்லை. முன்னேறிய நாடுகளின் விடுதி அறைகளில் தவறாமல் 'காபி மேக்கர்' இருக்கும். அவரவர் காலைத் தேநீரைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். தனக்கான தேநீரைத் தயாரிப்பது போன்றே தனக்கான வாழ்க்கையையும் அவர் அவரே அழைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அங்கே இருக்கிறது.

அளவுக்கு மேல் பிறரைச் சார்ந்திருக்கும் அடிமைத்தனத்தை விட்டு வெளியே வர வேண்டும். அடிமையாய் இருப்பதில் பலருக்கு ஏனோ ஆனந்தம் இருக்கிறது. இல்லை என்றால் ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'' என்றும், ''என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'' என்றும் பாரதி கொதித்துப் போய்ப் பாடியிருப்பானா? அடிமை மோகம்... அடிமை மோகம். பலரின் சாபக்கேடு.

ஒருமுறை மதுரையிலிருந்து ரயிலில் வரும் சமயம், ஒரு 'சுயமரியாதை' மனிதர் அதே ரயிலில் பயணம் செய்தார். முதல் வகுப்புப் பெட்டியில் எனக்கு அடுத்த பிரிவில் இருந்த அந்தத் தலைவருக்கு சொகுசுப் பெட்டியில் இடம் கிடைத்ததாகத் தகவல் தரப்பட்டது. தனது மெல்லிய துண்டை மட்டும் சுமந்தபடி இறங்கி, அடுத்த பெட்டியில் அந்தத் தலைவர் ஏறினார். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த 'சுயமரியாதை' தொண்டர்கள் தொண்டை கிழிய அடிவயிற்றில் இருந்து ''வாழ்க'' என்று கோஷம் போட்டார்கள். அவரது கைப்பையில் இருந்து, புத்தகக்கட்டுகள் வரை, தொண்டர் படையால் ரயிலின் அடுத்த பெட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டன. தலைவர்கள் தங்களது எந்தச் சுமையையும் தாங்கள் சுமக்கக் கூடாது என்கிற அடிமைப்புத்தி அங்கே ஒளிவீசியது.

கொஞ்சம் யோசியுங்கள்... ஒரு தனிமனிதனின் வருகைக்கும் வழி அனுப்புதலுக்கும் நூற்றுக்கணக்கான தனிமனிதர்கள், அதுவும் இளைஞர்கள் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிக் காத்திருக்க வேண்டுமா? இதுதான் பகுத்தறிவா...? வேலைவெட்டி இருந்தால் இளைஞர்கள் இப்படி நேரத்தை வீணாக்குவார்களா? எங்கே போனாலும் பாழாய்ப்போன சாமியார்கள், சமயத் தலைவர்கள் தங்களுக்கு ஜே...ஜே போட, ஜெய... ஜெய பாட இப்படி ஒரு வெட்டிக் கூட்டத்தைக் கூட்டுவதை சகிக்கவே முடியவில்லை. அவர்களாவது சிந்திக்காத, சிந்திக்கவிடாத சமயவாதிகள். இதைக் கண்டித்து எழுந்த -மக்களைத் திருத்தப் பிறந்த- பகுத்தறிவுச் சிங்கங்களும் இந்தப் பாழாய்ப்போன வெட்டிவேலையில் வெட்கமின்றி இளைஞர்களை ஈடுபடுத்துவது சகிக்கும்படியாகவா இருக்கிறது?

என் இனிய நண்பர்களே...! எந்தத் தலைவனுக்கும் ஜே போடாதீர்கள், பெட்டி தூக்காதீர்கள். அடிமைகளாகிச் சுயமரியாதையை இழக்காதீர்கள். சமயத் தலைவர்கள் கடவுளின் பெயரால் சிந்திக்காத அடிமைகளை உண்டாக்கினார்கள். பகுத்தறிவுவாதிகளும் இயக்கங்கள் பெயரால் சிந்திக்காத அடிமைகளை இன்று உருவாக்குகிறார்கள்.

பிறருக்கு அடிமையாகும் நிலையை வெறுக்கிறேன். பிறரை அடிமையாக்கும் தலைமையை அறவே வெறுக்கிறேன். பிறருக்கு அடிமையாவது தவறு. பிறரை அடிமையாக்குவது பெரும் தவறு.


ஜோர்ஜ் வொஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி. அவர் தலைமையில் அமெரிக்காவில் போர் நடந்து கொண்டிருந்த சமயம், பத்துப் பதினைந்து போர் வீரர்கள் ஓர் உத்திரத்தைப் படாதபாடுபட்டு நகர்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குழுவின் தலைவன் குதிரையில் அமர்ந்தபடி அவர்களை அதட்டி உருட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு அந்த உத்திரத்தை நகர்த்த முடியாதபடி அதிக சிரமப்பட்டார்கள். வேகமாக அதட்டினான் அந்தக் குழுவின் தலைவன்.

அப்போது அங்கு குதிரையில் வந்த வீரன் ஒருவன் தலைவனைப் பார்த்து, 'அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே... நீயும் அவர்களோடு சேர்ந்து அதை நகர்த்தக் கூடாதா?' என்று கேட்டான். குழுத் தலைவன், ''நான் யார் தெரியுமா? அவர்களின் தலைவன் ... அவர்களோடு சமமாக நான் வேலை செய்ய முடியுமா?'' என்று உறுமினான்.

குதிரையில் வந்தவன் இறங்கி, வீரர்களுக்கு உதவி, உத்திரத்தை நகர்த்தி அதன் இடத்தில் வைத்திவிட்டுப் பிறகு தனது குதிரையில் ஏறி அமர்ந்தான். அந்தக் குழுவின் தலைவனைப் பார்த்து, ''இனி இப்படி கடினமான வேலை ஏதாவது இருந்தால் எனக்குச் சொல்லி அனுப்புங்கள். அவசியம் நான் வந்து உதவுகிறேன்'' என்று உரக்கச் சொன்னான்.

''நீ யார்? உனக்கு எப்படிச் சொல்லி அனுப்புவது? உன் இருப்பிடம் எது?'' என்று அலட்சியமாகக் குழுத் தலைவன் கேட்டான். ''நானா...நான் ஜோர்ஜ் வொஷிங்டன். உங்கள் தலைமைத் தளபதி'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுக் குதிரையைத் தூண்டிச் சிட்டாய்ப் பறந்தார். அந்த நாட்டு வெற்றியின் ரகசியம் புரிகிறதா?

அடிமையாக ஆசைப்படும் மக்கள் நிலைமை அபத்தமானது! அடிமையாக்க ஆசைப்படும் சுயநலத் தலைமை ஆபத்தானது! சுயமரியாதையுடன் வாழுங்கள். கௌரவம் நிச்சயம்... கௌரவமான வெற்றி சர்வ நிச்சயம்!



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## ஆன்மிகத்தின் உண்மை அறிவீரா?

பாடசாலைகளில் சமயப் பாடம் கற்பிக்க எவரும் விருப்பத்தோடு முன்வருவதில்லை. இதற்கு காரணம் ஏனைய பாடத்துறைகளுக்கு கொடுக்கப்படும் மதிப்பு, மரியாதை, கௌரவம் சமய பாடத்துக்கு கொடுக்கப்படுவதில்லை என்பதாகும். இதனால் சமயம் படிப்பிப்பதை தரக்குறைவாக நினைத்து சமயத்தை கற்பிப்பதற்கு பின்வாங்குகிறார்கள். இதுமட்டுமல்ல பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகளுக்கு நேர ஒதுக்கீடு செய்கிறார்கள். அதாவது இல்ல விளையாட்டுப் போட்டி, மாகாண வலய விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி. ஆங்கிலதினப் போட்டி, முத்தமிழ் விழா, பரிசளிப்பு விழா இப்படி எத்தனையோ விழாக்கள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு பல்வேறுபட்டவர்களின் பாராட்டுக்களையும் பெறுகிறார்கள். மாணவர்களின் புறவிதானச் செயற்பாடுகளுக்கு இவை அத்தனையும் தேவைதான். இதை யாரும் மறுப்பதற்கில்லை ஆனால் வருடத்தில் வரும் ஓரிரு சமய நிகழ்வுகளுக்கு நேர ஒதுக்கீடு செய்யும் போது, அதிகாரிகள் பின்வாங்குகிறார்கள்.

மாணவரின் கல்வி முக்கியமானது. பாடசாலை நேரம் முக்கியமானது என்கிறார்கள். இத்தனை கொண்டாட்டங்களுக்கும் நேர ஒதுக்கீடு செய்யும் அதிகாரிகள், ஆன்மிக நிகழ்வுகளுக்கு நேர ஒதுக்கீடு செய்ய தயக்கம் காட்டுவது ஏன்? இன்னும் சில பாடசாலைகளில் சில ஆன்மிக நிகழ்வுகள் கடமைக்காக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இடம் பெறுவதையும் காணமுடிகிறது.

அது மட்டுமல்ல சில இடங்களில் சில ஆன்மிக விழாக்கள் பலரும் பாராட்டக் கூடிய முறையில் இடம்பெறும். ஆனால் அங்கு நடைபெறும் நிகழ்வுகளுக்கும் அந்த விழாவுக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்காது. பாராட்டுக் கிடைத்தால் போதும் விழாவின் சிறப்புத் தேவையில்லை என்ற அளவுக்கு இன்று சில இடங்களில் நடைமுறை வந்து விட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் பாராட்டு நிச்சயம் தேவையான ஒன்று. ஒவ்வொரு பாராட்டும் ஒரு மனிதனின் உயர்வுக்கு ஏணிப்படியாகிறது. அதற்காக குறுக்கு வழியில் இவற்றைப் பெற நினைப்பது மாறானதாகும். எனவே பாராட்டைப் பெறுவதற்காக மட்டும் ஆன்மிக விழாக்களை ஆடம்பரமாக்காமல், ஆன்மிக விழுமியத்துடன் விழாக்களை நடத்திப் பாராட்டைப் பெறுவோம். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். பிஞ்சு மனங்களில் நல்ல ஆன்மிகப் பண்புகளை விதைத்து நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நீதியுடன் செயற்பட முன்வருவோம்.

இ.பிரான்சிஸ்கா
கொடிகாமம்

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு கோயில்கள் உதவ முன்வரவேண்டும்

கடந்த 25 ஆம் திகதி உதயன் வார வெளியீட்டின் 15 ஆம் பக்கத்தில் கொழும்பில் இருந்து வந்த நிபுணர் குழுவின் உதவியுடன் இதய நோயாளர் 13 பேருக்கு நிரந்தர சிகிச்சை: 32 வருடங்களின் பின்னர் வால்பு சுருக்கத்துக்கு தீர்வு என்ற தலைப்பிலான தகவல்கள் அனைத்தும் அறிந்து உண்மையில் மகிழ்சியடைந்தேன்.

இந்த வைத்தியப் பிரிவானது யாழ். போதனா வைத்தியசாலையில் தனியார் வைத்திய சேவைக்கு நிகராக சகல வசதிகள் வாய்ப்புக்களுடன் இலவசமாக ஹென்றி ஞாபகார்த்த இதய சிகிச்சைப் பிரிவால் நடத்தப்பட்டு வருவது வர வேற்க கூடிய ஒன்று . அதிலும் 32 வருடங்களின் பின் இதய வால்பு சிகிச்சை செய்வதற்காக இவ்வாறான ஒரு தீர்வு கிடைத்துள்ளமை எல்லோரும் பெருமைப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

தொடர்ந்தும் இச்சேவையானது யாழ்ப்பாணத்திலே வெற்றிகரமாக நடைபெற வேண்டும். வைத்திய நிபுணர்களின் பங்களிப்பு மட்டுமல்ல அரச உதவிகள் மட்டுமல்ல, வெளிநாட்டு உதவிகள் மட்டுமல்ல, இங்கு உள்ள தனவந்தர்களும் வெறும் பெயருக்கும் புகழுக்குமாக செலவு செய்வதை விட்டு. வசதி குறைந்த மக்களின் வைத்திய தேவைக்காக தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை இந்த இதய சிகிச்சைப் பிரிவுக்கு வழங்க முன்வர வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆலயங்கள் இச் சிகிச்சைப் பிரிவுக்கு உதவ முன்வர வேண்டும். இற்றைக்கு யாழ். குடாநாட்டில் 2,700 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களும் 1,000க்கும் மேற்பட்ட கத்தோலிக்க ஆலயங்களும் 10 இற்க்கும் மேற்பட்ட பள்ளி வாசல்களும் இருக்கின்ற போதிலும் கத் தோலிக்க ஆலயங்களும் இஸ்லாமிய மக்க ளின் பள்ளிவாசல்களும் என்றைக்கும் வசதி குறைந்த மக்களின் வாழ்வாதார நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன.

ஆனால் இந்து மத ஆலயங்கள் ஆண்டவனின் பெயரால் மக்களிடம் இருந்து பெருந்தொகையான பணத்தைக் காணிக்கையாகப் பெறுகிறார்கள். இந்தப் கோடிக்கணக்கான பணம் எங்கே போகிறது. கோயில் கட்டுவதற்கும் வானுயரக் கோபுரம் கட்டுவதற்கும் தேர்கள் செய்து சப்பறம் கட்டி திருவிழாக்கள் செய்து மேளக்கச்சேரிகள். பாட்டுக்கச்சேரிகள் செய்வதற்கும் ஆலயத்துக்கு மாறி மாறி வர்ணம் தீட்டுவதற்குமே விடப்படுகிறது.

இங்கே ஒரு சில ஆலயங்கள் மட்டுமே மக்களுக்கு சேவை செய்து வருகின்றன இது மட்டுமல்லாமல் வன்னிப் பிரதேசத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க பல ஆலயங்கள் இருந்தும் அவர்கள் வருடா வருடம் பெருமளவு பணத்தை இறைவன் பெயரால் பெறுகிறார்கள் ஆனால் மக்களுக்கு ஏதாவது சேவை செய்ய முன்வருவதில்லை.

ஆகவே இந்த இந்துமத ஆலயங்கள் மட்டுமே மக்களிடம் இருந்து பெரும் தொகையான பணத்தில் ஒரு பகுதியையாவது வசதி குறைந்த மக்க ளின் மருத்துவ தேவைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் இதய நோய் சத்திர சிகிச்சை பிரிவுக்கு வழங்க முன்வர வேண்டும் என அன்பாக வேண்டுகின்றோம்.

வே.ம.இந்திரநாதன்

## ஒளிருமா மின்குமிழ்

யாழ்.நகரின் நடுநாயகமாக விளங்கும் அடைக்கல அன்னை ஆலயத்தின் அண்மையாக 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருக்களை இணைக்கும் ஓ.எல்.ஆர் அவனியு என்று பெயரிடப்பட்ட ஒழுங்கையின் மத்தியில் உள்ள மின் கம்பத்தில் ஒரு மின் குமிழைப் பொருத்தினால் இரவு வேளைகளில் அந்த வழியால் செல்பவர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

இரவு வேளைகளில் அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் முட்டி மோதாமல், செல்வதற்கும் மற்றும் மாலை வேளைகளில், ஆலயம் சென்று வழிபட்டு வருவதற்கும் உதவியாக இருக்கும்.

காலம் தாழ்த்தாது எனது கோரிக்கையைத் தனியொருவரின் கோரிக்கை என்று எண்ணாமல் பலரின் கோரிக்கையாக ஏற்று ஆவன செய்யும் படி மாநகர சபைக்கு பல கடிதங்கள் போட்டேன். இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே இனியும் காலம் தாழ்த்தாது இந்த விடயத்தில் அக்கறை எடுத்து அந்த வீதிக்கு ஒளியைக் கொடுங்களேன்!

ஜே.ஜே.எ.யோகரெட்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சென்று அழகுடன் திகழ....

அழகு குறிப்புகள் எவ்வளவோ சொன்னாலும் கேட்டுக் கொண்டேயிருப்பது நம் பெண்களின் குணம். ஆனால் செயல்முறைப்படுத்துவது ஒரு சிலரே. அதற்கு பல காரணங்கள் உண்டு. குடும்பம், சூழ்நிலை, பொருளாதாரம், நேரமின்மை.... இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். எளிய முறையில், சிக்கனமாக(நேரத்திலும்தான்) செய்ய கூடிய டிப்ஸ் தான் இதோ....

* தினந்தோறும் குறைந்தது 2 லீற்றரிலிருந்து 3 லீற்றர் வரை தண்ணீர் பருகுங்கள்.

* பீட்ரூட் சாற்றினை முகத்தில் தேய்த்து 15 நிமிடம் கழித்து தண்ணீரால் கழுவுங்கள். முகம் பொலிவு பெறும்.

* பன்னீரும், சந்தனத் தூளும் கலந்த கலவையில் 5 துளி பால் சேர்த்து முகத்திலும் உடம்பிலும் தேய்த்



துக் கொள்ளுங்கள். 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான வெந்நீரில் குளிக்க, முகமும் தேகமும் பளபளப்பாகும்.

* எலுமிச்சை சாறுடன் சிறிது சூடான தேன் கலந்து முகத்தில் தடவி அது உலர்ந்தபின் முகம் கழுவுங்கள். முகம் வனப்புப் பெறும்.

* மஞ்சள்தூளும், சந்தனத்தூளும் ஒலிவ் எண்ணையில் கலந்து உடம்பில் தேய்த்து 10 நிமிடம் கழித்துக் குளிக்க, முகமும், தேகமும் மினுமினுக்கும்.

* உங்கள் சருமம் உலராமல் பளபளப்புடன் திகழ, தினமும் சிறிதளவு பசும்பாலை உடல் முழுக்க தேய்த்து விட்டு பின்பு குளியுங்கள்.

* பணிபுரியும் இடம் குளிர்சாதன வசதியுடன் இருந்தால் சருமத்திற்கு நல்லது.

* வெந்நீரைவிட சாதாரண தண்ணீரில் குளிப்பது நல்லது. குளித்தபின் துணியால் அழுத்தித் துடைக்காமல் மென்மையாக ஒற்றி துடைப்பது சருமத்திற்கு பாதுகாப்பு.

* தோல் பளபளப்பாக இருக்க விற்றமின் 'ஏ' மற்றும் விற்றமின் 'சி' நிறைந்த உணவு வகைகளை உட்கொள்ளுங்கள்.

* கொதிக்க வைத்த கரட் சாறினை முகத்திலும், உடம்பிலும் தேய்த்துக் குளிக்க, முகமும், தேகமும் பளபளப்பாகும்.

* பாலில் எலுமிச்சை சாறு கலந்து உடம்பில் தேய்த்துக் குளிக்க, முகமும் தேகமும் பளிச்சிடும்.

* மஞ்சள்தூள் மற்றும் பாலாடை கலந்த கலவையை உடம்பில் தேய்த்துக் குளிக்க, உடல் பொலிவுடன் பிரகாசிக்கும்.

* பச்சைப் பயறு மா மற்றும் பாலாடை கலந்த கலவையை உடம்பில் தேய்த்துக் குளிக்க, உடல் பளபளப்பாகும்.

* ரோஜா இதழ்களைக் கூழாக அரைத்து அத்துடன் பாலாடை சேர்த்து அந்தக் கலவையை கண், இமை, உதடு தவிர்த்து மற்ற இடங்களில் தேய்த்து 10 நிமிடங்கள் கழித்து குளிக்க உடம்பு புதுப்பொலிவு பெறும்.

* தயிரும், கோதுமை மாவும் சேர்ந்த கலவையை உடம்பில் தேய்த்து 5 நிமிடம் கழித்து குளிக்க தேகம் புத்துணர்ச்சி பெறும்.

* வெயிலில் நடப்பது மேனி அழகைக் கெடுக்கும். இதைத் தடுக்க வெள்ளரிச்சாறும், தக்காளிச் சாறும் சம அளவில் கலந்து உடம்பில் தேய்த்துக் குளித்தால் தோல் நிறம் மங்காமல் மின்னிப் பிரகாசிக்கும்.

* புளோரின் சத்து நிறைந்த ஆட்டுப்பால், பாலாடைக்கட்டி, கரட், வெள்ளரி, கோவா போன்றவற்றை சாப்பிடுவதால் சருமம் வனப் புடன் திகழும்.

* சோடியம் சத்துக் குறைந்தால் தோலில் சுருக்கம் ஏற்படும். வெயில்காலத்தில் சோடியம் சத்து மிகுந்த வெள்ளரிப்பழம் சாப்பிட்டு வந்தால் தோல் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம். இது உடல் சூட்டையும் தணித்து குளிர்மையைத் தரும்.

* சிலிக்கன் சத்து குறையும்போது உடலில் வேனற்கட்டி, வெடிப்பு, சிரங்கு போன்ற பாதிப்புகள் தோன்றும். இதைத் தவிர்க்க முளை கட்டிய தானியங்கள், தக்காளி, பார்லி மற்றும் ஸ்ட்ராபெரி, அத்திப்பழ வகைகளைச் சாப்பிட்டுவர வேண்டும்.

* பச்சயம் சத்து நிறைந்த கோதுமைக் கஞ்சி, பச்சைக்கீரை, காய்கறி வகைகளைச் சாப்பிட்டு வர, தோல் வெடிப்புகள் ஏற்படாது. சருமம் நிறம் மங்காமல் செழுமையுடன் இருக்கும்.

# கோடையில் குளு குளு என்றிருக்க தர்ப்பூசணி



தாகத்தை தீர்க்கும் தர்பூசணி உடலுக்கு ரொம்ப நல்லது. அதிக வேலைப்பளு உள்ளவர்கள் தர்பூசணி நாலு துண்டு சாப்பிட்டாலும் வயிறு ஊதிவிடும் பசியே எடுக்காது.

*தர்ப்பூசனி ஜூஸ் தயாரிக்கும் முறை*

**தேவையான பொருள்கள்:** தர்பூசணி துண்டுகள் - 4, சீனி அல்லது தேன் - சிறிதளவு, மிளகு தூள் - ஒரு சிட்டிகை, சுக்கு தூள் - 1/4 தேக்கரண்டி, உப்பு - அரை சிட்டிகை, ஐஸ் கியுப்ஸ் - 6

செய்முறை: நான்கு துண்டு தர்பூசணி எடுத்துக் கொள்ளவும். பழத்தைக் கழுவி, அதில் உள்ள விதைகளை நீக்கி விட்டு, துண்டுகளாக அரியவும்.

மிக்சியில் ஐஸ் கியுப்ஸ், சீனி, உப்பு, மிளகு தூள், சுக்கு தூள், பழம் அனைத்தையும் போட்டு நன்கு அடித்து வடிகட்டியில் வடித்துக் குடிக்கவும்.

இதைக் குடித்த பின் ஒரு புத்துணர்வு கிடைக்கும். உடலும் குளிர்ந்து விடும்.

தர்பூசணி நல்ல ஒரு நீராகாரம், தாகத்தை தணிக்கும். இனிப்பில்லாத தர்பூசணி பழத்தை சிறிதாக வெட்டி அதில் சீனி சேர்த்து குளிர வைத்து குடித்தாலும் நல்லா இருக்கும்.

இதில் பால் சேர்த்தும் ஜூஸ் தயாரிக்கலாம் பால் சேர்க்கும் போது ஐஸ் கட்டி, சீனி மட்டும் போதும். மாதுளை சேர்த்தும் குடிக்கலாம்.

இதன் தோலை வீணாக்காமல் சாம்பார் வைக்கலாம். தர்பூசணி முழுவதையும் தோலிலிருந்து வெட்டி எடுக்க முடியாது அதற்கு ஒரு மேசைக் கரண்டி கொண்டு வழித்தெடுத்தால் சுலபமாக எடுக்கலாம்.

தர்பூசணியை வெட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் தண்ணீர் அதிகமாக விடும், அது இறுக்கமாக இருக்க, வெட்டியதும் குளிர்சாதனப் பெட்டியில் சிறிது நேரம் வைத்து எடுத்தால் தண்ணீர் விடாமல் இறுக்கமாக இருக்கும்.

# குதிக்கால் செருப்பு அணிபவர்கள் கவனிக்கவேண்டியவை

குதிக்கால் செருப்புகள் பெண்களுக்கு கம்பீரமான தோற்றத்தைக் கொடுக்கின்றன! இதனால், குட்டையான பெண்கள் தங்களுக்கு உயரமும் கம்பீரமான தோற்றமும் கிடைக்க உயரமான குதிக்கால் செருப்புகளைத் தேடி அதிகவிலை கொடுத்து வாங்கி அணிகிறார்கள். அப்போது அசௌகரியம் மற்றும் ஆரோக்கிய சீர்கேடுகளையும் சந்திக்கிறார்கள்.

* குதிக்கால் செருப்பணியும் 50 சதவீத பெண்கள் காலில் சுளுக்குடனும், குதிக்கால் வலியுடனும் அவதிப்படுவதுண்டு.

* குதிக்காலின் பின்பக்கம் சிலருக்கு சிவந்து வீங்கி யிருக்கும். அவர்களது காயம் வெளியே தெரியாமல் குதிக்காலின் உள்ளெலும்பில் கீறலோ அல்லது முறிவோ ஏற்பட்டிருக்கலாம்.

* இயல்பு நிலை பாதிக்கும் வண்ணம் குதிக்கால் நரம்பு விண்விண்ணெனத் கொதிக்கிற மாதிரி 'நியுரோமா' எனப்படும் கடுமையான வலி ஏற்படலாம்.

* குதிக்கால் செருப்புகளை நீண்டநேரம் அணியும் போது குதிகால் தசைநார்கள் சுருங்கிப் போகும். அதிக உயரமான குதிக்கால் செருப்புகளை நீண்டநேரம் அணியும் போது முதுகுத் தண்டில் விரிசல் ஏற்பட்டு அதிக அழுத்தம் ஏற்படுவதுடன், முழங்கால் மூட்டு வலியும் ஏற்படும்.

**குதிக்கால் செருப்புக்ளை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை**

* உங்கள் கால் அளவை சரியாகத் தெரிந்து கொண்டு அதற்குப் பொருத்தமான அதிக உயரமில்லாத குதிகால் செருப்புகளைத் தேர்ந்தெடுங்கள். பிரபலமான நிறுவனப் பெயர் மற்றும் செருப்பின் புற அழகில் மயங்கி உங்கள் கால் அளவிற்குப் பொருந்தாத குதிகால் செருப்புகளை ஒருபோதும் வாங்காதீர்கள்.

* நீங்கள் அதிக உயரமாக தெரிய வேண்டும் என்று அளவுக்கு மீறிய 6 அங்குல உயரமுள்ள குதிகால் செருப்புகளை வாங்காதீர்கள். மிக உயரமான குதிகால் செருப்புகளே அதிக பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

* 2 அங்குல உயரம் கொண்ட குட்டையான குதிகால் செருப்புகளே ஆபத்தில்லாதவை, பாதுகாப்பானவை.



* குதிக்கால் செருப்பின் உள்ளிருக்கும் 'சோல்' ரப்பரால் ஆனது தானா என்று பார்த்து வாங்குங்கள். ரப்பர் சோல்தான் கால் வழுக்காமல் சிரமமின்றி நடக்க பாதுகாப்பானதாக இருக்கும்.

* குதிக்கால் செருப்பின் அடிப்பாகம், மேற்பகுதி மற்றும் ஓரங்களின் 'லைனிங்' செயற்கையான வினைல் போன்ற சிந்தடிக் பைபரில் செய்யப்படாமல் இயற்கையான தோலினால் செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்கவேண்டும்.

* தோல் செருப்புகளே ஈரத்தை உறிஞ்சும் தன்மை கொண்டவை. அவைதான் காலிற்கு காற்றோட்டமாக அமைந்து பாதுகாப்பு தரும்.

* குதிக்கால் செருப்பின் முன்பகுதி மேற்புறம் முழு வதும் மூடியிராமல் ஆங்காங்கே காற்று புகும்படி திறந்த வெளியாக இருக்க வேண்டும்.

* அதிகநேரம் குதிக்கால் செருப்பணியாமல், குறைந்த நேரம் மட்டுமே உபயோகப்படுத்துங்கள். அழகைவிட பாதுகாப்பான உடல் ஆரோக்கியம் முக்கியம் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

* குதிக்கால் செருப்பு காலில் நன்றாகப் பொருந்தும் வண்ணம் வடிவமைப்பு பெற்றிருக்க வேண்டும் அதுவே ஆரோக்கியமானது.

**நடக்கும்போது கவனிக்க வேண்டியவை:**

* குதிக்கால் செருப்பணிந்தவர்கள் நடக்கும் போது குதிரை நடக்கும் குளம்பொலி சத்தம்போல் கேட்கும். பொருத்தமான குதிகால் செருப்பணிந்த பெண்கள் நடனம் கூட ஆடலாம். ஆனால் பழக்கமில்லாத சில பெண்கள் குதிகால் செருப்புடன் நடப்பதற்குச் சிரமப்படுவர். இத்தகைய பெண்கள் நடப்பதற்கு பயிற்சி எடுக்க வேண்டும்.

* கைகளை முன்னும் பின்னும் நீட்டியசைத்து உடல் எடையைச் சமநிலை செய்துவிட்டு நடந்து பழக வேண்டும்.

* குதிக்கால் செருப்பணிந்தவர்கள் கால்களை எட்டி நடக்காமல் குறுகிய இடைவெளியில் கால்களை எடுத்து வைக்க வேண்டும்.

* மாடிப்படி ஏறும்போது முன்னங்காலும் குதிகாலும் படியில் ஒன்றுபோல் சமமாகப் பதித்து ஏறவேண்டும்.

* மாடிப்படியில் இருந்து கீழிறங்கும்போது காலின் முற்பாதம் மட்டும் படியில் பதியும்படி கவனமாக நடந்து கீழிறங்க வேண்டும்.

* குதிக்கால் செருப்புடன் கார் ஓட்டும்போது கார் முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் வராது. எனவே குதிகால் செருப்புடன் கார் ஓட்டுவதைத் தவிர்த்தல் நல்லது.

* அதிகாலையில் குதிக்கால் செருப்பணிந்து நடக்கும்போது குதிக்கால் வீக்கம் ஏற்படும். இம்மாதிரி யான வீக்கம் ஏற்படாமலிருக்க குதிக்கால் செருப் பணிந்து நடந்தவர்கள் 45 டிகிரி கோணத்தில் காலை நீட்டி கீழே உட்கார்ந்து 10 அல்லது 15 நிமிடநேரம் ஓய்வு எடுத்தல் அவசியம். இப்படி ஓய்வெடுக்கும் போது கால்களிலிருந்து ரத்த ஓட்டம் பிற இடங்களுக்குப் பரவி வீக்கம் குறையும்.

* கால் பாதங்களில் வெந்நீரையும் தண்ணீரையும் மாற்றி மாற்றி ஊற்றிக் கழுவித் துடைத்துவிட்டால் குதிக்கால் வலியின்றிச் சுகமாக இருக்கும்.

* காலை நீட்டி கீழே உட்கார்ந்து சிறிய பந்தின் மேற்பகுதியில் கால் பாதங்களை அழுத்தி உருட்டுதல், சிறிய மாபிள்களை தரையில் போட்டு அவற்றை கால் பாதங்களின் முற்பகுதி விரல் இடுக்கில் அகப்படச் செய்து எடுத்தல் போன்றவை குதிக்கால் செருப்பு அணிபவர்களின் கால்களுக்கு நல்ல பயிற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org